அன்பளிப்பு

4394

ஸ்ரீ

# ஷண்முகன் மகிமை

## இரண்டாம் பாகம்.

29A1

மூன்று

அழகிய படங்களுடன்.

லால்குடி
இராமஸ்வாமி சாஸ்திரிகள் தௌஹித்திரனும்
கடம் ஸப்தரிஷி அய்யர் குமாரனும்
சென்னை ஜார்ஜ்டவுன்
ஸி. ஆர். ஸி. செகண்டரி ஸ்கூல் உபாத்தியாயருமான
எல். எஸ். விசுவநாத அய்யர்
இயற்றியது.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

குழந்தையும் தெய்வமும்
கொண்டாடுமிடத்தில்—பழமொழி

PRINTED BY
THE ARROW PRESS, MOUNT ROAD, MADRAS.
1922.

*All Rights Reserved.*

**Price As. 12.]** [விலை அணா 12.

# நூன்முகம்.

---

முருகன் துணை.

ஸ்ரீமான் L.S. விசுவநாதையரவர்களால் வடமொழி ஸ்காந்த புராணத்தைத் தழுவிச் சுருக்கமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் "ஷண்முகன்மகிமை" என்னும் புத்தகக் கையெழுத்துப் பிரதியைப் பற்பல இடங்களிற் படித்துப்பார்த்தேன்.

கலியுகவரதராகிய ஸ்ரீமுருகப் பெருமானுடைய லீலாவிநோதங்களை மகளிரும் இளைஞரும் எளிதிற் படித்துணரும் வண்ணம் எழுதித் தக்கவர்கள் உதவியைப்பெற்று வெளிப்படுத்த உத்தேசித்திருப்பது தெரிந்து ஆனந்தமடைந்தேன்.

இந்நூலாசிரியர்க்கு ஈசுவரபக்தியும் நற்குணநற்செய்கையும், ஸங்கீதப்பயிற்சியும் இயற்கையாக அமைந்துள்ளமையால் இவர்கள் எழுதியநூல் உலகிற்கு மிக்க பயன் தருமென்று நம்புகிறேன், இப்படிப்பட்ட நல் விஷயங்களில் இவர்களுக்குச் சிறிதும் தளர்ச்சியுண்டாகாவண்ணம் தமிழபிமானிகள் பாதுகாப்பார்களாக.

இங்ஙனம்,

P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர். } வே. துரைசாமி ஐயர், ,, தமிழ்ப் பண்டிதர்.

Mr. K. SUBRAHMANIAM, M.A., M.L.,

ADVOCATE

*Tagore Professor of Law*

*and*

*Professor, Law College, Madras.*

1/3, சோலையப்ப முதலி தெரு,
மயிலாப்பூர்,
13—8—1922.

பிரம்மஸ்ரீ லால்குடி விசுவநாத ஐயரவர்களுடைய "ஷண்முகன் மகிமை" என்னும் வசனநூலைப் பார்த்தேன். அது யார்க்கும் விளங்கக்கூடிய தெளிவான நடையில் எழுதப்பட்டுள்ளது. அது தன்னைக்கற்கும் சிறுவர்களுக்கு முருகப் பெருமானிடத்து அன்பை மிகுதியாகப்பெருக்கவல்லது. வடமொழியிலுள்ள சரித்திரத்தைத் தமிழில் எழுதுவதால் வடமொழிகள் அம்மொழிப்போக்கைத் தழுவி உபயோகிக்கப்பட்டுள்ளன. வருகின்ற பதிப்புகளில் அவற்றைத் தமிழ் முறைக்கேற்ப அமைக்க வேண்டுமென்பது ஆசிரியர் கருத்து. நல்ல அரிய கதையைத் தெளிவான நடையில் இந்நூல் கூறுவதால் யாவரும் இதனைப் போற்ற வேண்டுவது அவசியம்.

இங்ஙனம்,

K. சுப்பிரமணியன்.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

M. R. Ry.

A. THIRUVENKATATHA AIYANGAR AVL., B.A., L.T.,

*Headmaster C. R. C. High School;*

*Purasawalkam, Madras.*

I have seen Mr. L. S. Viswanatha Aiyar's Tamil publication called Shanmuga Mahimai. So far as I can Judge, the book is written in chaste Tamil. In my opinion, it will be a useful book in the hands of boys of schools where religious instruction forms part of the school curriculum.

Purasawalkam, 21-8-22. A. TIRUVENKATATAN, *Headmaster.*

அன்பளிப்பு

# முகவுரை.

இப்புத்தகம் எழுதுவதற்கு சங்கர சமுகிதையே முக்கிய ஆதாரமாயுள்ளது, இது ஸ்கந்தபுராணச் சுருக்கமே. இது பாலரும் மகளிரும் எளிதில் அறியும்படி சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது, இது உலகத்திற்கு மிக்க பயன் தருமென்று நம்புகிறேன்.

L. S. விசுவநாதன்.

# பொருளட்டவணை.

## ஸம்பவகாண்டம் தொடர்ச்சி.


| செ. | | பக்கம். |
|---|---|---|
| 1 | குகதாரக யுத்தம் ... ... | |
| 2 | அசுர விசாரணை .... ... | 9 |


## அசுர காண்டம்.


| | | |
|---|---|---|
| 3 | அசுர உற்பத்தி ... ... | 15 |
| 4 | வீரயாகம் ... ... | 17 |
| 5 | சூரனரசியலும் விவாகமும் ... ... | 18 |
| 6 | இல்வலன் வாதாபி உற்பத்தி ... ... | 20 |
| 7 | இந்திரன் சீர்காழியை யடைதல் ... | 21 |
| 8 | விந்திய கர்வபங்கம் .... | 22 |
| 9 | இல்வலன் வாதாபிவதம் ... ... | 25 |
| 10 | காவேரி நதி உற்பத்தி .... .... | 26 |
| 11 | பெருமரளைச் சிவலிங்கமாக்கியது ... | 27 |
| 12 | அஜாமுகி கர்வபங்கம் .... .... | 28 |
| 13 | சயந்தன் சிறை ... .... | 30 |


## வீரமயேந்திர காண்டம்


| | | |
|---|---|---|
| 14 | வீரபாகு சூரனிடம் செல்லல்... ... | 31 |
| 15 | சூரவீர ஸம்வாதம் ... ... | 37 |
| 16 | வீரன் ஷண்முகனிடம் திரும்பிவருதல்... | 40 |
| 17 | சூரன் மந்திராலோசனை ... ... | 45 |
| 18 | ஏமகூடத்துக்கு வருதல் ... ... | 54 |

## யுத்தகாண்டம்.


| ந. | | பக்கம். |
|---|---|---|
| 19 | பானுகோபன் முதல் நாள்யுத்தம் ... | 56 |
| 20 | சூரபதுமன் முதல் யுத்தம் ... ... | 60 |
| 21 | பானுகோபன் இரண்டாம் நாள் யுத்தம் ... | 67 |
| 22 | இரணியன் யுத்தம் ... ... | 68 |
| 23 | அக்கினி முகவதம் ... ... | 70 |
| 24 | வீரபாகு யமனுக்கு எழுதிய கடிதம் ... | 71 |
| 25 | மூவாயிர வசுரர் வதம் ... ... | 72 |
| 26 | தருமகோப வதம் ... ... | 73 |
| 27 | பானுகோபன் புத்திமதி ... ... | 75 |
| 28 | பானுகோபன் வதம் ... ... | 77 |
| 29 | சிங்கமுக வதம் ... ... | 80 |
| 30 | சூரஸம்மாரம் ... ... | 88 |


## தேவ காண்டம்.


| | | |
|---|---|---|
| 31 | தெய்வயானை பரிணயம் ... ... | 97 |
| 32 | முசுகுந்தர் சதை ... ... | 101 |
| 33 | வள்ளி கல்யாணம் ... ... | 109 |
| 34 | வள்ளியின் பூர்வசரிதம் ... ... | 114 |
| 35 | தோத்திரம் ... ... | 116 |


## சித்திரப் படங்கள்.


| | | |
|---|---|---|
| 1 | ஷண்முகன் | |
| 2 | காவேரி உற்பத்தி ... .... | 27 |
| 3 | சிங்கமுக வதம் ... ... | 88 |



ஷண்முகன்.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

உ

# ஷண்முகன் மகிமை.

## 2-வது பாகம்

### குகதாரக யுத்தம்.

ஒருநாள் கைலாச பர்வதத்தில் சங்கரனும் பார்வதியும் குழந்தையாகிய குகனை லாலனம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தேவர்களெல்லோரும் சூரனுடைய உபத்திரவத்தைச் சகிக்கமாட்டாமல் பர்வதத்தில் ஏறிச்சென்று கைலாயத்தின் துவாரப் பிரதேசத்தையடைந்து கணங்களால் சூழப்பட்டிருக்கும் நந்தியைப் பார்த்து, மிகவும் சந்தோஷமடைந்து தலைக்குமேல் கைகளைத் தூக்கிக்கொண்டு, தங்களுடைய வரவை பரமசிவனுக்குத் தெரியப்படுத்தி தங்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நந்திகேசரும் அந்தப்புர ரகசியங்களனைத்தும் தெரிந்தவராகையால், "உங்களுக்கு மகாதேவனைப்பார்க்க இது சமயமல்ல. சமயம் சொல்லுகிறேன் பொறுங்கள்" என்று உள்ளே போனார். நந்திகேசர் "தேவ தேவ, வெகுநேரமாய் துவாரப் பிரதேசத்தில் விஷ்ணு முதலான தேவர்களெல்லோரும் காத்திருக்கிறார்கள். சூரபத்மவாதையிலிருந்து அவர்

களைத் தாங்கள் சீக்கிரம் விடுவித்து அநுக்கிரகம் செய்ய வேண்டும்" என்றார். சங்கரனார் உத்தரவு கொடுத்ததன்பேரில் நந்தியானவர் தேவர்களெல்லா ரையும் உள்ளே வரும்படி சொன்னார். எல்லோரும் மிக்க ஆனந்தமடைந்து சோமாஸ்கந்த மூர்த்தியாய் வி ளங்கும் பரமசிவனடிகளில் தாழ்ந்து தோத்திரம் செய் தார்கள். சூரனால் தாங்கள் படும் அவஸ்தைகளை யெல் லாம் சொல்லி முறையிட்டார்கள். உடனே சங்கரன் சங்கரியோடு கூட லோகக்ஷேமத்தைப் பற்றி அடிக்கடி யோசனைசெய்தார். சுப்பிரமணியனை ஆலிங்கனம் பண் ணினார் உச்சிமுகந்தார். உள்ளங்குளிர்ந்தார்: ஏகாதச உருத்திரர்களுடைய அம்சமாகிற பதினொரு ஆயுதங்க ளையும் சக்தியின் அம்சமாகிய தன்னுடைய சத்தியை யும் இரதம், கவசம் முதலானவைகளையும் கொடுத்தார் சூரபத்மன் தாரகன் சிங்கமுகன் முதலான எல்லா அசுரர்களையும் கொன்றுவிட்டு வரும்படி ஆசீர்வதித் தார். அப்படியே பார்வதி தேவியும் விபூதியை நெற் றியிலிட்டு ஆசீர்வதித்தாள். சங்கரன் தேவர்களைப் பார்த்து, "இவன் சீக்கிரத்தில் உங்களுடைய சத் துருக்களையெல்லாம் கொன்றுவிடுவான். பயப்படா தேயுங்கள்" என்று சொல்லி மறைந்தருளினார்.

வாயு தேர்ப்பாகனாக நியமிக்கப்பட்டார். நூற் றெட்டு சேனைத்தலைவர்களும் இரண்டாயிரம் வெள் ளம் சேனைகளும் வீரபாகுமுதலான இலக்ஷத்தொன் பது வீரர்களும் மாலயன் முதலானதேவர்களும், புறப் பட்டுச் சென்றார்கள். ரிஷிகளும் அவர்களுடைய பத்

தினிகளும் கூடவே சென்றார்கள். எல்லோரும் ஏமகூடம வந்து சேர்ந்தார்கள். இச்சமயத்தில் நாரதர் அவ்விடம்வந்து குகதேவனைப்பார்த்து "இந்தகிரௌஞ்சன் ஆதியில் அசுரனாயிருந்தவன் அகஸ்தியருடைய சாபத்தினால் பர்வதமாகவே மாறிவிட்டான். இதில் சூரனுடைய தம்பியாகிய தாரகன் (என்ற ஆனைமுக வுணன்) வசிக்கிறான். சதாகாலமும் சந்திரன் இவனிடம் பதினாறு கலைகளோடும் விளங்கிக்கொண்டு சுசரூஷைகள் செய்கிறான். தேவேந்திரன் கற்பகவிருக்ஷ முதலானவைகளால் அனுகூலம் செய்கிறான். மகாவிஷ்ணுவின், சக்கராயுதத்தை தாரகன் கழுத்தில் ஆபரணமாய்ப் பூண்டிருக்கிறான். இவனை முதலில் வென்றால் தான் இதரர்களை வெல்லுவது சுலபம். இல்லாவிடில், நுனிமரத்திலிருந்து அடிமரத்தை வெட்டுவதுபோலாகும்" என்றார். ஆகாசத்தில் தூமகேது உண்டாயிருந்தது. தாரகனுடைய இராஜ்யத்தில் அபசகுனங்கள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

தேவர்கள் இராக்கதர்களுடைய விசாலமான சேனைக் கூட்டங்களைப் பார்த்ததும் நடுங்கிஓடிவந்து, குகதேவனுடைய சரணங்களில் விழுந்தார்கள். "அவுணர்கள் கூட்டம் மிகவும் அபரிமிதமாயிருக்கிறது. நாம் கெலிக்க முடியாது. சேனைகளைப் பார்க்கவே பயமாயிருக்கிறது" என்றார்கள். உடனே சிவகுமாரன் தேவர்களைப் பார்த்து "பயப்படாதேயுங்கள் இன்றைய தினமே அவர்களை ஜெயித்து விடுகிறேன்," என்று தைரியஞ் சொன்னார். வீரபாகுவைப் பார்த்து, "நீ

சேனைகளுடன் புறப்பட்டு அந்த பர்வதத்துடனும் அதில் வசிக்கும் கருவமடைந்த இராக்கதர்களுடனும் யுத்தம் செய். இதோ, நானும் கூடவே சேனைகளுடன் புறப்பட்டு வருகிறேன்" என்றார். அப்போதே தேவர்கள் பயம் நீங்கி ஆனந்தமடைந்தார்கள். தாரகன் பந்திராசுவம் என்ற இரதத்தில் ஏறிக்கொண்டு புறப்பட்டு இரண வாத்திய கோஷங்களுடன் யுத்த களத்துக்கு வந்து சேர்ந்தான். ஆரம்பத்தில் வீரர்கள் பூதர்கள் எல்லோரும் அந்த பட்டணத்தில் காவலாயிருந்தவர்களை வாட்டி மண்மேலடித்தார்கள். இரண்டு சேனைகளும் கலந்து யுத்தம் செய்யும்போது தாரகனுடைய சேனைகளில் வெகுபேர் இறந்தார்கள். இரத்த நதியானது பெருகிற்று. தாரகன் மிகவும் கோபங்கொண்டான் கதையைச் சுழற்றிவிட்டான்; பூதப்படைகளெல்லாம் துடித்துத் துடித்து விழுந்தன.

கவசம் கிரீடம், இரதம், வில் முதலானவைகள் முறிந்தும் உடைபட்டும் பொடியாகியும் நொறுங்கியும் கீழேவிழுந்தன. தலைவேறு, கால்வேறு, கைவேறு, புயம்வேறாக அங்கங்களெல்லாம் அறுபட்டுக்கீழே விழுந்தன.

வீரகேசரியும் தாரகனும் யுத்தம் செய்தார்கள். இருவரும் நல்ல யுத்தப்பயிற்சி யுடையவர்கள். அவர்கள் யுத்தம் செய்யும்போது தேவேந்திரனும் விருத்திராசுரனும் யுத்தம் செய்வது போலிருந்தது. வீரகேசரி கோபத்துடன் பத்து பாணங்களை விட்டுத் தாரகனுடைய கிரீடத்தைத் தள்ளிவிட்டு கையைக்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR
4394

கொட்டிக் கொண்டு அடிக்கடி சிரித்தான். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள் தாரகன்கதையை வீசின தால் வீரகேசரி மூர்ச்சையானான். உடனே வீரபாகு கோபமடைந்து "கில்லடா, துஷ்டா, நீ எங்கே போகி றாய்? என்னுடைய கண்ணில் பட்டதினால் அல்லவோ நீ வெகு நாளாய் உயிரோடிருக்கிறாய்" என்றார். இரு வரும் கடுவேகமாய் ஒருவரையொருவர் பாணங்களால் மூடுகிறார்கள். தாரகன், மலையை எப்படி மேகம் மூடுமோ அவ்விதமாக வீரபாகுவைத் தன் பாணங் களால் மூடினான். ஆனால் வீரபாகு பதினாறு அஸ்திரங் களை விட்டு அவ்வளவு பாணங்களையும் ஒரு நொடியில் விலக்கி மிகவும் பிரகாசமாய் விளங்கினார். எல்லோரும் ஆனந்தமடைந்தார்கள். தாரகன் உடனே திரிசூலத்தை எடுத்து வீரபாகுவின் மார்பின்மேல் விடவே வீரபாகு ஒரு கணநேரம் மூர்ச்சையடைந்தான். இதைக்கண்ட தும் எழுவீரர்கள் தாரகனைச் சூழ்ந்து கொண்டார் கள். அவன் உடனே தண்டாயுதத்தையும் கதாயுதத் தையும் பிரயோகித்ததால் அவர்களெல்லோரும் ஓட் டம் பிடித்தார்கள்.

வீரபாகு மூர்ச்சை தெளிந்தெழுந்தான். இரண்டு பேரும் கோரமான யுத்தம்செய்ய ஆரம்பித்தார்கள். தாரகன் வீரபாகுவைப் பார்த்து "நான் எப்பேர்ப் பட்டவன் தெரியுமா, திருமாலைப் போர்க்களத்தில் வென்று சக்கராயுதத்தைப் பிடுங்கிக் கொண்டேன். இந்திரனுடைய வஜ்ராயுதத்தையும், அக்கினியினு டைய சக்தி ஆயுதத்தையும், யமனுடைய தண்டத்

ஜதையும், நிருதியினுடைய கட்கத்தையும், வாயுவின் துவஜத்தையும், அவரவர்களுடன் சண்டை செய்து வென்று என்னுடைய பராக்கிரமத்தினாலே என்னிடமே வைத்திருக்கிறேன். இப்பொழுது இந்த எட்டு வீரர் களையும் உன்னையும் உன்னுடைய யஜமானனையும் மற்று முள்ள சேனைகளையும் கொல்லியடையச் செய்வேன் என்று சொல்லி ஆக்கினேயாஸ்திரம், வருணாஸ்திரம், ஐந்திராஸ்திரம், யாம்யாஸ்திரம், பிரமமாஸ்திரம், நாரா யணாஸ்திரம் முதலானவைகளைத் தொடுக்க ஒவ்வொன் றுக்கும் வீரபாகு பிரதி அஸ்திரங்களைத் தொடுத்து யுத்தம் செய்து எதிர்த்தான். பிறகு நானாவித மாயா உருவங்களுடன் யுத்தம் செய்தான். வீரபாகு வீரபத் திராஸ்திரத்தை விட்டார். யுத்தம் பண்ணிக்கொண் டேயிருந்த தாரகன் திடீரென்று வீரபாகுவை மாயை யினால் மோகிக்கச்செய்து எலியைப்போல ஒரு வளைக் குள் புகுந்தான். ஓடுகிறவனைக்கொல்லக் கூடாது என்று தீர்மானித்து விடப்பட்ட அஸ்திரத்தை வீரபாகு திருப்பிக்கொண்டார். கிரௌஞ்சனுடைய மாயையால் திடீரென்று ஒரே இருட்டாய் இருட்டிற்று. பிறகு திடீ ரென்று வெளிச்சம் உண்டாயிற்று. எத்தனையோ இர ஸ்தாக்களும் வழிகளும் காணப்பட்டன. ஆனால் தாரக னைக்காண முடியவில்லை. வீரபாகு யோசிக்கிறான். போக மார்க்கமில்லாமல் அடைபட்டு வீரர்களும் சேனைகளும் வீரபாகுவும் எல்லோரும் மூர்ச்சையாய் விட்டார்கள். இதைக்கண்டு தாரகன் தான் ஜயமடைந்ததாக எண் ணினான்.

இச்சமயத்தில் நாரதர் குமாரனிடம் வந்தார். வீரர்கள் கிரௌஞ்ச பர்வதத்தின் பிலத்தில் அகப்பட்டுக் கொண்டார்களென்றும், அவர்கள் உயிரோடிருக்கின்றதும் இல்லாததும் தெரியவில்லை என்றும் சமாசாரத்தைத் தெரிவித்தார். இதைக்கேட்டு கார்த்திகேயனுக்குக் கண்கள் சிவந்தன. மிகவும் கோபத்தை யடைந்தார். "இன்றையதினமே அசுரர் குலத்தைக் கருவழிக்கப் போகிறேன், தேவர்களே! இனிமேல் நீங்கள் பயப்படவே வேண்டாம். என்னுடைய பக்தர்களை யார் விரோதமாய் நினைக்கிறானோ அவனை எனக்குவிரோதி: எனக்குக் குற்றஞ்செய்தால் அதைப் பொறுப்பேன். பக்தனுக்குக் குற்றம் செய்தாலதைப் பொறுக்க மாட்டேன். என்னுடைய பக்தர்களை யார் போஷிக்கிறார்களோ அவர்களை யெல்லாம் நான் போஷிக்கிறேன். இப்பொழுதே கிரௌஞ்ச பர்வதத்தைப் பிளந்து, அதனுடைய மாயையில் லகப்பட்டிருக்கும் வீரபாகு முதலான எல்லோரையும் சீக்கிரம் விடுவிக்கிறேன்" என்றார். அப்படியே முருகர் சேனைகளோடு புறப்பட்டுவந்து சேர்ந்தார். சேனைகளுக்கு மத்தியில் இரதம் நிற்கும்போது சமுத்திரத்தின் மத்தியில் கப்பல் நிற்பதுபோல் இருந்தது. தாரகனும் சேனைகளைத் திரட்டிக்கொண்டு குகனிடம் வந்தான். தாரகன் " நீ குழந்தையல்லவா. உனக்கு யுத்தம் பண்ணத்தெரியாது. நாங்களெல்லாம் அதிசூரர்கள். ஐராவதம் புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீகம்,

என்ற எட்டு யானைகளும் என்னைக்கண்டால் கிடு கிடு வென்று நடுங்கும் தெரியுமா? நீ இங்கே வருகிறது "இளங்கன்று பயமறியாது" என்று சொல்வார்களே அப்படியிருக்கிறது. உன் தகப்பனாரிடம்போய் விளையாடிக்கொண்டு சுகமாயிருஎன்றான். குகன் "நீ இவ்வளவு பேச்சு பேசுகிறதைப் பார்த்தால் காரியத்தில் ஒன்று மில்லைஎன்று தோன்றுகிறது என்றார். தாரகன்கோபம் பிறந்து வில்லை வளைத்தான். நாணொலிசெய்தான். அப்படியே குகனும் யுத்தமாரம்பித்தார். நாணொலிசெய்தவுடனே சமுத்திரங்கள் பொங்கின. பூமி யெல்லாம் அசைந்தன. வாத்திய கோஷங்களெல்லாம் நாலுதிசைகளிலும் கேட்டன. குகன் இரண்டே பாணங்களை விட்டு தாரகனுடைய தும்பிக்கையையும் நான்கு தந்தங்களையும் அறுத்துத்தள்ளினார். தாரகன் விட்டபாணத்தினால் குகனுடைய தேர்ப்பாகன் விழுந்திறந்தான். குகன் நூறு பாணங்களை நெற்றியில் விட்டவுடன் தாரகன் மூர்ச்சையடைந்தான். தெளிந்தவுடன் தாரகன் கோபமிகுந்து குகனை நோக்கி பிரம்மாஸ்திரத்தை விட்டான். பிரம்மாஸ்திரமானது அடிக்கொரு நமஸ்காரம் செய்து கொண்டே குகனிடம்வந்து சேர்ந்து அவரிடமே நின்றது. பிறகு அனேக தேவதாஸ்திரங்களை விட்டு யுத்தம் செய்தார்கள், யுத்தம் வெகு கோரமாய் இருந்தது. குகனுக்கும் தாரகனுக்கும் நடந்த யுத்தத்துக்குச் சமானம் எதுவென்றால் குகனுக்கும் தாரகனுக்கும் நடந்த யுத்தமே என்று சொல்லலாம். கந்தசாமி வெற்றியடையும்போது தேவர்கள்

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

ஆனந்தமடைந்து புஷ்பமாரி பொழிந்தார்கள். தாரகன் வெற்றியடையும்போது இராக்கதர்கள் குதூஹலமடைந்தார்கள். தாரகன் பிறகு மாயாயுத்தம் செய்ய நினைத்து மேகரூபமாய்வந்தபோது குகன் பெருங்காற்றாய் வடிவங்கொண்டு அவனை தோற்கடித்தார். அவன் சமுத்திரமாய் வரும்போது இவர் படவாக்கினியாக வடிவங்கொண்டும் அந்தந்த சமயத்துக்குத் தக்கபடி வெவ்வேறு உருவங்களையெடுத்து அவனுடையமாயைகளை யெல்லாம் அழித்தார். கிரௌஞ்சனுடைய மாயையிலகப்பட்டு மூர்ச்சையாய்கிடந்த வீரபாகு உட்பட்ட சமஸ்த சைன்னியங்களையும் வெளியில் கொண்டு வந்தார். எல்லோரும் தூங்கி விழித்ததுபோல் எழுந்தார்கள். உடனே குகன் தம்முடைய சக்தியை விவினார். அது புறப்பட்டு தன்னுடைய தர்மமாகிய துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தை நடத்தவேண்டி கிரௌஞ்சனையும் தாரகனையும் மற்றுமுள்ள அசுரர்களையும் அப்படியே யமபுரத்துக்கு அனுப்பிவிட்டு கங்கையில் போய் நீராடி மறுபடி குகனிடம் வந்து சேர்ந்தது. தேவர்கள் சந்தோஷமடைந்தார்கள். திவ்வியமாய் கானம் பண்ணினர்கள் சாதுக்கள் கொண்டாடினார்கள்.

## அசுர விசாரணை.

தாரகன் போர்க்களத்தில் மடிந்ததும் சவுரி முதலான தாரகனுடைய பத்தினிகளெல்லோரும் இரணகளத்தை யடைந்து பிரலாபித்தார்கள். அச்சமயத்தில் தாரகன் குமாரனாகிய அசுரேந்திரன் சிங்க

முகனுடைய பட்டணத்திலிருந்து சதுரங்க சேனைகளோடு புறப்பட்டு யதேச்சையாய் தன் தகப்பனைப் பார்க்க ஆவல் கொண்டு அதிவேகமாய் வந்தான். பிதா இறந்ததைக் கேட்டவுடன் அடியற்ற மரம் போல் கீழே விழுந்தான். ஒரே வஸ்திரத்துடன் விரிந்த கேசபாரத்தோடு தரையில் புரண்டான் "அப்பா நீ எங்கே போய்விட்டாய். உன் பேர் சொன்னால் உலகமெல்லாம் நடுங்குமே, திருமாலின் சக்கரத்தை நீ கழுத்தில் பூண்டிருந்தாயே. ஒரு பால் மறக்காத குழந்தை உன்னைக் கொன்று விட்டதே" என்ன செய்வேன்! என்று யுத்தகளத்தை யடைந்து, பிதா விழுந்து கிடப்பதைப் பார்த்து, மிகவும் துக்கமடைந்து புரண்டு புரண்டு அழுதான். 'இந்திராதிகளுக்குக் கூட இனிமேல் நல்லகாலம் பிறந்து விட்டதே. சூரன், சிங்கமுகன் இருவருக்கும் நீ வலதுகையாயிருந்தாயே. நீ போய் விட்டாயே" என்று சொல்லி மிகவும் துக்கித்தான்.

ஒன்றும் தோன்றாமல் கைகளைப் பிசைந்து கொண்டு நாலாபக்கமும் சுற்றிப்பார்த்தான். தகப்பனுக்கும், கூடவே உடன்கட்டை யேறின தன்னுடைய மாதாக்களுக்கும் உத்தரகிரியைகளை விதிப்பிரகாரம் முடித்து, வீரமயேந்திரபுரியை யடைந்து, தன் பெரிய தகப்பனாகிய சூரபத்மனுடைய சரணங்களில் வீழ்ந்து கோவென்றழுதான். கீழே புரண்டு அழுகிறவனைப்பார்த்து சூரபதுமன் அவனை இருகைகளாலும் தூக்கி, கட்டித்தழுவி "பயப்படாதே. என் அழுகி

றாய்" என்று அவனுடைய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கேட்டான். அசுரேந்திரன் அழுது கொண்டே நடந்த ச ா யெல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொன்னான்.

சூரன் "என்னுடைய தம்பியாகிய தாரகனை சிவகுமாரன் ஒரு சிறு குழந்தை ஜெயிக்கவாவது. அது எப்படி. உனக்கு சித்த பிரமையா? அல்லது கனவு கண்டாயா? பயப்படாமல் சொல்லு" என்றான்.

அசுரேந்திரன் "எனக்கு பிரமையுமில்லை. இது கனவுமில்லை. மாதாபிதாக்களுக்கு உத்தரகிரியைகளை நடத்திவிட்டு நேரே இவ்விடம் வந்திருக்கிறேன். சிவகுமாரனிடம் பயத்தினால் அங்கே கணநேரங்கூட நிற்காமல் இவ்விடம் வந்து விட்டேன். இதைத் தாங்கள் சந்தேகிக்க வேண்டாம்." என்றான்.

இதைக் கேட்டு சூரபத்மன் தன் சிங்காதனத்திலிருந்து கீழேவிழுந்து புரண்டு "விதியானது என்னையே கொன்று விட்டதே நான் என்ன செய்வேன்" என்றான். திடீரென்று கோபத்தையடைந்து நெறநெற வென்று பற்களைக்கடித்து, கண்களில் நெருப்புப் பொறிபறக்க நாலாபக்கமும் சுற்றிப் பார்த்தான். உடனே "கந்தனையும் அவனுடைய பந்துக்களையும் நான் கொல்லவேண்டும் அல்லது நானே என் பிராணனைக் கொடுக்கவேண்டும்; ஒரு கைபார்ப்போம்." என்றான்.

சதுரங்க ஸேனைகளும் தயாராயிருந்தன. வாத்தியங்கள் முழங்கின. யுத்த சன்னத்தனாய் புறப்படத்

தயாராகி, தூதர்களை யழைப்பித்து ஷண்முகன் இருக்கும் நிலைமையை கவனித்து வரும்படி யனுப்பி ஞன். அதற்குள் சூரனுடைய மந்திரிகளுள் ஒருவனு கிய அமோகன், யோசனையின்றி அவசரப் பட்டு திடீ ரென்று ஒரு காரியமும் செய்யக்கூடாது. இப்பொ ழுது நமக்கும் சிவகுமாரனுக்கும் ஏதாவது விரோதம் உண்டா? கிடையவே கிடையாது. சங்கரனிடத்திலு ண்டானபடியால் அவனும் சங்கரனே. யதேச்சையாய் வந்த குகனிடம்சண்டையிட்டு தங்கள் தம்பி பிராணனை யிழந்தானென்றான். இவ்விதமாய் சொன்ன அமோகன் என்ற மந்திரியின் வாக்கியத்தைக் கேட்டுசாந்தமடை ந்து சூரன் தன் சிங்காதனத்தில் ஏறினன். தாரகவதமா னபிறகு இளையகுமாரனை குகன் பிரம்மேந்திராதி தேவர்களுடன் புறப்பட்டு ஆகாயமார்க்கமாய் லோகா னுக்கிரகத்தின் பொருட்டு ஏற்பட்டிருக்கும்படியான கேதாரம், காசி, ஸ்ரீபர்வதம், தட்சிணகைலாயம், திருவா லங்காடு முதலான சகல க்ஷேத்திரங்களையும் சுற் றிக்கொண்டு, காஞ்சி, அருணாசலம், விருத்தாசலம், சிதம்பரம், மாயூரம் இவைகளைத் தாண்டி காவேரியில் மணி நதி தீரத்தில் வந்து சேர்ந்தார்கள். சூரியனும் அஸ்தமித்தது. தேவதச்சன் அவ்விடம் குமாரபுர த்தைச் சிருஷ்டித்தான், அதன் மத்தியில் திவ்வியமான நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட அரண்மனை யை உண்டாக்கினன் அதில் அன்று இராத்திரி ஆறுமு கன் வாசம்செய்தார். இந்திரன் முதலான சகலதேவர் களும் தக்க விடுதிகளில் அமர்ந்தார்கள். அப்பொழுது

சீர்காழியிலுள்ள வனதேவதை தன்னிடத்தில் முந்தி இந்திரனால் ஒப்புவிக்கப் பட்டிருந்த நகைப்பெட்டியைக் கொண்டுவந்து சசீபதியிடம் கொடுத்தது. அவ்வாபரணங்களைப் பார்த்தவுடன் இதுதான் சமயம் என்று மன்மதன் தன் பாணங்களை இந்திரன் மேல் வீச ஆரம்பித்தான். இராத்திரியெல்லாம் இந்திரனும் தூக்கமில்லாமல் இருந்தான். ஒரு கணம் போவது ஒரு யுகமாயிருந்தது.

மறுநாள் காலமே இந்திரன் எப்படியும் மிகவும் கஷ்டத்துடன் மனதை நிலைநிறுத்திக்கொண்டு கந்தநாதனுடைய சமீபம் வந்துசேர்ந்தான். கந்தஸ்வாமியும் காலையில் எழுந்து நித்திய கரும விதிகளைமுடித்து மாதாபிதாக்களைப் பாதங்களில் வணங்கி பக்தியோடு உபசாரங்கள் செய்தார். பாசுபத விரதத்தை அனுஷ்டித்தார் உடனே சங்கரன் அவ்விடம் வந்து பிரசன்னமாகி தன்னுடைய பாசுபத முதலான அஸ்திரங்களைக்கொடுத்து அனுக்கிரகம் செய்து அம்பிகையுடன் மறைந்தருளினார்.

குகன் அவ்விடமிருந்து புறப்பட்டு திருவிடைமருதூர், கும்பகோணம், மதுரை முதலான சிவக்ஷேத்திரங்களை யெல்லாம். சுற்றிக்கொண்டு பராசலம் வந்தார். இந்த இடத்தில் தப்தன், அனந்தன், நந்தி, சதுர்முகன், சக்கரபாணி, மாலி, என்ற ஆறு முனிவர்கள் குகனுடைய பாதங்களில் வணங்கிஎழுந்து அஞ்சலிபந்தம்செய்து கொண்டு நின்றார்கள்: அப்பொழுது தேவந்திரன் ஷண்முகனைப் பார்த்துச் சொல்லுவான்.

"இவர்கள் வியாசருடைய தமையன்மார்கள். பராசருடைய குமாரர்கள். குழந்தை வயதில் இவர்கள் புத்திப்பிசகாய் மீன்களைப்பிடித்து விளையாடினார்கள். அதனால் அவர் கோபித்து இவர்களை மீன்களாக ஜனிக்கும்படி சபித்தார். அவர்கள் மிகவும் பயந்து காலில் விழுந்து சாபவிமோசனம் எப்பொழுது உண்டாகும் என்று கேட்டார்கள். அம்முனிவரும் "பர்வத ராஜகுமாரியின் ஸ்தன்யத்தில் உண்டாகும் பாலை நீங்கள் குடித்த பிறகுதான் உங்களுக்கு விமோசனம் என்றார்." உடனே இவர்களும் மீன் உருவத்தை யடைந்தார்கள். தாங்கள் சரவணத்தில் உண்டானவுடன் பார்வதி தங்களுக்குப் பாலமுதை ஊட்டும் வேளையில் கருணைகரியான படியால் கொஞ்சம் பாலைச் சரவணத்தில் விழும் படிச் செய்தாள். அதை சாப்பிட்டு இவர்களும் சாபம் நீங்கி சுயரூபத்தை யடைந்து எழுந்தார்கள். பரமசிவனைத் தோத்திரம் செய்தார்கள் பரமசிவனும் இவர்களைப்பார்த்து நீங்கள் (பராசலத்தை யடைந்து) ஷண்முகன் அவ்விடம் வந்துசேரும் வரையில் தீவிரமான தவம் செய்துகொண்டிருங்கள்" என்று சொன்னார். அப்படியே இவர்களும் தவம்செய்து கொண்டிருக்கிறார்கள் என்றான்—ஷண்முகன் "நல்லது" என்றார்.

உடனே ஷண்முகன் எல்லாரிஷிகளுடனும் தேவர்களுடனும் செந்திநகர் வந்தார். தேவதச்சன் ஒரு திவ்வியமான மண்டபத்தை சிருஷ்டித்தான். பிரம்மாதி தேவர்களும் ரிஷீசுவரர்களும் ஷண்முகனை சிம்மாதனத்தில் உட்காரவைத்து கண்கள் பெற்றதற்குரிய பலனை யடைந்தார்கள்.

ஷண்முகன் " இந்த அசுரர்கள் யார்? எத்தனை பெயர் இருக்கிறார்கள்? அவர்கள் யாருடைய பிள்ளைகள்? அவர்களுள் முக்கியமானவர் யார்? என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு தேவர்களெல்லோரும் கலந்து யோசித்து, பிரகஸ்பதியைக் கூப்பிட்டு அசுரர்களின் சமாசாரங்களனைத்தையும் ஆதியோடந்தமாய் குறையற கந்தசாமிக்கு எடுத்துச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார்கள்.

## (அசுர காண்டம்.)

### அசுர உற்பத்தி.

நந்திதேவர் பிரம்மயாகத்தில் சாபங்கொடுத்து விட்டுப்போய் தேவர்களை யழிப்பதன் நிமித்தம் சூரபதுமன் முதலிய அரக்கர்களைச் சிருஷ்டிப்பதற்காக அறுபத்தாறுகோடி அசுரர்க்கு மந்திரியான அசுரேந்திரன் மகளாகிய சுரசை என்பவளைக் கூப்பிட்டு, காட்டில் போய் திவ்வியமான வீணாகானம் செய்து அவ்விடத்தில் அச்சமயம்வரும் காசிபருடன் உறவாடி இராட்சசர்களை சிருஷ்டி செய்யச் சொன்னார். இதைக்கேட்டு கண்டவர் மனதைக் கவரும்படியான திவ்விய ரூபலாவண்ணியத்தோடு சுரசைபற்பல விலையுயர்ந்த ஆபரணங்களையணிந்து கம்பீரமாய் நடந்து காட்டையடைந்து ஓரிடத்திலமர்ந்து வீணாகானம் செய்திருந்தாள். அவ்வீணாகானத்தைக் கேட்டு காசியபர் தவநிலைமை கலைந்து அவ்விடம் வந்து சுரசையைக் கண்டார். தாங்காமையல் கொண்டார். பதினாறு பற்களையும் காட்டி

வார்த்தைகள் விண்டார். அவளும் அப்படியே சம்மதித்தாள். குருவாகிய சுக்கிரபகவானிடமிருந்து மாயவித்தைகளை யெல்லாம் கற்றிருந்தவளாகையால் உடனே ஒரு அழகான மண்டபத்தைச் சிருஷ்டித்தாள். இருவரும் முதல் யாமத்தில் திவ்விய சுந்தரரூபத்தை வகித்து சந்தோஷமடைந்ததால் அவர்களிடம் அதிரூபலாவண்ணியமுடைய சூரபதுமன் பிறந்தான். பிறகு அவர்களுடைய உடம்பில் உண்டான வேர்வையினின்றும் முப்பதாயிரம் இராக்கதர்கள் உண்டானார்கள். இரண்டாம் யாமத்தில் சிங்கத்தைப்போன்ற உருவங்கொண்டு இருவரும் களித்திருந்தார்கள். உடனே ஆயிரமுகங்களுடனும் இரண்டாயிரங் கைகளுடனும் சிங்கமுகன் பிறந்தான். பிறகு அவர்களுடையவேர்வையினின்றும் நாற்பதாயிரம் இராட்சசர்கள் உண்டானார்கள். மூன்றும் யாமத்தில் இருவரும் யானை உருவமாய் இருந்து போகம் செய்தார்கள். ஆகையால் யானைமுகத்தோடும் நான்கு கொம்புகளோடும் தாரகாசுரன் உற்பத்தியானான். அவர்களின் வேர்வையினின்றும் நாற்பதாயிரம் அவுணர்கள் உண்டானார்கள். பிறகு நான்காவதுயாமத்தில் ஆட்டின் உருவமாயிருந்து இருவருஞ்சுகித்த படியால் அஜாமுகி என்ற ஒரு பெண்குழந்தை உண்டானாள். பின்னும் அவர்களுடைய வேர்வைத்துளிகளினின்றும் முப்பதாயிரம் இராக்கதர்கள் உற்பத்தியானார்கள்

காசியபர் சூரன் முதலான தனது மைந்தர்களுக்கு மார்க்கண்டேயருடைய சரித்திரத்தைச்

சொல்லி மோட்ச மடையும் மார்க்கத்தை உபதேசித்தார். அவ்வுபதேசம் அவர்களுடைய புத்தியில் ஏறவில்லை.

ஆனால் சுரசையானவள் சூரபத்மனுக்குச் செல்வமும செருக்கும் அதனால் உயர்வும் வீரவேண்டுவதற்காக சங்கரனைக் குறித்து வீரயாகம் செய்யச் சொல்லி மறைந்தனள். உடனே அந்த மாயாமண்டபமும் மறைந்தது. இவள் இப்படி மறைந்ததும் இவளுடைய பிரிவாற்றாமையால் காசிபர் கண்ணீர் விட்டழுதார் தருணமே பிரமா அவ்விடம் வந்து அவரைச் சமாதானப் படுத்தி அப்பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளும் நிமித்தம் தீவிரமான தவஞ்செய்யும் படி கட்டளையிட்டு மறைந்தார். அவரும் அப்படியே கடுந்தவம் புரிந்து தன் பாபத்தைப் போக்கினார்.

## வீரயாகம்.

சூரன் தன் தாயாராகிய சுரசை (மாயை)யினால் உபதேசம் பண்ணப்பட்ட பிரகாரம வீரயாகத்தைச் செய்தான். எவ்வளவு தீவிரமாய்ச் செய்தும் மகாதேவன் பிரசன்னமாகாததால் யாககுண்டத்தில்விழுந்திறந்தான். திரும்பியும் சிங்கமுகன் அதை நிறுத்தாமல் நடத்திக்கொண்டு வந்தான். அச்சமயத்தில் சங்கரன் வேதங்களைச் சொல்லிக்கொண்டே அவ்விடம் வந்து சிங்கமுகனைப் பார்த்து, அவன்கேட்டுக்கொண்ட பிரகாரம் சூரபதுமனை எழுப்பி வரங்களைக் கொடுத்துச் சென்றார். ஆயிரத்தெட்டண்டங்களுக்கும் அதிபதியாய் நூற்றெட்டு யுகங்கள் அரசு செய்வா

னென்றும் மாலயன் முதலான தேவர்களெல்லாரும் இவனுக்கு நடுங்குவார் களென்றும், காலகாலனை சங்கரனுடைய சக்தியைத்தவிர வேறு எதனாலும் அவனுக்குச்சாவுண்டாகாது என்றும் வரம் பெற்றான். இந்திரஞாலரதத்தையும் சிங்கவாகனத்தையும் பாசு பதாஸ்திரத்தையும் பெற்றான். இவனடைந்த வர பலத்தைக்கேட்டு பிரம்மா விஷ்ணு முதலான தேவர்க ளனைவரும் நடுங்கினார்கள். குபேரன் இந்திரன் அக் கினி, இயமன் வருணன்முதலான சகலதேவர்களும் மிக்கமரியாதை செய்து உபசரித்து பயந்து நடந் தார்கள்.

சூரன் கைலாசத்துக்குச் சென்றான். அவ் விடம் துவாரப்பிர தேசத்திலிருந்த நந்திதேவர் சூரபதுமனை மிக்கமரியாதை செய்து உபசரித்தார். இதைக் கேள்விப்பட்டு மகாவிஷ்ணுவானவர் பிரம்மேந் திராதி தேவர்களை யெல்லாம் பார்தது, " நானும் நீங் களும் எல்லோருமாக முந்தி தக்ஷன் அருததிரயாகம் செய்தபோது அவிர்ப்பாகம் வங்க உட்கார்ந்தோம். அந்தபாபத்தின் பலனை நாம்அனுபவிக்க வேண்டுமல் லவா? ஆகையால்இந்த அசுரனாகிய சூரனை நாம் சந் தோஷப்படுத்த வழிதேடவேண்டும், அவனுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். " என்றார்—

## சூரனரசியலும் விவாகமும்.

சூரன் பிரம்ம லோகத்தை யடைந்ததும் பிரம் மதேவர் சூரபதுமனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்தார். தேவதச்சனால் எண்பதாயிரம் யோசனை

விஸ்தீரணமுள்ள வீரமயேந்திர மெனும் பட்டணம் சிருஷ்டிக்கப்பட்டது. அப்பட்டணத்தில்இருந்துசூரன் இராச்சியபரிபாலனஞ் செய்தான். அமோகன், தரும கோபன், மகிடன், சங்குபாலன், துர்க்குணன், வக்கிர காலன், தீக்கண்ணன் முதலான மந்திரிமார்கள் உதவியா யிருந்தார்கள். மற்று முள்ள ராஜ்யங்களை ஆயிரத்தெட்டு அண்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒவ்வொருதலைவனை நியமித்து அரசுபுரிந்து வந்தான். தேவர்களெல்லாம் அவர்களுக்கு மீன் பிடித்துக்கொண்டுவந்து கொடுத்தார்கள். சூரன் நாளடைவில் தெய்வகம்மியன் பெண்ணாகிய பதுமகோமளையைக் கல்யாணம் செய்துகொண்டான்—அவளிடம் பானுகோபன், அக்கினிமுகன், இரணியன், வஜ்ர பாகு என்ற நான்கு பிள்ளைகள் உண்டானார்கள்.

இன்னம் அனேக தேவகந்தர்வ கின்னர கிம்புருட கன்னிகைகளையும் மணஞ் செய்து கொண்டு மூவாயிரம் புத்திரர்களை உண்டு பண்ணினன். சிங்கமுகன் வக்கிர காலனுடைய புத்திரியாகிய விபூதியைக் கல்யாணம் செய்து கொண்டான் அவளிடத்தில் மஹாசூரன் என்ற குழந்தை உண்டாயிற்று. இன்னும் சில கந்தர்வ கன்னிகைகளைவிவாகம்செய்துகொண்டு நூறு புத்திரர்களை உண்டாக்கினன். தாரகன் நிருதியின் மகளாகிய சவுரியை மணந்து மனமகிழ்ந்தான். அவளிடம் அசுரேந்திரன் உண்டானன். பானுகோபன் குழந்தைப் பருவத்தில் சாளரத்தின்வழியாய் எட்டிப் பார்த்த சூரியனை இழுத்து தன் தொட்டிலில் விளையாட்டுக் கருவி

யாகக் கட்டிக்கொண்டான். தாரகன் மகா விஷ்ணுவை வென்று அவருடைய சக்ராயுதத்தை, தன் கழுத்தில் ஆபரணமாய்ப் பூண்டான். அஜாமுகியானவள் வழியில் கண்ட ஆடவர்களை யெல்லாம் தான் பலவந்தமாய் அனுபவிக்கிறதும் யௌவன மாதர்களை யெல்லாம் தன்னுடைய சகோதரர்களிடம் கூட்டிவருவதுமாய் இருந்தாள்.

## இல்வலன் வாதாபி உற்பத்தி.

ஒரு நாள் துருவாச முனியானவர் மிகவும் கடினமான தவம் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் சூரன் தங்கையான அஜமுகியானவள் திடீரென்று அவருடைய தவநிலைமையைக் கலைத்து அவரைப் பார்த்து "தவ வலிமையுள்ள முனிவோனே தாங்கள் என்னோடு கலந்து எனக்குப் பிள்ளை தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள். அவளுடைய கர்ண பருஷமான வார்த்தையைக் கேட்டு துருவாசர் மிகவும் பயந்தார். ஆனாலும் அஜாமுகி மிகவும் பலவந்தப் படுத்தினபடியால் அவர்கள் இருவரும் கலந்து இல்வலன் வாதாபி என்ற இருவர் பிறந்தார்கள். ரிஷி புத்திரர்க ளானபடியால் அவர்கள் பிறக்கும்போதே தாயாருடைய வயதுடையவரா யிருந்தார்கள். அவர்கள் துருவாசரை வணங்கி அவரால் அதுவரையில் செய்யப்பட்ட தவத்தின் பலத்தைக் கொடுத்துவிடச் சொல்லிக் கேட்டார்கள் அவருக்கு மனமில்லாமையால் மிகவும்கோபமடைந்து, "நீங்கள் இவ்விடம் வரக்கூடிய தவத்திற் சிறந்த முனிவர்களுக்கெல்லாம்இடையூறுகள்

செய்து கொண்டு கடைசியில் அகஸ்தியரால் நாச மடையப்போகிறீர்கள் என்று சபித்து மறைந்தார். இவ் விரண்டு இராக்கதர்களும் பிரம்மாவைக் குறித்து கடுந்தவம் செய்தார்கள். அவர் பிரசன்ன மூனவுடன், இல்வலன் " வாதாபியை அஜரூப மாக்கி அவனைச் சாகடித்து பண்டங்களாகச் செய்து பிராமணர் புசித்த பிறகு நான் கூப்பிட்டவுடனே அவன் சுயரூ பத்தோடு வரவேண்டும" என்று கேட்டுக்கொண் டான். பிரும்மாவும் அப்படியே வரத்தைக் கொடுத்தார் அவ்விருவர்களும் கொங்கதேசத்தின் பக்கத்தில் இருந்துகொண்டு சடங்கு செய்கிற வியாஜமாய் வரக் கூடிய முனிவர்களையெல்லாம் பிராமணர்களாக வைத்து வாதாபியை அஜரூபமாக்கிச் சமைத்து, பிராமணன திருப்தியாய்ச் சாப்பிட்ட பிறகு " வாதாபி " என்று இல்வலன் கூப்பிடுவான். உடனே வாதாபி அந்த பிராம ணனுடைய வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளி யே வருவான். இவ்விதமாய் வரக்கூடிய முனிவ ர்களை யெல்லாம் தங்கள் பசிதீர உண்டுகளித்து வந் தார்கள்.

## இந்திரன் சீர்காழியை யடைதல்

இச்சமயத்தில். சூரன் இந்திராணியை அனுபவி க்க வேண்டுமென்று காமவிகாரங்கொண்டு, தன்னு டைய சேனுபதியை யனுப்பி இந்திரனை கட்டிப்போ ட்டு இந்திராணியைத் தன்னுடைய பட்டணத்துக்கு வேகமாய்க் கூட்டி வரச்சொன்னன். இதைக்கேள் வியுற்ற தேவேந்திரன் இந்திராணியோடு சீர்காழித் தலத்தையடைந்து குயில் உருவத்துடனிருந்து சிவ

னைப் பூஜைசெய்து கொண்டிருந்தான். தேவேந்திர னுடைய தம்பியாகிய உபேந்திரன் வைகுந்தம் சென் ருன். சயந்தனும் கூடவே போய் அவ்விடம் கொஞ்ச நாள் இருந்தான்.

இச்சமயத்தில் நாரதர் போய் சயந்தனை பயப்பட வேண்டாமென்று ஆசுவாசப்படுத்தினர். சூரன் பூவுல கிலும் நாளுப்பிரதேசங்களிலும் தூதர்களை விட்டு இந்தி ராணியைத் தேடச் சொல்லி யிருப்பதாகக் கேள்விப் பட்டு, இந்திரன் மூங்கில் வடிவுகொண்டு மறைந் திரு ந்து மனவருத்தத்துடன் பூசையைச் செய்துவந்தான். வரவர சோலைகளில் மலர்கள் குறைந்து மரங்களெல் லாம் காய்ந்து விட்டன. தேவேந்திரன் மனவருத்த, மடைந்தான். அப்பொழுது, ஒரு அசரீரியானது "தேவேந்திரா, விசாரப்படாதே சீக்கிரத்தில் காவேரி யானவள் நதிரூபமாய் வருவாள்" என்று சொல்லிற்று அதைக் கேட்டு இந்திரன் ஆறுதலையடைந்தான். அப் படியே தைரியங் குறையாமல சிவனைக் குறித்துத் தவம் செய்து வந்தான்.

## விந்திய தர்வ பங்கம்.

இச் சமயத்தில் நாரதர் விந்தியமலைக்கருகில்வந்து பற்பலவிதமாய் ஆசிர்வாதம் பண்ணினர். உடனே அப் பர்வதமானது நாரதருக்கு நல்வரவுகூறி தாங்கள் இவ் விடம் வந்த காரணமென்னவென்றுகேட்டது. உடனே நாரதர் சொல்லுவார் "நான் மகமேருபர்வதத்தினிடம் போயிருந்தேன். அவன் தன்னை சங்கரன் தனுசாகப் பிடித்துக்கொண்டா ரென்றும் தன்னுடைய பந்து

வாகிய பர்வதராசனுக்குஜகன்மா தாவானவள்குழந்தை யாகி பார்வதி என்ற பெயருடன் பிறந்து விளங்கு கிறுளென்றும் தான் எல்லா மலைகளுக்கும் மேலே பெரிய மலையா யிருப்பதாயும் பெருமை சொல்லிக் கொள்ளுகிருன்— அவனைக் காட்டிலும் நீ எந்த விதத் தில் குறைந்தவன். இதை உனக்குத் தெரியப்படுத்து வதற்காகத்தான் வந்தேன் " என்ருர்

இதைக் கேட்டவுடன் விந்தியமலை தன்னைத் தானே தோத்திரம் செய்து கொண்டு வேகமாய்வளர ஆரம்பித்தது. அதனுல் சூரிய சந்திரர்களுக்குக்கூட போகவர மார்க்கமில்லாமல் தடுக்கப் பட்டு ஒரு பக்கம் வெயிலாகவே இருந்தது. இன்னொருபாகம் இருட் டாகவே ஆய்விட்டது. இப்படிப் பட்ட துன்பங் களைச் சகிக்கமுடியாமல் தேவர்களெல்லோரும் மேரு பர்வதத்தின் குகையில் தவம் செய்து கொண்டிருந்த அகஸ்திய முனிவரிடம் போய் " அகஸ்தியரே தாங்கள் முந்தி சமுத்திரத்தையே குடித்து லோகத்தைக் காப்பாற்றி யிருக்கிறீர்களல்லவா ? நாங்களும் இது வரையில் யாகமுதலானவைகளைச் செய்யாததால் எங்களுக் கேற்பட்டிருக்கும் இப்போர்ப்பட்ட கஷ்டத் தினின்றும் தாங்கள் தான் காத்து இரட்சிக்க வேண் டும் இந்த விந்தியமலையின் கர்வத்தை யடக்க வேண் டும் " என்று வேண்டினுர்கள். அகஸ்தியரும் தீவிர மாய் ஞானநிஷ்டையிலிருந்து சங்கரனைக் குறித்துத் தவம்செய்ய மகாதேவன்பிரசன்னமாகி, விந்திய பர்வத் தின் கர்வத்தை யடக்கும்படியான வலிமை உண்டா

கும்படி அனுக்கிரகம் செய்து அவருடைய கடத்தில் காவேரியை வைத்து அவரைத் தூக்கிக்கொண்டு போகும்படி சொன்னார். அச்சமயத்தில் காவேரியானவள் "நான் இந்தப் புருஷனோடு பின் தொடர்ந்து எப்படி போவேன்" என்றாள். உடனே சங்கரன் "இவர் சாமான்னியரல்லர். இவரிடம் சந்தேகம் வேண்டாம். இவரும் நானும் ஒன்றே என்று நினைத்துக் கொள்" என்றார்.

பிறகு அகஸ்தியரும் கடத்தில் காவேரியோடு கூட புறப்பட்டுப் போகிற வழியில் கிரௌஞ்சபர்வதத்தில் வருகிறசமயத்தில் கிரௌஞ்சன் தன்னுடைய மாயையினால் பத்து திக்குகளிலும் வழிகளிருப்பதாக காண்பித்து உடனே வழியேயில்லாததாய் காண்பித்தான். மிகவும் வெளிச்சத்தினால் பிரகாசித்ததுபோல் காண்பித்து பிறகு முழுவதும் காடாந்தகாரமாய்க் காண்பித்தான். இவைகளைக் கண்ட அகஸ்தியர் தன்ஞானதிருஷ்டியால் இவை கிரௌஞ்சனுடைய மாயையென்றறிந்து உடனே சொல்லுவார், "பர்வத உருவத்தோடு என்னை நீ ஏமாற்றின படியால் நீ பர்வதமாகவே ஆகக்கடவது. ஷண்முகனுடைய சக்தியால் நீ நன்றாய் அடிபட்டு மரணமடைவாய்" என்று சபித்தார். பிறகு காசிக்கு வந்தார். விசுவனாதனைத் தோத்திரம் செய்தார். சங்கரனைத் தியானம் செய்து கொண்டே போய்த் தன்னுடைய கையைத்தூக்கி விந்திய பர்வதத்தின்மேல் வைத்தவுடன் பர்வதம் மிகவும் தாழ்ந்தது. தேவர்களெல்லோரும் ஆனந்த மடைந்தார்கள்

## இல்வலன் வாதாபி வதம்.

அப்படியே அகஸ்தியர் தெற்கு நோக்கிச் சென்று, இல்வலன் வாதாபி இருவரும் வசிக்கும் இடம் போய்ச் சேர்ந்தார். வாதாபி அரூபமாய்ச் சஞ்சரித்துக் கொண்டு இலகஙளத் தின்று கொண் டிருந்தான் அகஸ்தியரைக் கண்டதும் இல்வலன் அர்க்கிய பாத்திய ஆசமனீய முதலிய உபசாரங்கள் செய்து, அவரை தான் செய்யும் சிராத்தத்திற்கு பிரா மணனாக வரித்தான் அவரும் ஒப்புக்கொண்டார். இல்வ லனும் அந்த ஆட்டைப் பிடித்து நானாவிதமான ருசி யுள்ள கறிகளாய்ச் சமைத்து, அவருக்கு திவ்வியமான போசன மளித்து, பிறகு சிரமமாறும்படி அவரை ஒரு இடத்தில் உட்காரவைத்தான். கொஞ்சநேரம் பொறு த்து தன்னுடைய வழக்கம்போல் வாதாபியைக் கூப் பிட்டான். வாதாபியும் உடனே அவருடைய வயிற்றுக் குள்ளே யிருந்தே தன்னுடைய ஆட்டுருவத்தை எடுத் துக்கொண்டு கடந்து வெளிவருவதற்கு ஆரம்பித்தான் உடனே ஞானதிருஷ்டியால் இதை யறிந்த அகஸ்தி யர் விபூதியை எடுத்தார். சங்கரனைத் தியானம் பண்ணி னார். மூன்று தடவை தன் வயிற்றிலே தடவிக்கொ ண்டே, "வாதாபி ஜீர்ணமாய் விடு" என்று சொன் னார். உடனே அவனும் ஜீர்ணமாய் விட்டான். இதை யறிந்த இல்வலன் அவரை எதிர்த்துச் சண்டைபோட தண்டத்துடன் வந்தபடியால் அகஸ்தியர் சினங்கொ ண்டு ஒரு தர்ப்பையை எடுத்து பாசுபத மந்திரத்தைச் சொல்லி ஏவினார். அவனும் சாம்பலானான்.

அகஸ்தியர் உடனே அவ்விடத்தை விட்டு கொங்க தேசத்தை யடைந்து அவ்விடம் சிவனை லிங்கமாக ஸ்தாபித்து கொஞ்சநாள் இருந்து அர்ச்சனை செய்து தன் பிரம்மஹத்தி பாபங்களை நிவர்த்தி செய்துகொண்டார்.

## காவேரி நதி உற்பத்தி.

இச் சமயத்தில் நாரதர் சீர்காழியில் மூங்கில் வடிவமா யிருந்து தவம் செய்யும் இந்திரனிடம் வந்தார். அவனும் அவரை வணக்கமாய் நமஸ்கரித்தான். நாரதரும் "நீ சௌக்கியமா யிருக்கிறாயா" என்றார். தேவேந்திரன், "இதுபரியந்தம் ஏதோ சௌக்கியமாய்த்தா னிருக்கிறேன். ஆனால் நான் செய்துகொண்டு வந்த சிவ பூசையை இனிமேல் செய்வதற்கு புஷ்பங்களே கிடைப்பது மிகவும் அருமையா யிருக்கின்றது. நான் என்செய்வேன். தாங்கள் சொல்லவேண்டும்" என்றான்.

நாரதர் "அகஸ்தியர் காவேரிநதியை கடத்தில் வைத்து கொங்குதேசத்தைத் தாண்டி குடகுநாட்டில் வந்துகொண்டிருக்கிறார். இந்தசமயத்தில் நீ விநாயகரைப் பூசைசெய்து வேண்டினால், அவர் உடனே காவேரியைப் பெருகும்படி செய்வார். புஷ்பவனம் செழிக்கும். உன் கவலையும் நீங்கும்" என்றார்.

அப்படியே இந்திரன் விநாயகரைத் தியானம் செய்ய, விநாயகர் பிரசன்னமாகி அவனுடைய எண்ணத்தை பூர்த்தி செய்வதாக வரமளித்து மறைந்தார். உடனே குடகுநாட்டிற்கு வந்து அகஸ்தியருடைய



காவேரி உற்பத்தி.

கடத்தின்மேல் காக்கையின் உருவமாய் உட்கார்ந்து மூக்கினால் அப்படியே கடத்தைச் சாய்த்துவிட்டார். உடனே காவிரிநதி பெருக ஆரம்பித்தது. இதைக் கண்டு அகஸ்தியர் கோபமடைந்து, காக்கையை போ, போ, வென வெருட்டினார். காக்கையைக் காணோம். ஒரு பிரம்மசாரி நிற்பதைக் கண்டார். இது அவனுடைய காரியமாய்த்தானிருக்கவேண்டும் என்று கோபமடைந்து அவனைத் தலையில் குட்டுவதாய் நினைத்து வேகமாய்க் கிட்டினார். அப்பொழுதே விநாயகர் சுயரூப தரிசனங் கொடுத்தார். இதைக் கண்டு அகஸ்தியர் திடுக்கிட்டு விநாயகரை தண்டனிட்டு வணங்கி எழுந்து, தன் தலையிலேயே குட்டிக்கொண்டார். "நான் தங்களைத் தெரியாமல் குட்ட வந்தபடியால் அந்தக் குட்டு எனக்கே இருக்கட்டும்" என்றார்.

விநாயகரும், "என்முன் நின்று யார்குட்டிக் கொள்ளுகிறார்களோ அவர்களுக்கு சர்வகாரியங்களும் நிறைவேறும். தேவேந்திரன் கடுந் தவம் செய்வதன் நிமித்தம் நானே காக்கை உருவாகி வந்து குடத்தைக் கவிழ்த்துக் காவேரியைப் பெருக்ச் செய்தேன்." என்றார்.

அதுமுதல் விநாயகரைக் கண்டால் வணங்கித் தலையில் குட்டிக் கொள்வது வழக்கமா யிருக்கிறது.

## பெருமாளைச் சிவலிங்க மாக்கியது.

பிறகு அவ்விடமிருந்து அகஸ்தியர் திருக்குற்றாலத்தை யடைந்தார். அங்கே யுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள், "சிவனடியார்களைக் கோவிலுள்ளே விட

மாட்டோம்" என்றார்கள். அவர்களுடைய கடுமையான பேச்சுக்குப் பயந்து திரும்பிப்போய் வைஷ்ணவரைப் போலத் தானும் துவாதச நாமங்களை தரித்துக்கொண்டு வந்தார். உடனே அவரை வைஷ்ணவ ரெல்லோரும் மிக்க மரியாதை செய்து உள்ளே பகவானிடம் அழைத்துப் போய் பகவானைப் பூசை செய்யும்படி வேண்டினார்கள். பூசை செய்துகொண்டே அகஸ்தியர் தன்னுடைய கைகளால் பெருமாளுடைய தலையில் தடவிக் கொடுத்தார். உடனே அது சிவலிங்கமாய் மாறியது— இந்தப்படி சிவனும் விஷ்ணுவும் ஒன்றுதான் என்று அவர்களுக்கு ருஜுப் படுத்தினார். பிறகு, பொதிகையைச் சேர்ந்து தபோநிஷ்டையி லமர்ந்தார்.

## அஜாமுகி கர்வ பங்கம்.

காவேரி உற்பத்தியாகி சலம் பெருகின படியால் சீர்காழியில் புஷ்ப வனங்களெல்லாம் நன்றாய் புஷ்பித்தன. தேவேந்திரனும் மலர்களை யெடுத்து சிவனை அர்ச்சனை செய்து காலங் கழித்தான். இச்சமயத்தில் தேவர்களெல்லோரும் தேவேந்திரனிடம் வந்து "நீங்கள் இங்கே வந்து உட்கார்ந்திருந்தால் பிறகு எங்களுடைய கதி என்ன. எங்களை கவனிக்காமலிருக்கலாமா" என்றார்கள். தேவேந்திரன் இந்திராணியை (அரிஅர குமாரனை) சாஸ்தாவிடம் ஒப்புவித்து தேவர்களுடன் புறப்பட்டு கயிலாசத்துக்குச் சென்று சூரபன்மனுடைய வாதையைப் பற்றி முறையிட்டான் அந்த சமயத்தில் சங்கரன் சனகாதிகளுக்கு

ஞான உபதேசம் பண்ணிக்கொண்டிருந்த படியால் நந்திதேவருடைய உத்தரவின்பேரில் அங்கே காக்க வேண்டி வந்தது.

இப்படி சிலநாட்கள் சென்றன. சூரனுடைய தங்கையாகிய அஜாமுகியானவள் துன்முகி என்ற தன் தோழியுடன் புறப்பட்டு சீர்காழியிலுள்ள இந்த புஷ்பவனத்துக்குவந்தாள். இந்திராணியைக்கண்டாள். அவளைத்தனது அண்ணனாகிய சூரபன்மனுக்கு மனைவியாக்க எண்ணங்கொண்டாள். எவ்வளவுகேட்டும்அவள் சம்மதிக்காததால் அவளைப் பலவந்தமாய்க் கட்டிப் பிடித்துத் தூக்கிக்கொண்டு புறப்பட்டாள். இந்திராணியும் கோவென்றலறினாள்.

இச் சப்தத்தைக் கேட்டு அங்கே மரத்தடியில் வீற்றிருந்த சாஸ்தாவினுடைய கணங்களுள் ஒருவனாகிய மஹாகாளன் என்ற வேலைக்காரன் அவளை எவ்வளவு பயமுறுத்தியும் கேட்காததால் தன்னுடைய கத்தியை எடுத்து அவளுடைய இரு கைகளையும் வெட்டினான். தோழியினுடைய கைகளையும் வெட்டினான். அவளும் கீழே விழுந்து புரண்டு அழுதாள்.

உடனே துன்முகியானவள் அஜாமுகியைப் பார்த்து "ஆம், எதற்காக அழுகிறாய் நன்றாயிருக்கிறது. முந்தி தக்ஷன்செய்த யாகத்தில் இப்படித்தான் எத்தனையோபேர் அங்கஹீனர்களானார்கள். சில பேர் மூக்கை இழந்தார்கள். சிலர் தனத்தை இழந்தார்கள். சிலர் காதையும் கைகளையும் இழந்தார்கள். இதற்கெல்லாமா அழுகிறது" என்று சமாதானப் படுத்தினாள்.

இந்த சமாசாரத்தை நாரதர் கைலாசத்திலிருந்து இந்திரனுக்குத் தெரிவித்ததும் இந்திரன் சீர்காழிக்கு வந்து இந்திராணியைக் கூட்டிக்கொண்டு மேரு பர்வதத்தை யடைந்தான்.

## சயந்தன் சிறை

அஜமுகியானவள் சூரனிடம் வந்து நடந்த சமாசாரங்களைச் சொல்லி யழுதாள். (அவளுடைய கைகள் திரும்பியும் பிர்ம்மாவின் அநுக்ரஹத்தால் வளர்ந்து விட்டன.) தன் அத்தைக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்ட சூரகுமாரனான பானுகோபன் மிக்க கோப மடைந்து சீர்காழியிலுள்ள உபவனத்தை முழுமையும் தேடினான். இந்திரனைக் காண வில்லை. பூமியில் எல்லா இடங்களிலும் அலைந்து திரிந்து பார்த்தும் அகப்படவில்லை. ஆகையால் நேராகவே தேவேந்திர லோகத்துக்குப் போனான். ஐராவதத்தைக் கன்னத்திலறைந்து அதனுடைய தந்தங்களை முறித்து மூர்ச்சையடையச்செய்தான். இந்திர குமாரனாகிய சயந்தனையும் இன்னும் சகல சேனைகளையும் சிறையாகப் பிடித்துக்கொண்டு வந்து வீரமயேந்திரபுரியில் காராகிருகத்தில் அடைத்தான். ஐராவதம் சுவேதவனம் (திருவெண்காடு) என்னும் க்ஷேத்திரத்தை யடைந்து சங்கரனைக் குறித்து நீண்ட காலந் தவம்செய்து தன் தந்தங்கள் வளரப்பெற்று மகாமேரு பர்வதத்தை யடைந்தது. பிரகஸ்பதி யானவர் இப்படி ஷண்முகனுக்கு அசுரசரித்திரத்தைச் சொல்லி முடித்தார்.

# வீரமயேந்திர காண்டம்.

## வீரபாகு சூரனிடம் செல்லல்.

பிரகஸ்பதியால் சொல்லப்பட்ட அசுரசரித்திர முழுமையும் குஹன் காதுகளால் கேட்டு, தேவர்களை யெல்லாம் பார்த்து, "சூரனையும் அவனுடைய பந்துக் களெல்லோரையும் கொன்று உங்களுடைய் ஸ்திதியை நிலைநிறுத்தப் போகிறேன் சத்துருவின் பலாபலத்தை யறிந்து வர எந்த தூதனை அனுப்பலாம்" என்றார்.

தேவர்கள் எல்லோரும் கலந்து யோசித்து வீர பாகுவையே அனுப்பலாம் என்று தீர்மானித்து ஷண் முகனிடம் தெரிவித்தார்கள். ஷண்முகன் வீரபாகுவை ப்பார்த்தார் "ஏ வீரபாகு, நீ சூரனிடத்தில் போய், அவனெதிரில நின்றுகொண்டு நீ உன் அஹங் காரத்தை விட்டு விட்டு சயந்தன் முதலானவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து மரியாதையா யிருந் தால் பிழைப்பாய். இல்லாவிடில் நான் நேராகவே புறப்பட்டு வந்து சூரனையும் அவன் தம்பிகளையும் குழ ந்தைகளையும் கொன்று விடுவேனென்று நான் தெரிவி த்ததாகச் சொல்லி அவனுடைய எண்ணத்தை அறி ந்து வந்து எனக்குத் தெரியப்படுத்து" என்றார்.

அப்படியே வீரபாகு ஷண்முகனுடைய சரணங் களில் நமஸ்கரித்து, தேவர்களுடைய வார்த்தை யையும் மனதில் வைத்துக்கொண்டு சூரனுடைய நகரத்தை நோக்கிப் புறப்பட்டார். கந்தமாதனத்

தில் ஏறினுர். திடீரென்று பர்வதாகாரமாய் வளர்ந்தார் அசுரர்கள் நிறைந்து கோபுரங்களாலும் மண்டபங்களாலும் அலங்காரமாயிருக்கின்ற வீரமயேந்திரப் பட்டணத்தைப் பார்த்து அதைப்பொடியாய்ச் செய்திட வேண்டுமென்று நினைத்தார். தேவசேனாதிபதியான குகநாதனை மனதில் தியானித்தார். வேகமாய் சமுத்திரத்தைத் தாண்ட ஆரம்பித்தார் அச்சமயத்தில் அந்தபர்வதத்தின் குகையில் வசித்தசில தாரகனுடைய சேவகர்கள் இறந்தார்கள்.

மிகுந்த அட்டகாசத்துடன் புறப்பட்டார். பிறகு பர்வதமும் எப்போதும்போல உன்னதமாய் நின்றது விந்தியபர்வதத்தின் பக்கம் வரும்போது வீரபாகுவருகிற வேகத்தால் உண்டாகிற காற்றால் இழுக்கப்பட்டு பர்வதங்கள் ஆடிக்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் அசைந்தன.

மேகமண்டலம் சூரியமண்டலமெல்லாம் அசைந்தன. இலங்காபுரிக்குச் சமீபத்தில் வந்தவுடன் இலங்காதிபதியாகிய யாளிமுகனுடைய ஸேனாபதியான வீரசிங்கன் தன்னுடைய சேனைகளைத் திரட்டிக் கொண்டு வந்து, ஆகாசமார்க்கமாய் போகிறவனை பார்த்து, "யார் நீ" என்றான் "நான் சூரனிடம் போகிறேன். என் பெயர் தான் வீரபாகு, என்று சொல்லிக்கொண்டேவேகமாய்போகிறான், அவன் பேரில் இராக்கதர்கள் பாணங்களை விடுத்தார்கள். ஆகாசத்தில் வந்த ராக்ஷதர்களனைவரையும் வீரபாகு கொன்றுவிட்டு வேகமாய் இலங்கையில்குதித்தார். உடனே பட்டணம்

மிகவும் தாழ்ந்தது. அநேக அசுரர்கள் இறந்தார்கள். வெகுபேர் அங்கவீனர்களானார்கள். இவைகளை யெல்லாம் பார்த்து யாளிமுகனுடைய பிள்ளை அதிவீரன் கோபமடைந்து சேனைகளுடன் வந்து பேர்புரிந்து முதலில் ஒரு கையை இழந்தான். பிறகு தலை வெட்டப்பட்டு மாண்டான். அநேகமாய் சகல ராக்ஷஸர்களும் மாண்டார்கள்.

வீரபாகு உடனே வேகமாய் சூரநகரில் வடக்கு வாசல்பக்கம் போய்ச்சேர்ந்தார். அவ்விடத்திலகோரன் அதிகோரன் என்ற இருவர் காவல் புரிந்தார்கள். இரத கஜ துரகபதாதிகளடங்கிய சேனைகளைக் கண்ணுற்று அப்பக்கம்போனால் அபாயம்நேரும் என்று நினைத்துக் கிழக்கு வாசல் போனார். அவ்விடமும் சதுரங்க சேனைகளுடன் மஹிஷாக்ஷன், வீரபானு என்ற இருவர் காவலாயிருந்தார்கள். பிறகு தெற்கு வாசலில் போனார் அங்கே (ஆயிரந் தலைகளும் இரண்டாயிரங் கைகளும்) உள்ள கஜமுகன என்ற ராக்ஷஸன் காவல் புரிந்தான். கஜமுகன் வீரபாகுவைப்பார்த்து "நீ எந்த தேவனாலே அனுப்பிக்கப்பட்டாய். யார் நீ, எங்கேவந்தாய்" என்று கேட்டுக்கொண்டே ஒரு பர்வதத்தைப் பிடுங்கி வீரபாகுவின் தோளின் மேல் எறிந்தான். பர்வதம் சூர்ணமாகி விட்டது. இருவரும் குத்துச் சண்டை செய்தார்கள். வீரபாகு அவனுடைய ஆயிரங்கைகளை அறுத்தார். பிறகும் கோபத்துடன் எதிர்த்து வந்த அவனைக் காலால் உதைத்து எமபுரத்துக்கு அனுப்பினார்.

அப்பொழுதே வீரபாகு சூக்ஷ்ம ரூபத்தை எடுத்துக்கொண்டு மேற்கு வாசல்போய் கோபுரத்தின் உச்சியிலேறினார். பட்டணம் முழுமையும் கண்ணாரக் கண்டார். "ஆஹா, நம்மைப்போல பாக்கியசாலி கிடையவே கிடையாது. இப்பட்டணத்தைப் பார்க்க ஆயிரங் கண்களல்லவோ வேண்டும். பிரம்மலோகம் விஷ்ணு லோகம் கூட இவ்வளவு அழகாயில்லை" என்றார்.

பிறகு கோபுரத்தை விட்டு இறங்கினார். வீதிகளில் சென்றார். ஒவ்வொரு இடங்களிலும் ஆச்சரியங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே போகையில், ஒரு இடத்தில், சயந்தன் முதலான வர்களைப் பார்த்து ராக்ஷஸர்கள் "இந்திரனும் இந்திராணியும் எங்கே போனார்கள் சொல்லுகிறாயா இல்லையா? இல்லாவிடில் சீக்கிரம் உங்களையெல்லாம் கொன்று விடுவோம்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள். இந்த குரூரமான வார்த்தைகளைக் கேட்டு நடுங்கி சயந்தன் முதலான தேவர்கள் சங்கரனைத் தியானம் செய்து, 'தாங்கள் ஆதி காலத்தில் திரிபுராசுரர்களுடைய, பயத்தினின்றும் எங்களை விடுவிக்க வில்லையா? காலகூட விஷத்தைச் சாப்பிட்டு எங்களைக் காக்கவில்லையா? சர்வ லோகமும் தூங்கிப்போய் விட்டாலும் தாங்கள் எப்போதும் நித்திரை யில்லாமல் இருந்து இரட்சிக்கிறீர்கள். இருந்தாலும் நாங்கள் செய்த கர்மத்தின் பலனை நாங்கள் அனுபவிக்க வேண்டுமல்லவா? அதற்குத் தான் நீங்கள் என்ன செய்வீர்கள். இந்தி

ரன் இந்திராணி இருவர்களும் எங்கேயோ தெரிய வில்லையே! வெள்ளையானை எங்கேயோவே! நம் சாரதி யாகிய மாதலி எங்கே யிருக்கிறனோ தெரிகிலலையே நான் இப்படி இருக்கும் நிலைமை இந்திரனுக்குத் தெரியுமோ தெரியாதோ. ஒன்றும் தெரியவில்லையே! நான் என்ன செய்வேன்! ஈசா, ஜகதீசா, பரமேசா, என்று நானாவிதமாய் அரனைத் துதித்து அழுத கண்ணீருடன் தூங்கி விட்டார்கள். அச்சமயத்தில் "வங்கார மார்பிலணி தாரொடுபர் கோடசைய, கொந்தார மாலை குழ லாரமொடு தோள்புரள, வண்காதி லோலைகதிர் போலவொளி வீசயிதழ் மலர்போல" திவ்விய சுந்தர ரூபத்தோடு ஷண்முகன் சுவப்பனத்தில் தரிசனந் தந்து "விசனம் வேண்டாம். தேவேந்திரனும் இந்திராணியும் மிகவும் க்ஷேமமாயிருக்கிறார்கள். சீக்கிரத்தில் இவ்விடம் என்னுடைய தூதன் வீரபாகு வருவான் நான் சூரனையும் அவன் தம்பிகளையும் சேனைகளையும் சீக்கிரத்தில் கொல்லுவேன். நீங்கள் க்ஷேமமடைவீர்கள். பயம் வேண்டாம்" என்று சொல்லி மறைந்தார். தேவர்களெல்லோரும் உடனே நித்திரை நீங்கி எழுந்தார்கள். "நான் ஒரு சுவப்பனம் கண்டேன்" "நீதான் கண்டாயோ" "நான் மாத்திரம் காணவில்லையோ." என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு எல்லோரும் ஒரே சுவப்பனத்தைக் கண்டதனால் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். அதேசமயத் தில் வீரபாகு அவ்விடம் வந்து சேர்ந்தார். அசுரர்களை எல்லாம் மயக்கித் தூங்கும்படிச்செய்து சயந்தனைப்

பார்த்து" உன் பிதாவும் மகாவிஷ்ணுவும் பிர்ம்மதே வரும் கைலாயத்துக்குப் போய்ப் பரமசிவனைத் துதி செய்து சூரபதுமனுடைய உபத்திரவங்களைச் சொன்ன தன் பேரில் அவர் நம்முடைய க்ஷேமத்திற்காக ஒரு புத்திரனைப் பார்வதியிடம் உற்பத்தி பண்ணினார். அப் பேர்ப்பட்ட சம்புகுமாரன் சர்வ சேனைகளுடனும் புறப் பட்டு செந்திநகருககு வந்திருக்கிறார். உன் தகப்பனார், உன்னுடைய தாயாகிய இந்திராணி மேரு பர்வதத்தில் இருப்பதாக உன்னிடம் சொல்லச்சொன்னார். சூரனு டைய எண்ணங்களைத் தெரிந்துகொள்ள இவ்விடம் வந்திருக்கிறேன். குஹன் தாரகனையும் கிரௌஞ்சனை யும் கொன்று விட்டார். சீக்கிரத்தில் சூரபத்மன் முத லான மற்றவர்களையும் கொன்று உங்களை இரட்சிப் பார் என்றார்.

தேவர்கள் "நாங்கள் எல்லோரும் இப்போது தான் சுவப்பனம் கண்டோம் அப்படியே தாங்கள் உடனே வந்து விட்டீர் என்று தங்களுடைய சந்தோ ஷத்தைக் காட்டினார்கள்.

இப்படிப்பேசி முடிந்தவுடனே வீரபாகு வெளிக் கிளம்பினார் இராக்கதர்களும் மூர்ச்சை தெளிந்தார்கள் அந்த சூக்ஷ்மரூபத்தோடு வீதியிலுள்ள ஆச்சரியங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே சூரனரண்மனை வந் தார் அவ்விடத்தில் ஆயிரம் யோசனை விஸ்தீர்ணமுள்ள அழகானமண்டபத்தில் அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாடி க்கொண்டிருப்பதையும் அசுரர்கள் கூட்டமாய்ச் சூழ்ந் திருப்பதையும் நானுவித ஆபரணங்களணிந்து கர்ண

குண்டலங்களோடும் திவ்வியமான மந்தகாசத்தோடும் நெற்றியில் திரிபுண்ட்ரமாய் தரித்த விபூதியோடும். அனேகபாஷைகளைப் பேசும் திறமைவாய்ந்த சூரபதுமன் நவரத்தினமயமான சிங்காதனத்தில் வீற்றிருப்பதையும் பார்த்தார் உடனே வீரபாகுவுக்குத் தானும் எதிரேஒரு சிங்காதனத்தில் உட்கார்ந்தால்தான் சூரன் தன்னோடுபேசுவான் என்று தோன்றிற்று. ஆகையால் குஹனை தியானித்தார். ஷண்முகனுடைய கிருபையால் நானாவித ரத்தினகசிதமான சூரனுடைய சிங்காதனத்தைக் காட்டிலும் இன்னம் அதிக அழகாயும் உயரமாயும் உள்ள சிங்காதனம் வந்துசேர்ந்தது அந்த ஆசனத்தின்மேல் அதனுடையபிரகாசத்தைக்காட்டிலும் அதிக தேசோமயமாய் வீரபாகு விளங்கினர். அப்படிப்பட்ட வீரபாகுவை ராக்ஷஸர்கள் கண்டு ஆச்சரியங்கொண்டு இவன் பிரம்மாவா சங்கரனா மஹாவிஷ்ணுவா ஒன்றும் புரியவில்லையே. துவாரபாலகர்களை எல்லாம் ஏமாற்றி எப்படி இவன் உள்ளே நுழைந்தானென்று யோசிக்கிறார்கள்.

## சூர வீர ஸம்வாதம்

சூரன்:—"யார் நீ. எங்கிருந்து வந்தாய் எதற்காக வந்தாய்? மகேந்திரஜாலவித்தைஉனக்குத்தெரியுமோ? நீ நன்றாய் அப்பியாசம் செய்திருக்கிறாய். பிரம்மாதி தேவர்களெல்லோரும் என் எதிரே உட்கார பயப்படுவார்கள். நீ திவ்யாலங்காரங்கள் செய்துகொண்டு என் எதிரே சிம்மாதனத்தில் வீற்றிருக்கிறாய். உன்னுடைய நெஞ்சு தைரியம் என்ன? இந்த வித்தை நீ நன்றாய்ச்

செய்திருக்கிறபடியால் உன்னை நான் கொல்லுவதற்கு இஷ்டப்படவில்லை. நீ இங்கு வந்த காரணமென்ன சொல்லு" என்றான்.

விராகு:—(சிரித்து) சொல்லுகிறேன். கர்வத்தை விட்டு விட்டு கவனமாய்க்கேள். பிரம்மா விஷ்ணுவாதி தேவர்களெல்லாம் உன்னுடைய உபத்திரவத்தைச் சகிக்க மாட்டாமல் கைலாஸத்தை யடைந்து தேவ தேவனாகியும் ஸர்வலோகத்துக்கும் அபய மளிப்பவனாகியு முள்ள மகாதேவனுடைய சர ணங்களில் விழுந்து, "நாங்கள் சூரன் வாதையால் மிகவும் வருந்துகிறோம். தாங்கள் சீக்கிரம் பார்வதி தேவியினிடம் ஒரு குமாரனை உற்பத்திசெய்து அசுரர் களைக் கொன்று எங்களை இரட்சித்தருள வேண்டும்" என்று வேண்டினதற்கு அவரும், "அப்படியே ஆகட் டும்" என்று சொல்லி கொஞ்சகாலத்திற் கெல் லாம் ஒரு குமாரனை உண்டாக்கி அவரைப்பார்த்து நீ தேவர்களுக்கு சேனாதிபதியாயிருந்து சூரபதுமன் முதலான அசுரர்களை சீக்கிரம் வேரற ஒழித்து தேவர் களை அவர்களுடைய பதவிகளில் வைக்கவேண்டும்" என்று சொன்னார். அப்படியே புறப்பட்டு வரும் வழி யில் குமாரன் கிரௌஞ்சனையும் தங்களுடைய தம்பி யாகிய தாரகனையும் கொன்று இப்பொழுது செந்தி நகரில்வந்திருக்கிறார். தயாவிஷயமாய்த்தங்களுக்குஒரு புத்தி சொல்லச் சொன்னார். சயந்தன் முதலான சகல தேவர்களையும் முன்போல காராகிருஹத்திலிருந்து விடுவித்து விடு. இல்லாவிடில் நான் இப்போதே வந்து

உன்னைக் கொன்றுவிடுவேன். இது நிச்சயம்" என்று சொல்லச் சொன்னார் என்றான்.

சூரன்:—(பக்கமாய், கர்வத்தை விட்டுவிடு என்றான். ஜயந்தாதி தேவர்களை எல்லாரையும் விட்டுவிடு என்றான். ஆ) நெறநெற வென்று பற்களைக் கடித்து கண்கள் சிவந்து, அதி கோபத்துடன் வீரபாகுவைப் பார்த்து, "குழந்தை யானபடியால் அவன் என்னுடைய பலம் எவ்வளவென்று அறியவில்லை. தாரக வதத்தைக் கேள்விப்பட்ட வுடனேயே அவனைக் கொல்லவேண்டும் என்று புறப்பட்டேன். ஆனால் உடனே ஒரு சிறு குழந்தையைப் போய்க் கொல்லுவது தருமமல்ல. நம்முடைய மானத்தை நாம் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று நின்றுவிட்டேன். அவனுக்கு மதம் ஜாஸ்தியா யிருக்கும் பக்ஷத்தில் நாளை தினமே சேனைகளையனுப்பித்து அவனை வென்றுவிடுகிறேன். சயந்தாதிகளையும் விடப்போகிறதில்லை. நாளையதினம் மற்ற தேவர்களையும் அவனையும் கூட இவ்விடம் சிறையில் அடைக்கப்போகிறேன்" என்றான்

வீரபாகு:—"கந்தஸாமியுடைய சமாசாரந் தெரியாமல், அடா முட்டாளே, இது குழந்தை என்றாய், ஒன்றும் தெரியவில்லை என்றாய். அவர் தேவாதி தேவனுடைய மூர்த்தியே. அவருக்கு கந்தசாமி என்று பெயர். அவருடைய தேகத்திலிருந்து சகல அண்டங்களும் உற்பத்தியாகி அதிலேயே திரும்பியும் மறைகின்றன. தெரியுமா? நான் தூதனாக வந்திருக்கிறபடி

யால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இல்லாவிடில் இப்பொழுதே உன்னை அவமானப் படுத்திவிடுவேன்" என்றான்.

உடனே சூரன் கோபமடைந்து ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் உள்ள ஆயிரக் கணக்கான ராட்சசர்களை ஏவ, அவர்கள் உடனே வீரபாகுவைச் சூழ்ந்துகொண்டார்கள். வீரபாகு அவர் எல்லாரையும் கைகளால் தூக்கிப் பூமியில் தாக்கவே எல்லோரும் பிராண னிழந்தார்கள்.

## வீரன் ஷண்முகனிடம் திரும்பி வருதல்.

வீரபாகு சூரனுடைய சந்நிதியிலேயே ஒரு கண நேரத்தில் ஆயிரக்கணக்கான இராக்கதர்களைக் கொன்று விட்டுப் புறப்பட்டான். வீரபாகுவின் சிங்காதனமும் மறைந்தது. உடனே சூரன் சதமுகனை ஏவினான். சதமுகனும் சேனைகளுடன் யுத்தத்துக்கு வந்தான். வீரபாகு வானவர். இருபதாயிரம் கும்பங்களுள்ள ஒரு பெரிய கோபுரத்தைப் பிடுங்கி எறிந்த வுடனே அவனுடைய சேனைகளெல்லாம் அழிந்தன. இன்னொரு கோபுரத்தைப் பிடுங்கி சதமுகன் மேல் எறிந்தார். ஆனால் சதமுகன் பாணங்களாலே கோபுரத்தைச் சூர்ணம் பண்ணி பிறகும் அனேக பாணங்களை விட்டான். வீரபாகு இவனுடைய தனுஸ்ஸை முறித்தார். சதமுகன், தன்னுடைய இருநூறு கைகளாலும் அவனைக் கட்டிப் பிடிக்க முயன்றான். வீரபாகு அச்சமயத்தில் அவனைக் கீழே தள்ளி அவனுடைய மார்பில் ஒரு காலை

ஊன்றி மற்ரெருகாலால் தேங்காய்களைப் பிடுங்குவதை ப்போல நூறுதலைகளையும் உலுக்கிச் சாகடித்தார்.

பிறகு மிகவும் அற்புதமான வடிவத்தை எடுத்துக் கொண்டார். காலால் பூமியை இடித்தார். உடனே அவ் விடம் பூமியைஜலம் மூடிக்கொண்டது சிலர் ஜலத்தில் இறந்தார்கள் மறுபடியும் ஐம்பது வெள்ளம் அவுணச் சேனைகள் வந்து எதிர்த்தார்கள். அவர்களையும் கைக ளால் குத்தியும் அறைந்தும், கால்களால் உதைத்தும் மிதித்தும் சூரனுடைய பட்டணத்தில் உள்ள துவார பாலசர்களை யெல்லாங்கொன்ருர். சூரனுடைய ஆஸ் தான மண்டபத்தில் போய் குதித்தார். அவ்வேகத் தினல் மண்டபம் இடிந்தது. அடிக்கடி இவர் குதிப்பத ஞல் அனேகமாய் பட்டணம்முழுவதுமே இடிந்தது. இவர் அட்டகாசம் பண்ணி மரங்களைப்பிடுங்கி அடித் தார். இதனுல் சிலர் இறந்தார்; சிலர் தலைவிரிகோல மாய் வஸ்திர மில்லாமலே ஒடிஞர்கள் இதைக் கேள்விப்பட்டு சூரன் ஐந்நூறு முகங்களும் ஆயிரம் கைகளும் உள்ள அனேக அவுணர்களை ஏவினன். அவர்கள் இவனைச்சூழ்ந்து கொள்ளவே அவன் பனைமரத்தைத தூக்கி அவர்கள் மேலடித்ததனுல் அவர்களெல்லாரும் இறந்தார்கள். தூதர் மூலமாய் இதைக் கேள்விப்பட்டு சூரன் கோபமடைந்து தன்னு டைய குமாரனுகிய வஜ்ரபாகுவையுத்தம்செய்ய அனுப் பித்தான் மந்திரி குமாரர்களும் சேனபதி குமாரர்களும் கூடவே சென்ருர்கள். ரதகஜதுரக பதாதிகள் அடங் கிய பெரிய சேனையும் சென்றது. ரணவாத்தியங்களை

கோஷம் பண்ணிக்கொண்டு புறப்பட்டுப் போகும் போதே சகுனம் ஒன்றும் நன்றாயில்லை. வீரபாகுவின் சமீபத்தில் வஜ்ரபாகு வந்தான். அச்சமயத்தில் வீர பாகு "நான் இவனைச்சீக்கிரம் கொன்றுவிட்டு தேவ லோகம் போவேன். கொல்லாவிட்டால் நான் முருகனு டைய தூதனல்ல." என்றார். இரண்டுபேரும் போர் செய்ய ஆரம்பித்தார்கள். வீரபாகுவின் மார்பில் இரத் தப்பிரவாகம் உண்டாகியது. உடனே கோபம் பிறந்து சில அவுணர்களைத் தூக்கி எறிய அவர்கள் வேறு அண் டத்திற் போய் விழுந்திறந்தார்கள், சிலரை பூமியில் சுழ ற்றி அடித்தார், சிலரைக் காலைவாரி இழுத்தெறிந்தார். இன்னும் சிலரைக் கன்னத்தில் அறைந்து கொன்றார் மற்றும் சில பேர்களைத் தலைமயிரைப் பிடித்துச் சுழற்றி சமுத்திர மத்தியில் எறிந்தார். பர்வதங் களின் பாறைகளின் மேல் சிலரை எறிந்தார். காலால் உதைத்து சிலரைக் கொன்றார், கைக்குத்துச் சண்டையால் சிலரைக் கொன்றார். சிலரைக் காலை வாரி தூக்கி மண்டையை உடைத்து ஆகாசத்தில் எறிந்தார் தலையில் ஒருகுத்து குத்தினதால் சிலருக்கு தலை வயிற் றுக்குள் போய் விட்டது. கையால சிலரை நசுக்கிவிட் டார் ஒருவனை ஆகாசத்தில் எறிந்து அவன் வேகமாய் தூரத்திலிருந்து விழும்போது இன்னொருவனைத் தூக்கி எறிந்து அவன்பேரில் மோதினார் இப்படி எல்லா அவு ணர்களையும் கொன்று சேனாபதிகுமாரர்களின் பேரில் ஆலமரத்தைத் தூக்கியடித்தார். அவர்களும் உயிர் நீங்கி னார்கள். பிறகு அதிகோபத்துடன் வந்து வஜ்ரபாகு

வீரபாகுவின்மேல் பாணங்களை வர்ஷித்தான். வீரபாகு அவைகளைப் பொடியாயடித்தார்.

வஜ்ரபாகு பிறகு நாராச பாணங்களை விட்டான். வீரபாகு அவைகளை முசலாயுதத்தால் தடுத்துப் பொடி செய்தார். பின்பு வஜ்ரபாகு ஆயிரம் பாணங்களை ஏவ அவைகளைக் கையாலேயே வீரபாகு பொடியாய்ச் செய்தார். மறுபடியும் வஜ்ரபாகு வீரபாகுவினுடைய தேகத்தின் ஒவ்வொரு அங்கங்களிலும் ஆயிரமாயிரம் பாணங்கள் அழுந்தும்படி விடவே, இந்த பாணங்கள் முசலாயுதத்தை வெட்டி விட்டு வீரபாகுவின் தேகமுழுவதிலும் பாய்ந்தன. வீரபாகு மூர்ச்சை யடைந்ததுபோல கொஞ்ச நேரம் நின்றார். மூர்ச்சை தெளிந்து உடனே கோபமடைந்து காலினால் வஜ்ரபாகுவின் அழகிய ரதத்தை ஒரு உதை கொடுத்தார். அது துணுக்கு துணுக்குகளாய் உடைந்து போயிற்று. வஜ்ரபாகு உடனே வேறு பெரிய தேரில் ஏறி ஆயிரம் பாணங்களை வீரபாகுவின் நெற்றியில் விட்டான். அவ்வளவு பாணங்களையும் வீரபாகு கையினால் தடுத்து இரதத்தை ஆகாசத்தில் இலட்ச யோசனை தூரத்தில எறிந்தார். அவ்வளவு தூரத்திலிருந்து கீழேவிழுந்து, இரதம் பொடியாய் நொறுங்கிவிட்டது. வஜ்ரபாகு கீழே விழுந்தான். இருந்தாலும் மிகவும் கோபத்தோடு வில்லை எடுத்தான. வீரபாகு அதை உடனே முறித்தார். பிறகும் கத்தியை எடுத்துக் கொண்டு எதிரே வந்தான் உடனே வீரபாகு தேகன் சக்ராயுதத்தைச் சுழற்றி எறிந்து அவனுடைய

கைகளை அறுத்து கட்கா யுதத்தால் அவனுடைய தலைகளை யறுத்தார்.

இவ்விதமாக சகல அசுரர்களையும் கொன்று விட்டு வீரபாகு கந்தசாமியிடம் போக நினைத்தார் சூரியனும் அஸ்தமித்தது. கந்தனை நிந்தனை செய்ததனால் சூரன் தகுந்தபலனை அனுபவித்தா னென்று தெரிந்து கொண்டு வீரபாகு வெளிக் கிளம்பினார். சமுத்திரத்தை வேகமாய்த் தாண்டிக் கொண்டே கணநேரத்தில் இலங்கைமா நகரத்துக்கு வந்தார். இது இலங்கேசனான யாளிமுகனுக்குத் தெரிந்தது. அவனுக்கு ஆயிரந் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் உண்டு அவனுடைய புத்திரனை ஏற்கனவே வீரபாகு கொன்றிருக்கிறபடியால் யாளிமுகனசேனைகளோடு தயாராய்ப் புறப்பட்டு வீரபாகுவுக்கெதிரே வந்து நின்று "என்னுடைய புத்திரனை நீ கொன்றிருக்கிற படியால் உன்னை நான் இப்போதே கொல்லப்போகிறேன் என்னுடைய பலத்தைபார்" என்றான்.

வீரபாகு (சிரித்து) உனக்கு ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம கைகளும் இருக்கின்றன. எனக்கு ஒரு தலைதான். உனனை நான் துரத்திவிடுவேன் பார் நீ என்ன செய்யமுடியுமோ செய் என்றார். உடனே சேனைகளால் கூர்மையான பாணங்கள் விடப்பட்டன. அவைகளைக் கத்தியால் வீரபாகு வெட்டி எறிந்தார். பிறகு பர்வதங்களை எறிந்தார்கள் அவைகள் சரீரத்தில் பட்டு பொடியாய்ப் போயின. கட்கத்தினால் இலங்கேச

னுடைய ஆயிரந்தலைகளையும் இண்டாயிரங் கைகளையும் அறுத்தார்.

பிறகு வீரபாகு சமுத்திரத்தைத் தாண்டி கந்தமாதன பர்வதத்தையடைந்து செந்திநகரில் கந்தசாமியிருக்குமிடம் வந்துசேர்ந்தார். தனது சுயரூபத்தை எடுத்துக் கொண்டார். தேவர்களெல்லோரும் அவரை நமஸ்கரித்து க்ஷேமங்கள் விசாரித்தார்கள். வீரபாகு தேவர் தேவேந்திரனிடம் விசேஷமாகவே பேசினார்.

கொஞ்ச நேரத்திற் கெல்லாம வீரபாகுவும் தேவர்களும் ஆறுமுகனிடம் சென்றார்கள் வீரயாகு குஹப்பெருமானை நமஸ்கரித்து தோத்திரம் செய்து வணக்கமாய் நின்றார். அங்கே என்ன சமாசாரம் நடந்தது என்று ஷண்முகன் கேட்டவுடன் " தாங்கள் சொன்ன பிரகாரமே எல்லா வார்த்தைகளையும் சொன்னேன்' அவைகளை அவ்வவுணன் கேட்கவில்லை. என்னை அடித்துக் கொல்வதற்கு சிலபேர்களை ஏவினன. தங்களுடைய கிருபையால் அவர்களைக் கொன்று இவ்விடம் வந்தேன்" என்றார். ஷண்முகன், வீரபாகுவைப் பார்த்து "நீ மிகவும் சிரமமடைந்திருக்கிறாய், என்றார் மற்றுமுள்ள தேவர்களைப் பார்த்து என் வாக்கியத்தை அவ்விராக்ஷதன் அங்கீகரிக்காததால் அவனையும் அவன் பந்துக்களையும் எல்லாரையும் கொன்று உங்களுக்கு க்ஷேமமான பதவியை சீக்கிரம் கொடுக்கிறேன் என்றார்.

## சூரன் மந்திரா லோசனை.

புத்திரனுக்கு நேர்ந்த ஆபத்தைக் கேட்டு சூரபத்மனும் பதுமகோமளையும் மற்று முள்ள மந்தர்

அவரும் மிகவும் துக்கித்தழுதார்கள். அச்சமயத்தில் மந்திரியான தருமகோபன் வேகமாய் வந்து சூரனைப் பார்த்து "அரசே! ஐசுவரியம், கீர்த்தி, புத்தி, தைரியம், சௌரியம் எல்லாவற்றிற்கும் தாங்கள் இருப்பிடமல்லவா? தாங்கள் சகல தந்திரங்களும் தெரிந்தவராயிற்றே, இப்பொழுது ஏன் மூடனைப் போலி அழுகிறீர்களே. பிரம்மாதி தேவர்களெல்லாம் தங்களை இப்படிப் பட்ட நிலைமையில் பார்த்தால் சிரிக்க மாட்டார்களா? விசனப்படாதேயுங்கள். எவனோ ஒரு தூதன் செய்த காரியத்தில் இவ்வளவு துக்கிக்கலாமா? தங்கள் புத்திரனுக்கு இது பரியந்தம் தான் ஆயுள் பிரமாணம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இல்லாவிடில் ஒரு தூதனால் கொல்ல முடியுமா?" என்றான் இப்படி மற்பலபுத்திகள்சொன்னபிறகு, சூரன்மூர்ச்சை தெளிந்து எழுந்து நாலாபக்கமும் தலையைத் திருப்பி "அந்த தூதன் இருக்கிறானா போய் விட்டானா?" என்றான் பக்கத்திலிருப்பவர்களெல்லோரும், அவன்போய் விட்டானென்று தெரிவித்தார்கள். உடனே ஒரு தூதனை அனுப்பி பிரமனைக் கூட்டி வரும்படி சொன்னான். அந்த தூதன், பிரம்மாவானவர் தன் முன்னுடைய பக்கத்தில் உட்கார்ந் திருப்பதைப் பார்த்து, இந்தத்தகவலைத் தெரிவித்தான். சூரன் கோபமடைந்து, இன்னொரு அண்டத்திலிருக்கும்படியான பிரம்மனைக் கூட்டிவரச் சொன்னான். அந்த பிரம்மா வந்தவுடன் சூரபதுமனுடைய உத்தரவின்படி வீரமகேந்திரபுரியைத் திரும்பவும் மூர்த்தி இருந்த

போலவே புறப்பித்து தக்க சம்மானம் பெற்றுச்-சென்றான்.

இச்சமயத்தில் வெளியில் போயிருந்த தூதர்கள் வந்து சேர்ந்து சூரனைப்பார்த்து, "தங்களுடைய ஆஞ்ஞையின் பிரகாரம் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டு வந்திருக்கிறோம். செந்தி நகரில் கந்தன் பூதர்களுடனும் இரண்டாயிரம் வெள்ளம் சேனைகளுடனும் நூற்றெட்டு சேனாதிபதிகளுடனும் இலக்கத்தொன்பது வீரர்களுடனும் பிரகாசிக்கிறார். தங்கள் தம்பியாகிய தாரகனைக் கொன்றுவிட்டு நேராக வந்திருக்கிறார். பிரம்ம விஷ்ணுவாதிகள் பக்கத்தில் இருந்து பணிவிடை செய்கிறார்கள். வீரபாகுவைத் தங்களிடம் அனுப்பித்து தங்களுடைய சேனையின் பலம் எவ்வளவு என்று தெரிந்துகொண் டிருக்கிறார். இலங்காதிபதியான யாளி முகனை வீரபாகு தூதன் கொன்றுவிட்டான். இலங்கையையும் எரித்துவிட்டான். தங்களுடைய சமாசாரங்களெல்லாம் வீரபாகுவால் நன்றாயறிந்துகொண்டு மிகவும் கோபத்துடன் சீக்கிரமே யுத்தம் ஆரம்பிப்பதாக பிரம்ம விஷ்ணு முதலானவர்களோடு சொல்லிக்கொண் டிருக்கிறார்" என்றார்கள்.

இவ்விதமாய் தூதர்கள் சொன்ன வார்த்தையைக் கேட்டு சூரபத்மன் உடனே சிங்கமுகனையும் தன் பிள்ளைகளையும் சேனாதிபதிகளையும் இரகசியங்களையறிந்த மந்திரிகளையும் வரவழைத்து அவர்களைப் பார்த்து "எல்லோரும் ஜாக்கிரதையாய்க் கேளுங்கள்

பிரம்மா விஷ்ணு முதலான தேவர்களெல்லோரும் மகாதேவனிடம் போய், சூரபதுமன் தேவர்களையெல்லாம் மிகவும் துன்புறுத்துகிறான். தாங்கள் தான் எங்களைக் காக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள் அந்தத்தேவர்களுடைய வார்த்தையைக்கேட்டு குமாரனை உண்டு பண்ணி சேனைகளோடு கூட அந்தக் குழந்தையை அனுப்பியிருக்கிறார்' தேவர்களோடு அவனும் செந்திநகரில் வந்திருக்கிறான் பிரும்மா விஷ்ணு இந்திரன் முதலானவர்கள் அடிக்கடி அவனிடத்தில் ஏதோ கோட் சொல்லிக் கொடுத்து நம்மோடு நாளைக்கே யுத்தம் செய்வதாக நிச்சயம் செய்திருக்கிறார்கள். தாரகனை இவன் கொன்றானே அன்றைய தினமே நான் இவனைக் கொல்லுவதற்காக சேனைகளுடன் புறப்பட்டேன். ஒரு குழந்தையை எதிர்த்துச் சூரன் புறப்பட்டான் என்று அபகீர்த்தி உண்டாகுமே என்று திரும்பி விட்டேன். இனிமேல் என்ன செய்யலாம் சொல்லுங்கள்'' என்றான்.

மயூரன்:— தாரகனைக் கொன்று விட்டானென்று சொல்லுகிறீர்கள். இன்னமும் அவனை எப்படிக் குழந்தை என்றீர்கள். தங்களைப் போன்ற ஸகலமும் தெரிந்தவர்கள் இப்படிச் சொல்லலாமா? தங்களுடைய குழந்தையாகிய வஜ்ரபாகுவைக் கொன்ற வீரபாகுவை கேவலுமரன் தூதனென்று நினைக்கிறீர்கள். பெரிய சேனைக்கூட்டத்தோடும் வந்திருக்கிறபடியால் யுத்தமே வேண்டாம்'' என்றான்.

துர்க்குணன்:— குழந்தையையும் பூத சேனைகளையும் ஜெயிக்க நாம் நேரே போகக் கூடாது. சேனாபதிகளைச் சேனைகளுடன் அனுப்பி அக்குழந்தையை ஜெயிக்கவேண்டும்" என்றான்.

தருமகோபன்:—" தங்களுடைய குமாரர்கள் பானுகோபன் அக்கினிமுகன் ஆகிய இருவருக்குள் யாரோடாவது அவன் நின்று சண்டைபோட முடியுமா? தாரகனை என்னமோ அவன் கொன்றது உண்மைதான். இருந்தாலும் இவர்கள் விடும் அஸ்திரங்களுக்குப் பிரதியாக அஸ்திரங்கள் ஏதாவது விடத்தெரியுமா? அல்லது முடியுமா? குழந்தையல்லவா? கிரௌஞ்சபர்வதத்தைப் பிளந்தானே என்றால், அது அகஸ்தியருடைய சாபத்தால் ஏற்பட்டது. ஆகையால் சேனாபதியை ஏவினால் அவன் அக்குழந்தையைக் கொன்றுவிடுவான்" என்றான்.

காலஜித்:—" பிரம்மா விஷ்ணு இந்திரன் எலலோரையும் தாங்கள் ஜெயித்திருக்கிறீர்களே! தங்கள் சேனையை விட்டு வேகமாய்ப் போய் ஜெயித்து வரச் சொல்லுங்கள். அல்லது நானே போகின்றேன் உத்தரவு கொடுங்கள்" என்றான்.

சண்டன்:—இக் குழந்தையையாவது பூதகணங்களையாவது ஜெயிக்கிறதற்கு தங்களைப் போன்றவர்களெல்லாம் இவ்வளவு விசாரப்படலாமா? நான் போய் ஒரு நிமிஷத்தில் எல்லோரையும் ஜெயித்து கப்பலில் ஏற்றிவிடுகிறேன் இது நிச்சயம்" என்றான்.

அனலன்:— நான்மாத்திரம் போனால் தேவர்களை யெல்லாரையும் ஜெயித்துவிட்டு வருவேன் என்றான்.

சிங்கன்:— இந்திரனுக்கு உதவியாய் வந்திருக்கிற குழந்தையின் நிமித்தம் இவ்வளவு விசாரமா? அண்டங்களில் உள்ள எல்லா சேனைகளும் இங்கேவந்து சேர்ந்தால், அவர்களுடைய உதவியால் நான் அவனை ஜெயித்துவிட்டுத் தான் திரும்புவேன். தங்களுடைய உத்தரவுக்கு காத்துக்கொண்டிருக்கிறேன்." என்றான்.

மந்திரிகளும் ஸேனாபதிகளும் இப்படிப் பேசி முடித்தார்கள். உடனே புத்திரனாகிய பானுகோபன் எழுந்து "எப்பொழுது தாரகன் கிரௌஞ்சன் ஆகிய இருவரையும் கொன்றானோ அப்பொழுதே தாங்கள் என்னிடம் ஒருவார்த்தை சொல்லியிருக்கக்கூடாதா? இவ் விளங் குழந்தையின்பலத்தை யறிவதற்கு தூதர்களை விட்டீர்கள். தங்களுடைய வீரியமும் பலமும் எவ்வளவென்று தங்களுக்கே தெரியவில்லை. என்னை மாத்திரம் உத்தரவு செய்யுங்கள்" என்றான்.

இரணியன்:—குழந்தையை செலிப்பதற்கு ஒரு ஆலோசனை சபை கூட்டினதைப் பார்த்து எல்லோரும் சிரிக்கிறார்கள். பானுகோபன் போனால் அபகீர்த்தி தான் உண்டாகும். என்னை மாத்திரம் அனுப்புங்கள். அந்தக் குழந்தையையும் பக்கத்திலுள்ள சகல சேனைகளையும் அப்படியே கொன்றுவிட்டு வந்துவிடுகிறேன்" என்றான்.

அக்கினிமுகன்:— "தம்முடைய சகோதரனாகிய தாரகனையும் எம்முடைய சகோதரனாகிய வஜ்ர

பாருணவையும் சிவகுமாரனும் அவனால் அனுப்பப்பட்ட தூதனும் முறையே கொன்றுவிட்டார்கள். ஆகையால் சேனைகளோடு புறப்பட்டுப் போய் அவர்களைக் கொன்று விடுகிறேன். இது சத்தியம்; இல்லாவிடில் திரும்பி தங்கள்பக்கம் வரவேயில்லை. நானெப்பேர்ப் பட்டவன் தெரியுமா, முந்தி ஒரு தடவை எவ்வளவு ராக்ஷஸர்களைக் கொன்றிருக்கிறேன் ? என்னுடைய பராக்கிரமம் உங்களுக்குத் தெரியாதா என்ன ? பிரம்மாவானவர் எனக்கு கவசமும் பாணமும் கொடுத்திருக்கிறார். அதிகோரமான ஆயுதங்கள் என்னிடம் இருக்கின்றன. தங்களுடைய உத்தரவுக்குத் தான் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றான்

இவ்வளவையும் கேட்டான் சிங்கமுகன். சூரபதுமனைப் பார்த்து யதார்த்தமாயும் மிக்க ஸாரமாயும் அவனுக்கு இதமாயுமுள்ள வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தான்.

" முற்றிப் பருமுகட்டை முட்டிய கோபந்தரும்பு
குத்திவிடுங்கண்டறிந்து கொள்வாயே—சக்திகொண்ட
ஷண்முகனைப் பாலனென்று சாற்றுதல்கேடாகு, மண்ணே
யுண்மையிது சொன்னேனுனக்கு.

கவிகுஞ்சரபாரதி.

சுப்பிரமணியரை நீ குழந்தையென்று அலட்சியமாகவே சொல்லுகிறாய், எப்பேர்ப்பட்ட தகைமுனிடத்தில் நீ வரன் பெற்றாயோ அந்த மகாதேவனே இவர். அவருடைய ஆஞ்ஞையினாலேயே அகில அண்டங்களும் உண்டாகி அந்திய காலத்தில் சிதைந்துப் போகின்

றனே. அவர் உனக்குக் கொடுத்த ஐசுவரியத்தினுலே சகல போகங்களையும் நீ அனுபவித்து மிகவும் கருவங்கொண்டிருக்கிறாய். பிரம்மா விஷ்ணு முதலானவர்களை இன்னல் உபத்திரவம் செய்து கொண்டிருக்கிறாய். இந்திர குமாரனாகிய சயந்தனை நீ இன்னும் சிறையினின்றும் விடுவிக்கவில்லை. இந்த சமாசாரங்களை யெல்லாம் கேள்விப்பட்டு கந்தசாமி செந்திநகர் வந்திருக்கிறார். நந்திகேசருடைய கணங்களுக்குள் இவர் மிகவும் சிலாக்கியமானவர். இவரைப்போல வீரனை நீ பார்த்திருக்கவுமாட்டாய் கேட்டிருக்கவுமாட்டாய். ஈசனால் கொடுக்கப்பட்ட வரத்தின் பிரகாரம் நீ அடைந்த நூற்றெட்டு யுகங்கள் வயது இப்போது ஆய்விட்டது. தன்னுடைய சக்தியால் உனக்கு மரணம் என்று ஈசுவரன் சொல்லியிருக்கிறபடி இவர் சக்தி என்னும் வேலாயுதத்தைக் கையில் தரித்து வந்திருக்கிறார். மகாதேவனுடைய மாயையை யாரால் அறிய முடியும்? உனக்கென்ன இப்படி புத்தி மாறிப்போய்விட்டது. இனிமேலாவது சிறையிலிருக்கிற தேவர்களை விடுவித்து ஆறுமுகனிடம் போய் வணங்கிக் கேட்டுக்கொண்டால் மறுபடியும் நிர்ப்பயமாய் உன் ராஜ்யத்தில் சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு வெகுகாலம் இருக்கலாம்" என்றான்.

சூரன் உடனே மிகுந்த கோபமடைந்து பற்களை நெறித்து, கண்கள் சிவந்து, "அடா பைத்தியமே, மானுடமானத்தை யெல்லாம் விட்டு என்னிடம் வந்து என்ன சொல்லுகிறாய்? பூதங்களையும் சேவ

ஒரு குழந்தையையும் மிகவும் சிலாக்கியமாய் எடுத்துப் பேசுகிறாய். சயந்தன் முதலானவர்களை விடுவித்து அக்குழந்தையைப் போய் நமஸ்காரம் பண்ணிவிட்டு பக்கத்தில் நில்லு என்றுசொல்லுகிறாய். ஏண்டா? முட்டாளே! நூற்றெட்டு யுகங்களுக்குப் பிறகு சக்தியால் எனக்கு மரணம் உண்டு, என்று பொய் சொல்லுகிறாய். இது மாயமா? அல்லது நீயே வேறு ஆஸாமியா,? இல்லாவிடில், உனக்கு சித்தபிரமை ஏதாவது உண்டா? அல்லது உனக்கு ராக்ஷஸசிரேஷ்டனாயிருந்து தேகபலம் குறைந்து விட்டதா? ஈசுவரன் எனக்குக் கொடுத்த வரன் உனக்குத் தெரியாதா? என்ன! இனிமேல் என் எதிரில் நில்லாதே! எங்கேவேணுமானாலும் போ. சீக்கிரமாய் போ" என்று கடுமையாய்ச் சொன்னான்.

இம்மாதிரி ஆடம்பரமான வார்த்தைகளைக் கேட்டு சிங்கமுகன், "நாம் எவ்வளவோ இதமான வார்த்தைகளைச் சொன்னோம். அந்த முட்டாள் அவைகளைக் கேட்கவில்லை. விபரீதமாய்ச் சொன்னால் தான் அவன் விரும்புகிறான். நமக்கென்ன? அவனுடைய மனம் போல் சொல்லி விடுவோம்" என்று மனதில் நிச்சயித்து, "என்னிடம் எவ்வளவு ஆயுதங்கள் இருக்கின்றன தெரியுமா? தங்களுடைய உத்தரவில்லாததால் தாமதமே ஒழிய தாங்கள் உத்தரவு கொடுத்தால் ஒரு நிமிஷ நேரத்தில் பூதர்களையும் அக்குழந்தையையுமுடனே கொன்றுவிட்டு இவ்விடம் வருவேன்." என்றான்.

சூரபதுமன் :—" நீ என்னை சோதனை செய்வதற்காக இவ்வளவு வார்த்தைகள் பேசினாய் என்று தெரியாமல் போனேன். இருந்தபோதிலும் இப்பொழுது ஒரு அவசரமுமில்லை. சரியான சமயம் வரும்பொழுது தெரிவிக்கிறேன். அப்பொழுது நீ வரலாம்" என்றான். அப்படியே சபைகலைந்தது. எல்லோரும் அவரவரிருப்பிடம் சென்றார்கள்.

## ஏமகூடத்துக்கு வருதல்.

மறுநாள் செந்திநகரிலிருந்து ஷண்முகன் ஆகாசமார்க்கமாய் வீரமஹேந்திரபுரியைநோக்கிப் புறப்பட்டு ஆறுகளையும் மலைகளையும் கடல்களையும் ஊர்களையும் வனங்களையும் தாண்டி வருகிறார். கொடிகள் பறக்கின்றன. முனிவர்கள் ஆசி கூறுகிறார்கள். துந்துபிகள் முழங்குகின்றன. தேவர்கள் பூமாரி பொழிகின்றார்கள்.

பிரம்ம விஷ்ணு முதலான தேவர்களும் வீரபாகு முதலான இலக்ஷத்தொன்பது வீரர்களும் இரண்டாயிரம்வெள்ளம்சேனைகளும் கூடவேபோகிறார்கள். அப்போது தேவர்கள் ஷண்முகனைப் பார்த்து, " வீரமஹேந்திரபுரியானது நமது சத்துருவினுடைய நகரமாகையால் தாங்கள் அவ்விடம் நேரேபோவதுகூடாது. தங்களுடைய சரணங்களை அந்நகரத்தில் வைக்க வேண்டாம். அந்நகரத்துக்குவெளியிலே ஒருநகரத்தை ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்" என்றார்கள். அப்படியே ஷண்முகனும் சம்மதித்தார்.

அவருடைய உத்தரவின்பிரகாரம் மயன் என்ற தேவதச்சன் ஏமகூடம் என்ற பாசறையைச்சிருஷ்டித் தான். ஷண்முகனும்அவ்விடம்இருக்கையில், திரிலோக சஞ்சாரியான நாரதர் சூரனிடம் வந்து "ஏமகூடத்தில் ஷண்முகன் வந்திருப்பதைத் தெரிவித்து, அவரோடு அவனைச்சண்டைசெய்யும்படி தூண்டிவிட்டு சூரனுடை யஜெயத்தை உத்தேசித்து தான் தவம் செய்யச் செல் வதாகச் சொல்லி வெளியே சென்றார். அவர் போன பிறகு சூரன் சமுத்திர ராஜனைக் கூப்பிட்டு, ஏன் நார தனைப் பட்டணத்துக்குள் விட்டாய் என்று. கோப மாய்க் கேட்டான். சமுத்திர ராஜன் "நான் என்ன செய்வேன். அவர் ஆகாச மார்க்கமாய் வந்திருக்கிற தாகத் தோன்றுகிறது. என்றால் எப்படி தடுக்க முடி யும்? அதற்காக தாங்கள் என்னைப் போன்ற ஒரு அற்பனிடத்தில் இவ்வளவு கோபங்கொள்ளக் கூடாது". என்று கேட்டுக் கொண்டான்.

இச்சமயத்தில் சூரனுடைய தூதர்கள் வந்து கந்தக் கடவுள் சேனைகளுடன் வீரமகேந்திர பட்டண த்தின் வடக்கு வாசலில் வந்திருப்பதாகத் தெரிவித் தார்கள். சூரன் உடனே சிவகுமாரனோடு யுத்தம் செய் ய தன்னுடைய குமாரனாகிய பானுகோபனை அனுப்பி னான்.

# யுத்தகாண்டம்.

---

## பானுகோபன் முதல் நாள் யுத்தம்.

பானுகோபன் போர்க்களத்துக்கு வருவதை நாரதர் ஷண்முகனுக்குத் தெரிவித்ததும் ஷண்முகன் தன்னுடைய தம்பியாகிய வீரபாகுவை ஜெயத்தோடு வரும்படி ஆசிர்வதித்து சேனைகளுடன் அனுப்பித்தார். இரு சேனைகளும் சமீபித்தன. பானுகோபன் ஷண்முகனே யுத்தத்துக்கு வருவானென்று நினைத்ததற்கு விரோதமாய் வீரபாகு மாத்திரம் வந்திருப்பதைப் பார்த்து மிகுந்த கோபமடைந்து "இவனை சயந்தனுக்குத் துணையாகக் கொண்டுபோய் சிறையில் அடைத்து விடுங்கள்" என்று அலட்சியமாய் உத்தரவு கொடுத்துச் சென்றான். இருதிறத்தாருக்கும் தீவிரமான போர் நேர்ந்தது. ராக்ஷதர்கள் மதயானைகளை இருப்புலக்கைகளைத் துதிக்கையிலேந்தி சண்டை செய்யும்படி ஏவினார்கள். பூதர்கள் அம்மதயானைகளின் மஸ்தகங்களைப் பிளந்தார்கள். மலைகளையும் மரங்களையும் பறித்தெறிந்து அநேக அவுணர்களை இறக்கச் செய்தார்கள். இரத்தம் பிரவாகமாய் ஓடியது பிணங்கள் மலைகளாய்க் குவிந்தன. நாய், நரி, கழுகு முதலானவைகள் சுற்றி உட்கார்ந்து விருந்துண்டு களித்தன. இவைகளைக் கண்டு தாங்காமல் அசுரத் தலைவனாகிய அனலி சண்டை செய்ய வந்து பாணங்களைத் தொடுத்தான். உடனே பூதத் தலைவனாகிய

சிங்கன் அவுணனுடைய தேரினிற் பாய்ந்து வில்லை ஒடித்தான். வில்லொடிந்ததும் அனலி தண்டாயுதத்தை விட்டான். அதே தண்டாயுதத்தை சிங்கன் கையால் தூக்கி ஓங்கி அனலியை அடித்துக் கொன்றான்.

இதனாலே கோபமடைந்து சண்டன் வந்தெதிர்த்தான் அவனையும் சிங்கன் கதையினால் கொன்றான். தண்டகன் முதலான வீரர்கள் சண்டை செய்ய ஆரம்பித்தவுடன் அவுணப்படைகள் மருண்டு ஓடினார்கள். வெகு பேர்பிராணனையிழந்தார்கள். இச்செய்தி கேட்டு பானுகோபனும் மிக்க ஆக்ரோஷத்துடன் பூதப்படையினின்றும் இலக்ஷம் பேர்களை வீழ்த்தினான். உடனே பூதத்தலைவனாகிய உக்கிரன் தண்டாயுதத்தினால் பானுகோபனுடைய தேரையும் குதிரைகளையும் அழித்தான். பானுகோபன் திரும்பியும் பாணங்களை மாரியாகப்பெய்து தண்டாயுதத்தைச் சின்னபின்னமாக்கினான். பிறகு நவவீரர்கள் ஒவ்வொருவராய்ச் சண்டை செய்தார்கள். வீரகேசரி, வீரமார்த்தாண்டன் இருவரும் போர்செய்து மூர்ச்சையடைந்தார்கள். உடனே வீரராக்கதன் பானுகோபனுடைய மகுடத்தை தெரித்து விழச்செய்தான். பானுகோபன் பிரம்மாஸ்திரம் விட்டதும் வீரராக்கதன் மூர்ச்சையடைந்தான் பிறகு வில் யுத்தத்தில் மற்ற ஐந்து வீரர்களும் தோல்வியடைந்தார்கள். இது கண்டு கோபங் கொண்டு வீரபாகுதேவர் பானுகோபனை எதிர்த்தார். பானுகோபன் வீரபாகுவைப்பார்த்து " நீ யாரடா ? விஷ்ணுவா ? பிரம்மாவா ? வேலாயுதனா ? கேவலமான ஒரு தூதன். நீ என்னோடு

சண்டை போட முடியுமா ? மரியாதையாய்ப் போய் விடு " என்ருன்.

வீரபாகு "வீராயிருப்பவர்கள் தங்கள் வீரத்தைச் சிறிதும் சொல்லமாட்டார்கள்" என்ருர். இருவரும் ஒருவருக்கொருவர் பாணங்களை ஒவ்வொருவர் அங்கங்களிலும் ஆயிரமாயிரம் பாணங்கள் படும்படி , அதிவேகமாய்ச் சுழற்றிச் சுழற்றி விட்டார்கள் அவர்களுடைய ரதங்களும் சகலலோகங்களிலும் ஓடி ஓடித் திரும்பின மிகவும் தீவிரமாய்யுத்தம் நடந்தது. பானுகோபன் வீரபாகு தேவருடையவில்லை அறுத்தான். வீரபாகு தேவர் வேறு பெரிய வில்லை எடுத்து பானுகோபனுடையீ வில்லை யறுத்தார். இன்னம் எழுநூறு பாணங்களை விட்டு பானுகோபனுடைய மகுடத்தைப் பொடியாய் நொறுக்கி ஆயிரம் பாணங்களால பானுகோபனுடைய கவசத்தையும்துணித்தார். இதைப்பார்த்து சூரியனுக்கு ரிரம்ப சந்தோஷம் உண்டாயிற்று. பிறகு பானுகோபன் அதிவேகமாய் ஆயிரம் பாணங்களை விட அவைகள் வீரபாகுவின் நெற்றியில் அழுந்தின. வீரபாகு நாலாயிரம் பாணங்களை பானுகோபனுடைய சர்வாவயவங்களிலும் படும்படி விட்டவுடனே உதிரம் பெருகி அவன் மூர்ச்சையடைந்தான். பானுகோபனுடைய சேனைகள் கோபமடைந்து காதனில்லாமலே எதிர்த்து நாசமடைந்தன. இதற்குள் முன்னமே மூர்ச்சையடைந்திருந்த பூதர்கள் வீரர்கள் எல்லோரும் மூர்ச்சை . தெளிந்தெழுந்து வந்தார்கள்.

பானுகோபன் பதினாயிரம் பாணங்களை ஏவ வீர பாகுவின் இரதம் நொறுங்கிவிட்டது. வீரபாகு வேறு தேரில் ஏறிக்கொண்டு பதினாயிரம் பாணங்களை விட்டு பானுகோபனுடைய வில்லையும் தேரையும் அழித்தார். உடனே பானுகோபன் வேறுதேரில் ஏறி இரண்டாயிரம் பாணங்களை விடவே அவைகள் வீர பாகுவின் மார்பில் நன்றாய் அழுந்தின. யடியால் அவர் கொஞ்சநேரம் சோர்பமடைந்தார்.

தெளிந் தெழுந்தவுடன் வீரபாகு மிக்க கோப மடைந்து பதினொருபாணங்களால் பானுகோபனுடைய வில்லை ஒடித்து, பின்னும் ஆயிரம்பாணங்களால் அவனுடைய ரதத்தையழித்து இன்னும் நூறு பாணங் களை அவனுடையமார்பில் புகுந்து முதுகின் வழியாய் ஊடுருவிச் செல்லும்படியாய்ச் செய்தார். இன்னும் ஆயிரம் பாணங்களை விட்டு அம்புறாத்தூணியையும் அறுத்தார்.

பானுகோபன் உடனே மோஹவேலாயுதத்தை ஏவ, தேவர்களெல்லோரும் மயங்கினார்கள். அச்சமயத் தில் முருகக் கடவுள் அமோக வேலை விடுத்து மோக வேலை அழித்தார்.

வீரபாகு தேவர் உடனே, சிவனுடைய வேலை எடுத்து பானுகோபன்மேல் விடுப்பதற்கு எத்தனிப் பதைப்பார்த்ததும் பானுகோபன் மாயமாய் மறைந்து தன்னிருப்பிடம் சேர்ந்தான். சூரியனும் அஸ்தமித் தது. வீரபாகு தேவர் ஷண்முகனிடம் வந்து சேர்ந் தார்.

## சூரபதுமன் முதல் யுத்தம்.

மறுநாள் சூரபதுமன் தன்னுடைய தம்பி குமாரர்களாகிய அசுரேந்திரன், அதிசூரன் முதலான சேனைபதிகளால் சூழப்பட்டு இரதத்திலேறி வருவதை இந்திரன் ஆறுமுகனுக்குத் தெரிவித்தான். உடனே சுப்பிரமணியர் ரதத்தில் ஏறி இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகள் சூழ, வாயுவை தேர்ப்பாகனாக ஏற்படுத்திக்கொண்டு புறப்பட்டு யுத்த பூமிக்கு வந்தார். அவுணர்களுக்கும் பூதர்களுக்கும் பெரிய யுத்தம் உண்டாயிற்று. பூதர்கள் தேர்களை யானைகள்மேல் எறிய யானைகள் இறந்தன. யானைப்பிணங்களை குதிரைகளின்பேரில் எறிந்து குதிரைகளை உயிரிழக்கச் செய்தார்கள். குதிரைப் பிணங்களைத் தூக்கி எறிந்து அவுணர்களை உயிரிழக்கச் செய்தார்கள். பிணங்கள் மலைகளாகக் குவிந்தன. இரத்தநதி ஓடினது.

அதிசூரன் பூதர்கள்மேல் பாணங்களை எய்தான். உக்கிரன் என்ற பூதத் தலைவன் தன் பாணங்களாலே அந்தப் பாணங்களைத் தடுத்து தண்டாயுதத்தை ஏவினான். அது அதிசூரன் மார்பிலுள்ள கவசத்தை யறுத்தது. அதிசூரன் மிகவும் கோபங்கொண்டு இலக்ஷம் பாணங்களை உக்கிரன்மேல் வீசினான். இரத்தப் பிரவாகம் பெருகிற்று. உக்கிரன் கோபதீப்தனாய் ஒரு மலையை விட்டெறிந்து அதிசூரனுடைய தேரை யழித்தான். அதிசூரன் வேறொரு தேரிலேறினான். உக்கிரன் அந்த தேரில் கட்டிய குதிரைகளை உதைத்தான். அச்சமயத்தில் அதிசூரன் நூறு பாணங்களை விட-

உக்கிரன் தன்னுடைய நீண்ட தண்டினால் அவைகளை விலக்கினான். அதிசூரன் உக்கிரனைக்கொல்ல வேண்டுமென்று நினைத்து ஆக்னேயாஸ்திரம், வருணாஸ்திரம், யமாஸ்திரம், வாயுவாஸ்திரம், பிரம்மாஸ்திரம், நாராயணாஸ்திரம் முதலானவைகளை ஏவினான். உக்கிரன் அவைகளையெல்லாம் பிடித்துவிழுங்கினான். இந்திரன் முதலான தேவர்களெல்லாம் உடனே பிரம்மதேவரிடம் சென்று அதன் காரணத்தைக் கேட்க, பிரம்மாவும் அவனுடைய சிறந்த சிவ பக்தியே அதற்குக் காரணம் என்றார். அதைக் கேட்ட தேவர்கள் உக்கிரனுக்கு இன்னம் அதிக பராக்கிரமமுண்டாக வேண்டுமென்று ஓரேவார்த்தையாய் ஆசி மொழி கூறினார்கள்.

அதிசூரன் பாசுபதாஸ்திரத்தை எய்தபொழுது உக்கிரன் பஞ்சாக்ஷர ஜெபம் செய்ய, அதைக்கண்டு அப்படைக்கலம் ஒரு தீங்கும் செய்யமுடியாமல் சங்கரபகவானிடம் போய்ச் சேர்ந்தது. ஏனென்றால், சங்கரர் அதிசூரனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்தபோது, " ஆயுதமில்லாதவன்மேல் நீ இதைப் பிரயோகித்தால் இது நம்முடைய பக்கத்தில் வந்து சேரும் " என்று சொல்லியிருக்கிறார்.

பிறகு அதிசூரன் தேரினின்றிறங்கி தண்டாயுதத்தால் உக்கிரனைத் தோளின் மேலடித்தான். உக்கிரனும் அதைப் பிடுங்கிக் கொண்டு அதிசூரனுடைய மார்பில் அடிக்கவே அவன் இறந்தான். உடனே அக்கோரதிர [illegible] சேர்த்து கனகன் என்ற பூதத்தலைவன்மேல் ஆயிரம் பாணங்களை ஏவ, அவன் ஆச்சரியப் பட்டு

தான். உன்மத்தன் போர் செய்து இளைத்தான். மந்தன் எதிர்த்து மூர்ச்சை யடைந்தான். சிங்கன் போர் செய்து, நூறு பாணங்களால் மூர்ச்சையடைந்தான். இவைகளைக் கண்டு இலக்ஷம் வீரர்களில் ஒருவனாகிய தண்டகன் ஆயிரம் பாணங்களைவ, அசுரேந்திரன் மிகவருந்தி, உடனே எட்டு பாணங்களை ஏவ அவைகள் தண்டகன் நெற்றியில் தைத்தன.

சோமுகன் ஆயிரம் பாணங்களை விட்டு அசுரேந்திரனுடைய தேரை யழித்தான். அசுரேந்திரன் வேறு ஒரு தேரில் ஏறி சோமுகன் மேல் ஒரு பாணம் ஏவினான் சோமுகன் தளர்ந்தான். உடனே விஜயன் கோபங்கொண்டு ஆயிரம் பாணங்களால் அசுரேந்திரன் வில்லை யறுத்தான். அசுரேந்திரன் உடனே தண்டாயுதத்தை ஏவ விஜயனும் கலங்கினான்.

இவ்வாறு இலக்ஷம் வீரர்களில் வெகு பேர் சண்டையிற் றோற்றார்கள். கடைசியில் வீரபாகு தேவர் பாணங்களை மழை போலப் பொழிந்து எதிரியின் சரீரத்தை மறைத்தார். அசுரேந்திரன் வீரபாகு தேவருடைய வில்லை யறுத்தான். வீரபாகு அசுரேந்திரனுடைய தேரையும் வில்லையுமழித்தார். அசுரேந்திரன் வீரபாகு தேவருடைய தேரையழித்தான். வீரபாகு அசுரேந்திரனுடைய தேரில் பாய்ந்து அவனுடைய கைகளில் ஒன்றை வெட்டினார்; அசுரேந்திரன் இன்னொரு கையிலுள்ள தண்டாயுதத்தால் திருப்பியடித்தான். வீரபாகு அவனை உதைத்துவிட்டுத் திரும்பினார். அசுரேந்திரன் கையில் வாளேந்திக்கொண்டு

பின்தொடர்ந்தான். வீரபாகு உடனே அசுரேந்திரனைத் தன் வாளால் வெட்டிவிட்டார்.

சூரன் இதைக்கண்டு மிகவும் கோபத்துடன் பூதக் கூட்டங்களை எதிர்த்தான் வில்லை வளைத்து நாணொலி செய்தான். அதைக் கேட்டு பூதர்கள் மிக்க வருந்தினார்கள். இந்த நாணோசையானது பன்னிரண்டு வருஷ காலம் நீங்காமலிருந்தது சூரனால் விடப்பட்ட பத்து லக்ஷங்கோடி பாணங்களால் பூதராஜர்கள் இறந்தார்கள் இலக்ஷம் வீரர்கள் எதிர்த்தார்கள். பேனி இளைத்தார்கள் வீரமார்த்தாண்டன்சூரனால் ஏவப்பட்ட பதினாயிரம் பாணங்களால்வில்லு முறிந்து மார்பில் துளைக்கப்பட்டான். அதைக்கண்டு வீரராக்கதன் சூரனுடைய தேரிற்பாய்ந்து வாளாயுதத்தால் அவனுடைய(சூரன்) வில்லை வெட்டினான். ஆனால் சூரனுடைய வில்லொடியவில்லை. இவனுடைய வாள்தான் ஒடிந்தது. இவனைச் சூரன் தன் காலினால்அண்டத்தின்மேல் செல்லும்படி எறிந்தான். அவன் ஆகாசத்தில்போய் பூமியின் விழுந்தான் இதனால் கோபமடைந்து வீரமயேந்திரன் எதிர்த்தான்ஆனால் நூறு பாணங்களால் மூர்ச்சையானான். வீரதீரன் பதினாறு பாணங்களால் மூர்ச்சையானான். வீரமஹேசன் வேலை எறிய அது சூரனுடைய மார்பிற்பட்டு தூளியாய் விட்டது. சூரனால் விடப்பட்ட ஏழு பாணங்களாலே புஜம் துளைக்கப் பட்டு களைத்து விழுந்து மனம் நொந்தான். வீரகேசரி சூரனுடைய தேரில் பாய்ந்து மார்பிலடித்தான். ஆனால் இவனுடைய கை வெடித்ததே ஒழிய அவனை ஒருதீங்கும் செய்ய முடிய

வில்லை. சூரன் இவனை ஒரு கையால எடுத்துத் திருப் பாற்கடலில் விட்டெறிந்தான். அவன் திரும்பியும் சேனையோடு சேர்ந்தான் பிறகு வீரபுரந்தரன் மூர்ச்சை யடைந்தான். இவற்றை யெல்லாம் கண்டவுடன் வீரபாகு தேவர் பெரிய தேரில் ஏறிக்கொண்டு வந்தெதிர்த்தார்.

சூரன். (தூதனிவனென் றெண்ணி.) "இப்போதும், தூதனாக வந்தால் நீ இறக்கமாட்டாய். இல்லாவிட்டால் நான் வில்லைப் பிடித்தால் உன்னைக் கொன்று விடுவேன்." என்றான்.

வீரபாகு "நான் ஷண்முகனிடத்தில் தூதனுயு மிருப்பேன், மந்திரியாயு மிருப்பேன், ஒரு ஏவலாளியாயு மிருப்பேன். அதைப் பற்றி உனக்கு என்ன கவலை. நான் இப்பொழுது உன்னோடு சண்டை செய்யத் தான் வந்திருக்கிறேன். சண்டை செய்" என்றான். சூரன், ஆயிரங் கோடி பாணங்களை விடுக்க வீரபாகு அவைகளை யெல்லாம் தன் பாணங்களாலே அறுத்து நூறு பாணங்களைச் சூரனுடைய நெற்றியில் பதியும்படி ஏவினார். ஆனால் பாணங்கள் முறிந்து போயின. சூரன் எட்டு பாணங்களை ஏவி வீரபாகு தேவருடைய தோளிகளில் அழுத்தினான். அவைகள் தேவர்களின் [illegible] கவசத்தை யுண்டு பிடரியைத் துளைத்துக் கொண்டு போயின. வீரபாகு சூரனுடைய [illegible] வீழ்த்தினார். சூரன் ஐம்பது பாணங்களால் வீரபாகுவின் தேரை நொறுக்கினான். [illegible] குதிரையில் [illegible] ஆயிரம் [illegible]

ஸ்திரம், சூரியாஸ்திரம் வருணாஸ்திரம் நிருதியாஸ்திரம் இந்திராஸ்திரம்,பிரம்மாஸ்திரம் நாராயணாஸ்திரம் இவைகளையெல்லாம் சூரன்மேல் ஏவ அவைகள் அப்படியே பொடியாய் விட்டன.

வீரபாகு சிவாஸ்திரத்தை விடுக்க சூரனும் சிவாஸ்திரத்தினுல் அதை விலக்கி பதினைந்து பாணங்களை ஏவி வீரபாகுதேவரின் வில்லை யறுத்து விட்டு வீரபாகுவைப் பார்த்து " நீ என்னை யாரென்று எண்ணினுய். நான் சங்கரனைக் குறித்துக் கடுந்தவஞ் செய்து என்றும் அழியாதவரம் பெற்றிருக்கிறேன் என்னை ஒருவராலும் கொல்ல முடியாது என்று நிச்சயமாய் அறிந்து கொள் " என்றான். வீரபாகுதேவர் உடனே வேலாயுதத்தை ஏவ, அது சூரன்மேல் பட்டு அழிந்தது. சூரன் தண்டாயுதத்தைஏவினான்; வீரபாகு தேவரும் மூர்ச்சையடைந்தார்.

சுப்பிரமணியர் இச் சேதியறிந்து உடனே சூரனிடம் போய் எதிர்த்தார். சூரன் " எல்லோரும் எதிர்த்து மூர்ச்சையாய் விட்டார்கள். நீ ஒரு குழந்தை உனக்கு நம்மைப் போன்ற கைதேர்ந்த வீரர்களோடு யுத்தம் செய்வது அசாத்தியமான காரியம். ஆகையால் உன்னுடைய தகப்பனரிடம் போய் உட்கார்ந்து கொண்டு குழந்தையின் விளையாட்டுகளைக் காண்பித்துக் கொண்டிரு. அவரைச் சந்தோஷப் படுத்து போ " என்றான்.

சுப்பிரமணியர்:— " குழந்தை என்று நீ என்னை

மதிக்கிறாய். சீக்கிரத்தில் உன்னைக்கொல்லுகிறேன்பார்'' என்றார்.

சூரன் உடனே கோபங்கொண்டு பாணங்களைவிடுத்தான். சுப்பிரமணியர் பதினறு பாணங்களால் அவனுடைய பாணங்களை ஒடித்து ஆயிரம் பாணங்களை ஏவி அவனுடைய வில்லையறுத்தார். சூரன் வேலாயுதத்தை ஏவினன். குஹன் பதினறு பாணங்களாலே அதை அறுத்துத் தள்ளினர். சூரன் நன்றாய் எதிர்த்து ஏழு பாணங்களை ஏவினன். அவைகள் பொடியாய் விட்டன. குஹன் உடனே பாணங்களை ஏவி சூரனுடைய கைவில்லை யறுத்து ஆயிரம் பாணங்களால் அவனுடைய தேரையும் பக்கத்திலுள்ள அனேக தேர்களையும் அழித்தார்.

சூரன் பூமியில் நின்று சூலாயுதமேவினன். குஹன் நான்கு பாணங்களால் சூலாயுதத்தை யறுத்துவிட்டார். அவுணர்களெல்லாரும் குஹனைச் சூழ்ந்து கொண்டார்கள். குஹன் சக்ராயுதத்தை ஏவி அவுணர்களை அழித்தார். உடனே சூரன் பிரம்மாஸ்திரம் நாராயணாஸ்திரம் முதலானவைகளை விட்டான். அவைகளை குஹப் பெருமானுடைய வேலாயுதம் விழுங்கி விட்டது. சூரன் உடனே சிவாஸ்திரத்தை ஏவினன் குஹன் அந்த சிவாஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டு யுக்திமதிகள் சொன்னர். அதுவும் அவரிடமே நின்றது. சூரன் தாமதிக்காமல் சேனைக் கூட்டங்களோடு உருவுதாக மாயமாய் மறைந்து போனன்.

பூதர்கள் பிறகு வடக்குவாயிலில் வந்து ஆகா

சம் வரையில் அளாவியிருக்கும் ஒரு கோபுரத்தைப் பிடுங்கி சமுத்திரத்தில் எறிந்து அந்தப் பட்டணத்தை அழித்து ஷண்முகனிடம் வந்து சேர்ந்தார்கள்.

சுப்பிரமணியரும் பூதர்களுடனும் வீரர்களுடனும் ஏமகூடம் சென்றார் சூரியனும் அஸ்தமித்தது. தூதர்கள் நகர மழிந்ததைப் பற்றி சூரனிடம் போய் தெரிவித்தவுடன் பானுகோபன் தான் மறுநாள் காலமே யுத்தத்துக்குப் புறப்படுவதாய்ச் சொல்லி சூரனை தைரியப் படுத்தினான்.

## பானு கோபன்
## இரண்டாம் நாள் யுத்தம்

மறுநாள் காலையில் பானுகோபன் எழுந்து மாயையினை தியானித்தான். அவள் உடனே வந்து ஒரு மாயப் படையைக் கொடுத்தாள். தன் தூதனுகிய ஆயிரம் குதிரை முகங்கள் பொருந்திய ஒருவனை பனுப்பி வீரபாகுவை யுத்தத்துக்கு வரச்சொன்னான். வீரபாகுவும் கந்தசுவாமியிடம் உத்தரவு பெற்று தேரில் ஏறிப் போர்க்களம் வந்தார். பூதர்கள் எதிரிகளின் சேனையைப் பார்த்த வுடனேயே பயந்து வெகுபேர் இறந்தார்கள். வீரபாகு ஆயிரம் பாணங்களால் பானுகோபனுடைய மார்பைத் துளைத்தார். இருந்தாலும் தைரியம் குன்றுமல் பானுகோபன் வருணாஸ்திரத்தை ஏவினான். வீரபாகு ஆக்னேயாஸ்திரத்தைவிட்டழித்தார். பானுகோபன் வாயுவாஸ்திரத்தை விட்டான். வீரபாகு நாகாஸ்திரத்தை விட்டழித்தார் பானுகோபன். கருடாஸ்திரத்தை விட்டழித்தான் வீரபாகு.

ந்திரியாஸ்திரத்தை விட்டார் அது பானுகோபனால் விடப்பட்ட யமாஸ்திரத்தை அழித்து பிரம்மாஸ்திரத்தை விழுங்கி விட்டது. பானுகோபன் உடனே நாராயணாஸ்திரத்தைத் தொடுத்தான். வீரபாகு தேவர் தக்ஷயாகத்தை அழித்த வீரபத்திராஸ்திரத்தை ஏவினார். நாராயணாஸ்திரம் ஒளிந்து கொண்டது. பானுகோபன் சிவாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான். வீரபாகு தேவர் தனது சிவாஸ்திரத்தைத் தகுந்த உபசாரங்கள் செய்து பிரயோகம் செய்தார். இரண்டும் போர் புரிந்து ஜெயம் தோல்வி ஒன்றுமில்லாமல் அதனதனிடத்தில்சேர்ந்தன. சூரியன்மறைந்தான். பானுகோபன் மாயையால் கொடுக்கப்பட்ட மாயாஸ்திரதத்தை ஆகாயத்திலிருந்தபடி பிரயோகம் செய்தான் அதனால் வீரபாகு முதலான சமஸ்த வீரர்களும் சுத்தோதகக் கடலில் அமிழ்ந்தார்கள்.

நாரதர் இச்சேதியை சுப்பிரமணியரிடம் வந்து தெரிவித்தவுடன் கலியுக வரதனாகிய ஷண்முகன் தன்னுடைய வேலாயுதத்தை ஏவினார். அவ்வேலாயுதமானது சுத்தோதகக் கடலையடைந்து அங்கே சமுத்திரத்துக்குள் அகப்பட்டு மாய்ந்து போயிருந்த சமஸ்த வீரர்களையும் பிழைக்கச் செய்து மீட்டுக்கொண்டு அவர்களை யுத்த களத்தில் கொண்டு வந்து சேர்த்தது.

## இரணியன் யுத்தம்.

வீரபாகு தேவர் மூர்ச்சை தெளிந் தெழுந்தவுடனே, பானுகோபனைத் தான் வதம் செய்யாமல் சரவணபவனைத் தரிசனம் செய்யப் போகிறதில்லை

என்று சபதம் செய்தார். சூரனுடைய பட்டணத்து மேற் புறத்து வாயிலில் வந்தார். அங்கு காவலாயிருந்த புலிமுகனைக் கொன்றார். ஆக்னேயாஸ்திரம் வாயுவாஸ்திரம் இவைகளால் நகர முழுவதையும் அழித்தார். அத்தீயை அழிக்கும்படி சூரன் சப்தமேகங்களை ஏவினன். வீரபாகு கோபங்கொண்டு வடவாக்கினியஸ்திரத்தை விட்டார் இது ஆகாயத்திலுள்ள மேகங்களின் நீரை யெல்லாம் சாப்பிட்டு விட்டது. தூதர்கள் சூரனுக்கு இந்த சமாசாரத்தைத் தெரிவித்தார்கள் சூரன் கோபமடைந்து யுத்தம் செய்யக் கிளம்பினன். இரணியன் (சூரனுடைய புதல்வன்) உடனே சூரனைப்பார்த்து " ஆறுமுகனைப் பரம் பொருள் என்று நினைத்து நடந்து கொள். அவர் சாமானியரல்ல " என்று சொன்னன். சூரன் மிகவும் கோபமடைந்து, இந்த புத்தி உனக்கு எவ்விதம் ஏற்பட்டது." ஒரு சிற்றெறும்பைப் பெரும் பூதமென்றெண்ணி என்னிடம் சொல்லுகிறாயே முட்டாளே " என்றான். அவனுடைய வார்த்தைக்குப் பயந்து மூன்று தலைகளும் ஆறு கைகளும் உள்ள இராணியன் யுத்த சன்னத்தனாய் வீரபாகுவின் எதிரே சென்று, வீரபாகுவா லனுப்பப்பட்ட பூதப்படைத்தலைவனாகிய நீலனோடு சண்டை செய்து அவனை மூர்ச்சிக்கச் செய்தான். உடனே வீரபாகு தேவர் போர் செய்யஆரம்பித்தார். பூதர்கள் எல்லோரும் அதிதீவிரமாய் யுத்தம் செய்தார்கள் அதைப் பார்த்துபயந்து இரணியன் மறைந்து கடலுக்குள் சென்று மீனுருவங் கொண்டான்.

## அக்கினிமுக வதம்.

மறுநாட் காலமே தூதர்கள் சூரனிடம் இந்தசமாசாரத்தைத் தெரியப்படுத்த, அக்கணமே அக்கினிமுகன் (சூரனுடைய குமாரர்களில் ஒருவன்) தான் போய் சத்துருக்களை ஜெயித்து வருவதாய்ச் சொல்லி புறப்பட்டு யுத்தகளம் வந்து சேர்ந்தான். வீரபுரந்தரன் வேகமாய் வந்து மேகனையும் சேமனையும் புரட்டி மண்ணில் மிதித்தான். அக்கினிமுகன் கோபங்கொண்டெதிர்த்தான் புரந்தரனுடைய கைவில்லையும் தூணியையும் ஒடித்து மூர்ச்சித்து விழும்படி செய்தான். உடனே ஏழுவீரர்கள் எழுந்து பாய்ந்து அக்கினிமுகனுடைய தேரையும் குதிரையையும் அழித்தார்கள். வேறுரதத்திலேறி அக்கினி முகன் சிவாஸ்திரத்தை விட்டான். இந்த சிவாஸ்திரமானது எதிரே வந்த வருணாஸ்திரத்தை விழுங்கி ஏழு வீரர்களையுங் கொன்றது. இதைக் கேள்விப்பட்ட வீரபாகு மிக்க கோபங்கொண்டான். அதிவேகமாய் சரமாரியாய் பாணங்களை யெய்து அக்கினிமுகனுடைய தேரை உடைத்தான். கவசத்தையும் பிளந்தான். அக்கினிமுகன் கீழே விழுந்து ஒன்றும் தோன்றாமல் பத்திரகாளியைத் தோத்திரம் செய்ய, உடனே பத்திரகாளியானவள் சூலத்தை எடுத்துக் கொண்டு வீரபாகுவோடு சண்டை செய்வதாக வந்தாள். வீரன் காளிதேவியின் சூலத்தை ஒடித்தெறிந்து அவளுடைய எட்டு கைகளையும் தன் ஒரு கையால் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டபோதில

ஒரு இடி இடித்தான். அதைத் தாங்கமாட்டாமல் காளி அவனை வணங்கி, "என்னை விட்டு விடு; நீ சௌக்கியமாய் நீடூழி காலம் வாழ்வாய் நான் இனிமேல் உன் வழிக்கே வரவில்லை. உனக்குச் சமானமான தீரன் இவ்வுலகத்தில் கிடையவே கிடையாது." என்று தோத்திரம் செய்து தான் உயிர் பிழைத்து ஓட்ட மெடுத்தாள். இதையறிந்து அக்கினிமுகன் வீரன்மேல் பிரம்மாஸ்திரத்தைவிட்டான். வீரன் உடனே வீரபத்திராஸ்திரத்தை விடவே அக்கினிமுகனும் இறந்தான் இருபதினாயிரம் அசுரத் தலைவர்களும் மாண்டார்கள் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள்.

## வீரபாகு யமனுக்கு எழுதிய கடிதம்.

வீரபாகு தன்னுடைய சகோதரர்களாகிய எழு வீரர்கள் இறந்ததை உக்கிரன் மூலமாய்க் கேள்வியுற்று மிகவும துக்கமடைந்தார். உங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து நான் தனியே ஷண்முகனிடம் எப்படிச் செல்வேன் என்றார். கொஞ்சநேரத்துக்கெல்லாம் ஒருவாறு தெளிந்து தைரியங்கொண்டார். உடனே யமனுக்கு ஒரு கடிதம் எழுதினார். பார்வதிபாகனாகிய சங்கரனுடைய நெற்றிக்கண்களில் பொறிகளாய் உண்டாகி சரவணத்தில் பிறந்த ஷண்முகனுடைய சரணங்களில் இடைவிடாத பக்தியுடைய வீரபாகு எழுதுவது என்னவென்றால் "நீ சமீபத்தில் பக்தசிகாமணியான மார்க்கண்டனுக்குச் செய்த அபசாரத்தால் பட்டபாட்டை மறந்துவிட்டாய் என்று தோன்றுகிறது. என்னுடைய எழு தினை

வர்களையும் உடனே என்னிடம் கொண்டு வர வேண்டியது " என்றார். அக்கடிதத்தைப் பார்த்ததும் யமதர்மராஜன், மிகவும் நடுங்கி தன் உலகத்தில் அவரைத் தேடி காணமல் விஷ்ணு பிரம்மா முதலானவர்களுடைய உலகங்களிலும் காணமல் சங்கரனுருடைய சிவலோகத்தை யடைந்து அங்கே சாரூப்பியமடைந்திருந்த ஏழுபேர்களையு மழைத்துக் கொண்டு வந்து ஒப்புவித்து வீரபாகுவினடிகளில் பணிந்து நடந்த சமாசாரங்களை சவிஸ்தாரமாய்ச் சொல்லி வீரபாகுவைப் புகழ்ந்து விட்டு தனதிருப்பிடம் சென்றான்.

## மூவாயிரவசுரர் வதம்.

அக்கினிமுகனிறந்ததைத் தூதர்கள் மூலமாய்க் கேள்விப்பட்ட சூரன் தரையில் விழுந்தழுதான். அச்சமயத்தில் சூரனுடைய மூவாயிரம் குமாரர்களும் அவனைத் தேற்றிப் போர்க்களத்தை யடைந்து வீரர்களோடு யுததம செய்தார்கள். அப்பொழுது விஜயன் என்ற பூதர்கள் தலைவன் தீவிரமாய் யுத்தம் செய்து மூவாயிரம் பேர்களையுங் கொன்றான். அவர்கள் திரும்பியும் பிழைத்தெழுந்ததைப் பார்த்ததும் விஜயன் பிரமித்து ஒன்றுந்தோன்றமல் ஷண்முகனைத் தோத்திரஞ்செய்ய ஷண்முகன் உடனே கருணை புரிந்து ஒரு பைரவாஸ்திரத்தை விஜயனுக்குக் கொடுத்து மறைந்தருளினர். ஆனாலும் அஸுரேசன் என்னும் சேனதிபதி மாயாஸ்திரங்களைத் தொடுத்து யுத்தத்துக்காரம்பித்து பாணங்களைமழை யெனவே பொழிகின்றபோது விஜயன் பைரவாஸ்திரத்தை ஏவி மாயைகளை அழித்து

மூவாயிரம் ராக்ஷஸர்களையும் யமனுலகுக் கனுப்பி னான்.

## தருமகோப வதம்

விஜயனால் சூரபதுமனுடைய மூவாயிரம் குமாரர்களும் இறந்தார்கள். இதைக் கேள்வியுற்ற சூரன் சிங்காதனத்திலிருந்து கீழே விழுந்து புரண்டு புரண்டு அழுதான். தருமகோபன் (என்னும் மந்திரி) அவனைத் தேற்றி தான் வீரர்களை யெல்லாம் கொன்று விடுவதாகச் சொல்லி அஷ்டதிக்கு கஜங்களுள் ஒன்றாகிய புண்டரீக மென்னும் யானையின்மேல் ஏறிக்கொண்டு போர்க்களம் வந்துசேர்ந்தான். இவனோடு கூட வந்திருந்த இதர மந்திரிகளெல்லோரும் இலக்ஷம் வீரர்களுடன் போர் செய்தார்கள். வரவர தேவர்களுடைய சேனை குறைந்து கொண்டே வருகிறதைப் பார்த்து வீரமார்த்தாண்டன் மிக்க கோபமடைந்து பிரதானிகளை யெல்லாம் கொன்று ராக்ஷதர்களின் மேல் மலைகளைப் பறித்தெறிந்தான். தருமகோபன் மிகவும் கோபங் கொண்டு அம்புகளை வேகமாய் எறிந்தான். வீரமார்த்தாண்டனுடைய பாணங்களின் வேகத்தால் தருமகோபனுடைய யானையானது மூர்ச்சையடைந்து கீழேவிழுந்தது. தருமகோபன் நூறு பாணங்களை ஏவினான் வீரமார்த்தாண்டன் நெற்றியிலிருந்து உதிரம் பெருகி மூர்ச்சையானான். தருமகோபன்உடனே ஒரு வேலாயுதத்தை ஏவ வீரபுரந்தர னென்பவன் நான்கு பாணங்களினால் வேலாயுதத்தைத் தடுத்து தருமகோபன்மேல் பாணங்களை வருஷித்தான். தருமகோபன்

பாணங்களாலே அவைகளைத் தடுத்து தண்டாயுதத்தை விட்டவுடன் வீரபுரந்தரன் மூர்ச்சையானான். பிறகு தருமகோபன் வீரபாகுவி னெதிரில்வந்து பாணவருஷம் பொழிந்தான். வீரபாகு தன்பாணங்களை ஏவி தருமகோபனுடைய பாணங்களை யெல்லாம் ஒடித்து வேலாயுதத்தை ஏவினார். அது தருமகோபனுடைய் மார்பில்பட்டு முதுகின் வழியாய் உருவிச் சென்றது தருமகோபன் மூர்ச்சையாய் கீழே விழுந்தான்.

ஏற்கனவே மூர்ச்சை தெளிந்திருந்த தருமகோபனுடைய யானையானது மிக்க கோபமடைந்து வீரபாகுவினுடைய தேரை யழித்து தேர்ப்பாகனை இறக்கும்படி செய்தது. வீரபாகு தேவர் வேறு தேரிலேறிக் கொண்டு யானையின் துதிக்கையைப் பிடித்துக் கன்னத்திலறைந்து அதைச்சுழற்றி எறிந்தார். எறிந்த வேகத்தில் அந்த யானையானது பூலோக, புவர்லோக, ஸுவர்லோக முதலான பதினாலு லோகங்களிலும் சுற்றிக் கொண்டு பூமியில் வந்து விழுந்து மூர்ச்சையாய் விட்டது. தருமகோபன் மறுபடியும் மூர்ச்சைதெளிந்து எழுந்தவுடன் தண்டாயுதத்தை ஏவினான். வீரபாகு தேவர் அதை வாளாயுதத்தால் வெட்டினார்.

தருமகோபன் உடனே வஜ்ஜிராயுதத்தை ஏவினான். வீரபாகுதேவர் அதையே திருப்பிக் கையினால் பிடித்துக்கொண்டு அவன்மேலெறிந்தார். அவன் பதைபதைத்து விழுந்து இறந்தான்.

தேவர்கள் சந்தோஷமடைந்தார்கள். புண்டரீகம் என்னும் யானையானது தருமகோபனைப்பற்றிய [illegible]

சாரங்களை வீரபாகுவிடம் தெரிவித்துவிட்டு அவருடைய உத்தரவுபெற்று தனதிருப்பிடம் சென்றது.

## பானுகோபன் புத்திமதி.

தருமகோபனது வதத்தைக் கேட்டதும் சூரன் வாட்டமடைந்து, மிகவும் தியங்கினான். தூதர்கள் மூலமாய் இதைக் கேள்விப்பட்ட பானுகோபன் மிகவும் வருத்தமடைந்தான். சூரனிடம் வந்து "சுப்பிரமணியரையும் வீரபாகுவையும் வெல்லுவது அருமை. அவர்களால் தாரகனும் வஜ்ரபாகுவும் அக்கினிமுகனும் மூவாயிரம் அசுரர்களும் தருமகோபனும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இனிமேலாவது, என் தந்தையே! தாங்கள் தேவர்களையெல்லாம் சிறையினின்றும் விடுவித்து ஷண்முகனுடைய சரணங்களில் தாழ்ந்து கேட்டுக் கொண்டால் இன்னம் நமது ஐசுவரியம் குறையாமல் வெகுநாள்வரையில் சௌக்கியமாய்க் காலங்கழிக்கலாம்" என்றான். இதைக் கேட்டதும் சூரபத்மன் மிகவும் முனிவுகொண்டான். நான் யார் என்று உனக்குத் தெரியாதா? ஏண்டா, சத்துருவைக் கண்டு நடுங்கலாமா? விஷ்ணுவாவது, பிரம்மாவாவது என் எதிரே சமானமாக நிற்கமாட்டார்களே! பக்ஷமாய் நின்றுதானே பேசவேண்டும். அப்படியெல்லாம் மேன்மையாய் இருந்தவனை நீ நேற்றுப் பிறந்த ஒரு சிறு குழந்தையின் பக்கத்தில் போய் சரணங்களில் விழச்சொல்லுகிறாய், தேவர்களையெல்லா[illegible]ம் விடுவிக்கச் சொல்லுகிறாய். அப்படியாவது என்ன! [illegible]

வெல்லமா? நான் இறந்து போனாலும் கூட என் பெயரை நான் கெடுத்துக் கொள்வேனா? எப்பொழுது ஜன்மம் எடுத்தோமோ மரணம் என்பது நிச்சயம் அப்படி வந்தால் வரட்டுமே இதற்காக பயப்படுவேனா" என்றான்.

"கனபார மேறிற் பிளந்திறுவ தன்றியே
கற்றூண் வளைந்திடாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூர னமரின் முறியான்
திரமோரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சீவனள விற் கொடாது
திரமான பெரியோர் சரீரங்கள் போகினுஞ்
செப்பு முறை தவறிடார்கள்
வனமேறு கவரிமான் உயிர் போகுமள வுந்தன்
மயிரி னொன்றுங் கொடாது
வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாது நிறை தவறி நடவாள்
மனதார வுன தடைக்கல மென்ற கீரற்கு
வன் சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
மலை மேவு குமரேசனே."

குமரேச சதகம்-மானம் விடாமை.

இவ்வளவு பிடிவாதமாய்ப் பேசும் சூரபதுமனுடைய பாதங்களில் உடனேவணங்கி பானுகோபன் தன் பிராணன் இருந்தென்னபோயென்ன என்று மனதில் தீர்மானித்து "இன்றையதினம் சிவகுமாரனாவது, அல்லது நானாவது உயிரிழக்க வேண்டும்" என்று புறப்பட்டு யுத்தகளம் வந்து சேர்ந்தான்.

## பானுகோபன் வதம்.

இருபக்கத்துச் சேனைகளும் தயாராயிருந்தன யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. பூதர்கள் மலைகளையும் மரங்களையும் பிடுங்கி ராக்ஷதர்மேலெறிந்தார்கள். இராக்ஷதர்கள் மழு, சூலம், சக்கரம் முதலிய ஆயுதங்களை எறிந்து யுத்தம் செய்தார்கள். அச்சமயத்தில் ராக்ஷதர்களில் சிலர் தலையற்றும் மண்டை யுடைந்தும் மார்பு கிழிந்தும் நெற்றி பிளந்தும் கைகள் ஒடிந்தும் கால்கள் முறிந்தும் விழுந்து மாண்டார்கள். பூதர்களும் அனேகம் பேர் சின்னபின்னமாய் கால்வேறு தலை வேறாய் விழுந்து கிடந்தார்கள். யானைகள்குதிரைகள் எல்லாம் பிணங்களாய்க் குவிந்து பெரிய மலைகள் போலாயின. கபந்தங்கள்கூத்தாடின. அவைகளைச்சுற்றி நாய், நரி, பேய், கழுகு முதலியவை கூட்டங்களாய்க் கூடிக் கொத்திக் கொண்டிருந்தன. இச்சமயத்தில் மிக்க கோபமடைந்து பானுகோபன் சரங்களை வேகமாய் மழைபோல் பொழிந்து பூதர்களில் அனேகரைச் சல்லடைக்கண்களாய்த் துளைத்தான். இதைக் கண்டதும் வீரபாகு கோபமடைந்து கண்கள் சிவந்து, ஷண்முகனை தியானித்து மகாமேருவை யொத்த பெரிய தனுஸ்ஸை வளைத்து டங்காரம் செய்து சரவருஷங்களைப் பெய்து அனேக ராக்ஷதர்களைக்கொன்றான். அவுணர்கள் எவ்வளவு எதிர்த்தும் பிரயோசனப் படவில்லை. சேனைகள் முழுவதும் அனேகமாய் அழிந்தன. அரக்கர்கள் மிகவும் கவலையடைந்தார்கள்.

பானுகோபன் மிகவும் கோபமடைந்து எதிரே

வந்து, "அடா தூதா! மற்றவர்களை எல்லாம் நீ கொன்றாய். நீ என்னைக் கொல்ல முடியுமா? சண்டைக்கு வா" என்றான். உடனே வீரபாகு "வீண்பேச்சு என்ன! உன்னால் முடியுமானால் சண்டை செய். பார்ப்போம்" என்றான். உடனே கோபமடைந்து, பானுகோபன் ஆயிரம் பாணங்களை வில்லினிடமாய்த் தொடுத்து ஏவினான். அவைகள் வீரபாகுவின் மார்பில் தைத்து முதுகின் வழியாய்ச் சென்றன. அச்சமயத்தில் இரத்தம் பிரவாகமாய் ஓடிற்று; அதைக் கொஞ்சமும் இலக்ஷியம் செய்யாமல் வீரபாகு ஆயிரம் பாணங்களை பானுகோபன் புஜங்களின் மேல் ஏவ, இரத்தம்பிரவாகமாய் ஓடியது. பானுகோபனும் அதிகரித்துடன் நூறு அர்த்த சந்திர பாணங்களை விட்டு வீரபாகு தேவருடைய வில்லை ஒடித்தான். தேவர்கள் மிகவும் வருந்தினார்கள். ஆனால்வீரன்கலங்காமல் வேலாயுதத்தை விட்டவுடன் அது பானுகோபனுடைய நெற்றியில் பாய்ந்து இரத்தம் கிளம்பி அவன் பிரமையுற்றுஒன்றும் செய்ய முடியாதவனாய் நின்றான். அச்சமயத்தில் வீரபாகு வாயுவாஸ்திரத்தை விட்டார். அதனால், பானுகோபன்மயக்கந் தெளிந்து, பிரதியஸ்திரம் விட்டு மறுத்தான். அப்படியே அனேக தேவதாஸ்திரங்களை விட்டு யுத்தம் செய்யும்போது, பானுகோபன் நாராயணாஸ்திரத்தை விட்டான். அது சுழுது கொண்டு வருவதைப் பார்த்து, வீரபாகுவும் பிரதி நாராயணாஸ்திரம் விட்டார். இரண்டு அஸ்திரங்களும்

யுத்தம் செய்யும்போது பார்ப்பதற்கு மிகவும் ஆச்சரிய மாயிருந்தது கடைசியில் அவைகள்மறைந்து போயின.

ஒரே ஒரு ஆயுதம் பாசுபதாஸ்திரம் மாத்திரம் பாக்கி இருந்தது. ஆகையால் பானுகோபன் அதையும் தோற்று விடக் கூடாதென்று நினைத்து மாயா யுத்தம் செய்ய ஆரம்பித்து போர் வீரர்களுக்கும் இலக்ஷத் தெண்மருக்கும் தீங்குகள் செய்யவே, வீரபாகு மிக்க கோபங்கொண்டு, பானுகோபனைச் சடுதியில் கொன்று விடவேண்டும் என்று தீர்மானித்து ஞானாஸ்திரத்தை விட்டு அவனுடைய மாயைகளையழித்தார். பிறகு இரு வரும் கடினமான யுத்தம் செய்தார்கள். வீரபாகுவினு டைய வில்லை பானுகோபன் கண்டித்தான். வீரபாகு தன்னுடைய பாணங்களால் பானுகோபனுடைய கிரீ டத்தைப் பொடியாக்கினார் பானுகோபன் உடனே வீரபாகுவின் கவசத்தைப் பிளந்து தள்ளினான். வீர பாகு ஏழு பாணங்களால் பானுகோபனுடைய வில்லை இரண்டு துண்டமாக வெட்டித் தள்ளினார்.

உடனே பானுகோபன் வேலாயுதத்தை ஏவ வீரபாகு ஆயிரம் பாணங்கள் போட்டும் எதிர்க்க முடி யாமல் தனக்குச் சிவபிரான் கொடுத்திருந்த வீரவாளா யுதத்தால் அதை வெட்டித் தள்ளினார். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிறகும் பானுகோபன் தன க்கு மாயை கொடுத்திருந்த அஸ்திரத்தை விடுக்க நினை த்தான். இதையறிந்து உடனே மிக்க தைரியத்துடன் வீரபாகு பானு கோபனுடைய தலையை வெட்டினார்.

தேவர்கள் சந்தோஷமடைந்து புஷ்பமாரி பொழிந்தார்கள். சாதுக்கள் கொண்டாடினார்கள்.

இச் சரித்திரத்தைச் சொல்லக் கேட்டதனால் பாண்டவர்கள் துரியோதனாதிகளை வென்றார்கள்; பரசுராமன், கார்த்தவீரியார்ஜ்ஜுனனை ஜெயித்தான்.

## சிங்கமுகவதம்

சூரகுமாரனாகிய பானுகோபன் போர்க்களத்தில் மடிந்தான். சூரியன் சந்தோஷ மடைந்தான் தேவேந்திரன் முதலான சகல தேவர்களும் ஆனந்த மடைந்தார்கள். கந்தர்வர்கள் கானம் பண்ணினார்கள் அரம்பையர்கள் நர்த்தனமாடினார்கள் வீரபாகு தேவர் தன் சபதம் நிறைவேறினதற்காக மனமகிழ்ந்தார். பூதப்படைகளோடு சுப்பிரமணிய சுவாமியின் சன்னிதியையடைந்து செந்தாமரை நிகர் பாதங்களில் வணங்கி நின்றார். சுப்பிரமணியர் மிகவும் களிப்படைந்து முகமலர்ச்சியுடன் வீரபாகுவைப் பார்த்து, அவனுக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக் கொள்ளச் சொன்னார். வீரபாகு தேவரும், " தங்களுடைய திவ்விய சரணங்களில் சதாகாலமும் எனக்கு இடைவிடாத பக்தியிருக்கும்படி அநுக்கிரகம் பண்ணவேண்டும் " என்று வேண்டி வரனைப்பெற்றுக் கொண்டு தன் இருப்பிடம் சேர்ந்தார்.

தூதர்கள் மூலமாய் பானுகோபன் இறந்ததைக் கேள்விப் பட்டு சூரபதுமன் கீழே புரண்டு புரண்டு அழுதான். தூதர்கள் பானுகோபனைச் சூரன் முன்பாகக் கொண்டு வந்தார்கள் சூரன் மிகவும் வருந்தினான்.

தாயாராகிய பதுமகோமளையும் மகன்மேல் விழுந்து அழுதாள்.

இருந்தாலும் சூரன் தைரியமடைந்து, அடங்காத கோபத்தோடு, "பகைவரைக் கொன்று விட்டு ஒரு வீரயாகம் செய்து என் குமாரனை எழுப்புவேன் உடலைக் காப்பாற்றி வையுங்கள்" என்றான். தூதர்களை யனுப்பித்து சிங்கமுகனைக் கூட்டிவரச்சொன்னான். அவர்களும் அப்படியே வட சமுத்திரத்திலுள்ள அசுரபுரிக்குச் சென்று சமாசாரங்களைத் தெரிவித்தவுடன் சிங்கமுகன் சேனைகளுடன் புறப்பட்டு சூரனுடைய நகரமாகிய மகேந்திர புரத்துக்கு வந்து சூரனரண்மனைக்குள் சென்று, தாங்கள் என்னை அழைத்த காரணமென்ன" என்றான். சூரபதுமன் உடனே பானுகோபவதத்தைப் பற்றிச் சொல்லிக் கோவென்றலறியழுது, சீக்கிரம்போய் சுப்பிரமணியனை வென்றுவா" என்றான்.

சிங்கமுகன்:—"நான் எவ்வளவு சொல்லியும் என் புத்திமதிகள் உனக்கு விஷங்கள் போலிருந்தனவே. இன்னமும் அந்த ஷண்முகனைக் குழந்தையென்று எண்ணுவது முட்டாள் தனம். எப்படி யிருந்தாலும் உன்னுடைய உத்தரவுப் பிரகாரம் கந்தஸ்வாமியோடு யுத்தத்திற்குப் போவேன். அந்தனையென்றால் பிறகு உன்னைக் காண்பேன்." என்று சொல்லி தனக்கென் றமைக்கப்பட்டிருந்த விடுதியிற் சென்று ஆகாரங்களை உட்கொண்டு திவ்வியமாய் அலங்காரம்பண்ணிக் கொண்டு சேனைகளுடன் போர்க்கோலமாய்ப் புறப்பட்டு வருவதை தேவர்கள் பார்த்து மிகவும் பயந்து தன்

முகனிடம் ஓடி சிங்கமுகனுடைய வாலைத் தெரி
வித்தார்கள். ஷண்முகனுடைய உத்தரவின் பிரகா
ரம் வீரபாகு தேவர் சேனைகளோடும் ஆயுதங்
களோடும் அசுரர்களிருக்கும்படியான யுத்த பூமிக்கு
வந்து சேர்ந்தார்.

பூதர்களும் அவுணர்களும் யுத்தம்செய்ய ஆரம்பித்தார்கள். ஆயிரம் யோஜனை விஸ்தீரணமான சிங்கமுகனைப் பார்த்ததும் பூதர்களிற் சிலர் மாய்ந்தார்கள். அவுணர்கள் எதிர்த்ததினால் சில பூதர்கள் தோற்று ஓடினார்கள். பூதப்படைத் தலைவனாகிய சிங்கனுக்கும், அவுணர் தலைவனாகிய தசமுகனுக்கும் நேர்ந்த யுத்தத்தில் தசமுகன் மார்பில் அடிபட்டு விழுந்திறந்தான். உடனே அவுணவீரர்கள் எதிர்க்க, அனகன் என்ற பூதப்படைத்தலைவன் அசுரர்களை எதிர்த்தழித்தான். துன்முகன் என்ற அவுணவீரன் பற்பல மாயா வடிவங்களோடு யுத்தம்செய்தான். வீரமார்த்தாண்டன் ஞானாஸ்திரத்தினால் அவனது மாயங்களை யழித்தான். துன்முகன் ஆயிரம் பாணங்களை ஏவ, வீரமார்த்தாண்டன் ஆயிரம் பாணங்களாலே அவைகளைத்தடுத்து அவன் மேல் அநேக பாணங்களை விட்டதும் துன்முகன் மூர்ச்சையுடைந்து ஒருவாறு தெளிந்து பிழைத்தால் போதும் என்று மறைந்து போனான்.

உடனே சிங்கமுகன் வந்து பூதர்களை எதிர்த்தான். அவர்கள் மலைகளையும் மரங்களையும் சிங்கமுகன் மேல் [illegible] எறிந்தார்கள். ஆனால் அவைகளைக் [illegible] [illegible]இல்லை. சிங்கமுகன் தேரிலிருந்து [illegible]

யானைகளுக்கு மத்தியில் சிங்கம் எப்படிப்பாயுமோ அப்படி சேனைகளுக்கு மத்தியில் பாய்ந்தான். வெகுபேர்களை நாசம் பண்ணினான். பிறகு தேரேறினான். அக்கினிக் கண்ணன் என்ற பூதவீரன் தண்டாயுதத்தை விட்டு சிங்கமுகனுடைய தேர்ப்பாகனது தலையைப்பிளந்தான். சிங்கமுகன் தண்டாயுதத்தை விட்டு அக்கினிக்கண்ணனை மூர்ச்சை யடையும்படி கீழே வீழ்த்தி வேறொரு தேர்ப்பாகனை ஏற்பாடு செய்துகொண்டு ஸேனாபதியை எதிர்த்தான். அவனும் மூர்ச்சையடைந்தான். உடனே தண்டி என்ற பூதவீரன் சிங்கமுகனை கதையினால் அடித்தான். கதை ஒடிந்து போயிற்று. உடனே ஆகாயத்திலெழும்பி சிங்கமுகனுடைய தோள்களின் மேல் மாற்றி மாற்றி மிதித்தான். சிங்கமுகனும ஏதோ ஒரு ஈ மொய்க்கிறது என்று நினைத்து சொரிந்து துடைத்தான். தண்டி மிகவும் வருத்தப்பட்டு ஓடிப்போனான்.

பிறகு இலக்ஷத்தெட்டு வீரர்கள் யுத்தம் செய்தார்கள். சிங்கமுகன் பூமியில் இறங்கி தேர்களை முறித்தான் இலக்ஷத்தெண் மர்களும் ஓடிப்போனார்கள். சிங்கமுகன் திரும்பியும் தேரிலேறினான். தம்பிமார்கள் ஓடிப்போனதைப் பற்றி மிகவும் கோபமடைந்து வீரபாகு, பாணங்களை அக்கினிவேகமாய் விட்டு அஷணப்படைகளை நிறுத்தார். சிங்கமுகனுடைய பிள்ளைகள் நூறுபேர்களும் [illegible] தேர்களை எல்லாம் பொடியாக்கிவிட்டு, கீழே இறங்கினார். அவர்கள் நூறுபேரும் [illegible] அவரைச்சேர்ந்துப் பிடித்தார்கள் [illegible] வீரபாகு [illegible] அவர்கள் நூறுபேரையும்

சொன்று தன் தேரில் ஏறிக்கொண்டார். இதைக்கண்டு சிங்கமுகனும் கோபமுமடைந்து வீரபாகுவைப் பார்த்து,

சிங்கமுகன் " நீயார் " என்றான்.

வீரபாகு " நான் ஆதியில் தூதனாக வந்தவன். சூரனுடைய குமாரராகிய வஜ்ரபாகு பானுகோபன் முதலானவர்களைக் கொன்றவன் நானே. இப்பொழுது எல்லா ராக்ஷதர்களையும் கொல்லத் தீர்மானித்திருக்கிறேன் என்றான்.

சிங்கமுகன் " இந்த யுத்தகளத்தில் உன்னைக் கொன்று உன்னையனுப்பித்த சுப்பிரமணியனையும் கொல்லுவேனென்பதை நிச்சயமாய்த்தெரிந்துகொள்." என்றான். வீரபாகுவானவர் பதினெட்டு பாணங்களை விட்டார். அவைகள் சிங்கமுகன் மார்பில் பட்டு முறிந்தன. சிங்கமுகன் தண்டாயுதத்தை வீசினான். வீரபாகு அதை நூறு பாணங்களால் அறுத்து, பிறகு ஆயிரம் பாணங்களைச் சிங்கமுகனுடைய மார்பில் எறிந்தார் அவைகள் ஒடிந்து பொடியாய்ப் போயின. சிங்கமுகன் சூலாயுதத்தை வீசினான். வீரபாகு இரண்டாயிரம் பாணங்களை விட்டும் தடுக்க முடியாமல் அதனை வாளாயுதத்தால் வெட்டி சிங்கமுகன்மேல் சொஸ்திரத்தை ஏவினார். அவனும் பிரதி சொஸ்திரத்தை ஏவி விட்டபடியால் இரண்டும் ஒன்றையொன்று எதிர்த்துச் சண்டை செய்வது மிகவும் பார்க்கத்தக்கதாயிருந்தது.

வீரபாகுதேவர் பத்து பாணங்கள் விட்டு [illegible] தேர்ப்பாகனுடைய பண்டையை [illegible]

சிங்கமுகன் தண்டாயுதத்தை வீசினான். அது பொடியாய்விட்டது. வீரபாகு ஆயிரம் பாணங்களை விட்டு சிங்கமுகனுடைய தேரைச் சூர்ணமாகச் செய்தார். பூதர்கள் சிங்கமுகனைச் சூழ்ந்தார்கள். ஆயுதங்களைவீசி சிங்கமுகனுடைய ஆயிரம் ஆயுதங்களையும் அறுத்தார்கள். தேவர்கள் மிக்க சந்தோஷித்தார்கள். சிங்கமுகன் உடனே மாயாபாசத்தை வீசி பூதர்களையும் லக்ஷத்தெட்டு வீரர்களையும் வீரபாகுவையும் பாற்கடலிலுள்ள உதயகிரியில் கொண்டுபோய்ச் சேர்த்தான். தேவர்கள் மனம் வருந்தினார்கள். தேர்ப்பாகனாகிய வாயுபகவான் இச்சமாசாரத்தை குஹனுக்குத் தெரியப்படுத்தினார்.

சுப்பிரமணியர் நேரே யுத்தகளம் வந்தார். யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. சிங்கமுகன் ஒரு பெரிய உருவங்கொண்டு ஆயிரவெள்ளம் பூதச்சேனைகளையும் அப்படியே வாரி உண்டான். சுப்பிரமணியர் தனியாய் இருக்கிறார். தூதர்கள் சென்று சூரனிடம் இச்சமாசாரத்தைத்தெரிவிக்க சூரன் கோபுரத்தினுச்சியில ஏறி தன் தம்பியின் வீரச்செயல்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். சுப்பிரமணியர் வில்லையெடுத்து நாணேற்றி ஒரு டங்காரம் செய்தார். அந்த சப்தம் கேட்டு வெகுபேர் இறந்தார்கள்.

சிங்கமுகன், சுப்பிரமணியரைப் பார்த்துச் சொல்லுவான் "தேவர்கள் எங்களுடைய பகைவர்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் சண்டை இருப்பது சகஜம். இதன் மத்தியில் நீ சண்டைக்கு வருவானேன். உனக்கும் எங்களுக்கும் ஒரு விரோதமும் கிடையாதே" என்றான்.

சுப்பிரமணியர் " எளியாரை வலியார் அடித்தால் வலியாரை நாம் அடிப்போம். அதனால்தான்வந்தேன் " என்றார்.

சிங்கமுகன் " பலசாலியாயிருந்தால் போர்செய் " என்றான்.

சுப்பிரமணியர் ஒரே பாணம்விட்டு சிங்கமுகனுடைய மார்பைத்துளைத்தார். அந்த பாணம் முதுகின் வழியாய்ப் பறந்து போயிற்று. உடனே அவனுடைய வயிற்றிலிருந்த பூதர்கள் வெளியே கிளம்பி வந்தார்கள். சிங்கமுகன் மிகவும் கோபமடைந்து கையினால் ஆவாரத்தை யடைத்துக்கொண்டு கதாயுதத்தை வீச, சுப்பிரமணியர் நான்கு கூர்மையான பாணங்களை ஏவினார். அவைகள் கதாயுதத்தைப் பொடியாக்கி சிங்கமுகனது நெற்றியில் தைத்துருவிச்சென்றன. சிங்கமுகன் மூர்ச்சையானான். அடைத்த கை நெகிழ்ந்தது. பூதர்கள் எல்லோரும் வெளியில் வந்து சுவாமிக்கெதிரில் நின்றார்கள். உடனே சுவாமி உதயகிரியில் ஒரு பாணம் செலுத்தினார். அந்த பாணமானது அப்படியே இலக்ஷத்தொன்பது வீரர்களையும் சுவாமியிடம் கொண்டுவந்து விட்டது. ஷண்முகன் அவர்களுக்கு இனிமையான வார்த்தைகள் சொல்லி ஆசுவாஸப்படுத்தினார். சிங்கமுகனுடைய சேனைகள் கோபத்துடன் சுவாமியை வளைத்துக்கொண்டார்கள். சுவாமி அவர்களையெல்லாம் உடனே இறக்கும்படி செய்தார். சிங்கமுகன் மூர்ச்சை தெளிந்தெழுந்து கோபத்துடன் ஆயிரம் பாணங்களைவிட்டு சுவாமியின் தேர்ப்பாகனை மூர்ச்சை

யடையச்செய்தான். சுப்பிரமணியர் நூறுபாணங்களால் சிங்கமுகனுடைய தேரையழித்தார். தரையிலிருந்தே அனேகம் பாணங்களை சிங்கமுகன் ஏவ சுவாமி ஆயிரம் பாணங்களால் அவனுடைய விற்களையெல்லாம் ஒடித்தார். சிங்கமுகன் சூலத்தை ஏவினன். சுப்பிரமணியர் உடனே பதினறு பாணங்களைவிட்டு சூலத்தை யறுத்து ஏழுபாணங்களால் தண்டாயுதத்தோடு விளங்கின அவனுடைய கைகளை யறுத்துத்தள்ளினர். ஆனலும் கையானது உடனே மறுபடியும் முளைத்து விட்டது. சிங்கமுகன் தண்டாயுததைத எடுத்தான். சுப்பிரமணியர் ஆயிரம் பாணங்களைவிட்டு தண்டத்தை துண்டங்களாக்கினர். சிங்கமுகன் கைப்பாசத்தை ஏவ சுப்பிரமணியர் ஆயிரம் பாணங்களாலே அதை அறுத்துத் தள்ளினர். சிங்கமுகன் சுவாமியைப்பிடிக்க எண்ணிப் பக்கத்தில் வந்தான். சுவாமி மூவாயிரம் பாணங்களை ஏவி அவனுடைய ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையும் அறுத்தார். உடனேயே அவைகள் திரும்பி முளைத்தன. சிங்கமுகன் தன்கைகளால் மலைகளை எல்லாம் பெயர்த்து சுவாமிமேல் வீசினன். சுவாமி அவனுடைய ஆயிரந்தலைகளையும் இரண்டாயிரம் கைகளையும் மறுபடியும் அறுத்தார். அவைகள் கீழே விழுவதற்கு முன் திரும்பியும், அவனுடைய தலைகளும் கைகளும் முளைத்துவிட்டன, உடனே ஆறுமுகவன் ராக்ஷதனுடைய தலைகளும் கைகளும் உண்டாகாமலிருப்பதற்காக உங்காரம் செய்தருளினர்.

சிங்கமுகன் ஓரே தலையுடனும் இரண்டு கைகளோ டும் நின்றான். பின்னும் அதிகர்வத்தினால் ஒருமலையைத் தூக்கி எறிந்தான். ஷண்முகன் அதை ஓரே பாணத் தாலழித்தார். சிங்கமுகன் திரும்பியும் கதாயுதத்தை ஏவ, ஷண்முகன் வஜ்ராயுதத்தை விட்டார். இந்த வஜ்ராயுதம் கதாயுதத்தைப் பொடிசெய்து *அவன் மார்பில் தாக்கி முதுகின் வழியாய் ஊடுருவிச் சென்ற வளவில் அவன் உயிரிழந்தான்.

வஜ்ராயுதமானது ஆகாசகங்கையில் போய் ஸ்நா னம் செய்து திரும்பி ஷண்முகனிடம் வந்துசேர்ந் தது. தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள். கந்தர் வர்கள் கானம் பண்ணினார்கள் வாத்திய கோஷங்கள் முழங்கின. வீரபாகு முதலானவர்கள ஷண்முகனைத் தோத்திரம் செய்து கொண்டாடினார்கள்.


* இச்சரித்திரத்தை அகஸ்தியமுனிவர் ஸ்ரீராம ருக்குச் சொன்னார். அதைக்கேட்டு தைரியமடைந்து ஸ்ரீராமர் ராவணனை ஜெயித்தார்.

## சூரஸம்மாரம்.

சிங்கமுகன் ஷண்முகனால் ஏவப்பட்ட வஜ்ராயுதத் தால் இறந்தான். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார் கள். அப்ஸரஸ்த்ரீகள் நர்த்தனமாடினார்கள். தூதர்கள்

---

குறிப்பு:-ஸ்ரீமத் ராமாயணத்தில் அகஸ்திய முனிவரி டமிருந்து ஆதித்யஹ்ருதயமந்திரம் உபதேசிக்கப்பெற்று ஜெபம் செய்து ஸ்ரீராமர் தைரியமடைந்து ராவணனை ஜெ யித்ததாக சொல்லப்பட்டிருக்கிறது.



சிங்க முகவதம்.

மூலமாய் சிங்கமுகவதத்தைக் கேட்டு பர்வதத்தின் உச்சியில் இருந்த சூரபத்மன் அப்படியே கீழே விழுந்து புரண்டான் உருண்டான். "உன்னைப்போல தம்பி இருந்தானல்லவோ நான் இராச்சியபரிபாலனம் செய்தேன். நான் யாககுண்டத்தில் விழுந்து இறந்தவன் உயிர் பிழைத்தெழுந்தேனே. இனிமேல் என்னை ஆதரிக்கிறவர் யார் இருக்கிறார்கள்? ஒருவருமில்லையே; நான் என்னசெய்வேன். ஒரு இளங்குழந்தை உன்னைக்கொன்றுவிட்டதே" என்று அழுதான். உடனே துயரம் நீங்கி தூதர்கள் மூலமாய் ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள சேனைகளையும் கூட்டிவரச் சொன்னான். அவர்களும் அப்படியே ஒருநொடியில் கூட்டி வந்தார்கள்

சூரபத்மன், ஸ்நானம் செய்து விபூதி தரித்து மாமிச முதலானவைகளைப் புசித்து கவசங்கள் தோள்வளைகள் முதலானவைகளால் அலங்காரங்கள் செய்துகொண்டு யுத்தகளத்துக்கு வந்து சேர்ந்தான். பிரம்ம விஷ்ணு முதலான தேவர்கள் சூரனுடைய வரவை ஷண்முகனுக்குத் தெரிவித்தார்கள். ஷண்முகனும் வாயுவை சாரத்தியம் செய்யச்சொல்லி சேனைகளோடு இரணக்களம் வந்தார். எதிரியின் சேனைகளைப் பார்த்தவுடன் இந்திரன் நடுங்கினான். தேவர்கள் எல்லோரும் மிகவும் பயப்பட்டார்கள். நாராயணமூர்த்தியான மகாவிஷ்ணு அவர்களெல்லோருக்கும் ஷண்முகனுடைய பராக்கிரமங்களைச்சொல்லி மிகவும் தைரியப்படுத்தினர்.

தேவர்களும் ராக்ஷஸர்களும் யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். வீரபாகு நேராகவே எதிர்த்து கொன்றும் அசுரப்படைகள் அழிய வில்லை. இத்தகவலை சுப்பிரமணிய சுவாமியிடம் தெரிவித்தார்கள். உடனே ஷண்முகன் வில்லை வளைத்து நாணேற்றி டங்காரம் செய்து யுத்தம் செய்தார். ஆகாசமுதல் பூமிவரையிலுள்ள ராக்ஷஸக்கூட்டங்கள் மடிந்தன. பிறகும் ராக்ஷஸர்கள் சுவாமியைச் சூழ்ந்துகொண்டார்கள். உடனே குமாரக்கடவுள் வாயுவைப்பார்த்து, சேனைகளுக்கு மத்தியில் தேரைச் செலுத்தும்படி ஆக்ஞாபித்தார். அவன் பூமி, ஆகாயம் சமுத்திரம் மூன்று பக்கங்களிலும் தேரைச்செலுத்தினான் அதேசமயத்தில் ஷண்முகன் சரமாரி பெய்து அவுணர்களைக் கொன்றார். இரத்தம் பிரவாகமாய் ஓடியது. சேனைகள் வரும் அண்டத்தின் வழியை அடைத்தார். ஸுப்பிரமணிய தேவருடைய கண்பார்வையினால் இரத்தப்பிரவாகம் வறண்டு போயிற்று. அங்கேயுள்ள பிரேதக் குவியல்கள் எரிந்து சாம்பலாய் விட்டன. இதைப் பார்த்து பிரம்மா விஷ்ணு முதலானதேவர்கள் சந்தோஷமடைந்து ஆறுமுகவனைத் தோத்திரம் செய்தார்கள்.

இச்சமயத்தில் சூரன் மிகவும் கோபமடைந்து ஆறுமுகவனைப் பார்த்து "வரபலத்தினால் நான் இறக்கவே மாட்டேன். உன்னையும் விடப்போகிறதில்லை" என்றான். ஷண்முகன் வீரபாகுவை சூரனோடு சண்டை செய்யும்படி யனுப்ப, அவன் சூரனோடு சண்டை செய்து மூர்ச்சை யடைந்தான். மூர்ச்சை தெளிந்து எழுந்தவுடன்சுப்பிர மணியரிடம் வந்து சேர்ந்தான்.

சூரன் வில்லுடன் சுவாமிக்கெதிரில் வந்து கொடியை யறுத்தான். சுப்பிரமணியர் மிகவும் கோபித்து ஏழு பாணங்களால் சூரனுடைய ரதத்திலுள்ள கொடியை யறுத்து சமுத்திரத்தில் தள்ளினார். தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்தார்கள். சூரன் ஆகாசத்தில் பாய்ந்து தேவர்கள் மேல் பாணங்களை ஏவினான். சுப்பிரமணியர் தன்னுடைய பாணங்களால் சூரனுடைய பாணங்களை யறுத்து ஆகாசம் போய் பாணங்களை ஏவிச் சண்டை செய்தார். சூரன் தன்னுடைய இரதங்களை பாதாளத்திலும் பூலோகத்திலும் எண்டிசைகளிலும் சப்த சமுத்திரங்களிலும் அஷ்ட குலாசலங்களிலும் செலுத்த சுப்பிரமணியரும் அவ்வவ்விடங்களிலே துரத்திக்கொண்டு சென்று தன்னுடைய பதினறு பாணங்களால் சூரனுடைய இரதத்தைப் பொடி பண்ணினார். சூரன் பூமியில் வந்தான். இருவருக்கும் யுத்தம் தீவிரமாய் நடந்தது. சூரன் மேல் பட்ட ஆயிரம் பாணங்கள் தூளிகளாய் விட்டன. இரண்டாயிரம் பாணங்கள் சுப்பிரமணிய சுவாமிமேல் பட்டுத் தூளியாயின. சுப்பிரமணியர் சூரன் வில்லை யொடித்தார் சூரன் ஆகாயத்தில் கிளம்பினான். ஆறுமுகவனும் கூடவே ஆகாயத்திற் சென்று போர் செய்தார். திரும்பியும் சூரன் கீழே இறங்கினபோது சுப்பிரமணியரும் கீழே இறங்கி பூமியில் வந்தார். சூரன் எந்த இடத்திற் சென்றாலும் சுப்பிரமணியரும் துரத்திச்சென்று அண்டத்திற் பொருந்திய வழியிற்போய் சூரனுடைய தேரை யழித்து தன்னுடைய மனோவேகம் என்ற தேரில்

ஏறினார். பிறகு வந்த அசுரச்சேனைகள் ஷண்முகன் பார்வையால் சாம்பலாய் விட்டன. அதற்கு மேலும் அண்டத்திலிருந்து வந்த படைகளை உங்காரத்தினால் அழித்தார். பிறகும் வந்த படைகளை ஷண்முகன், சங்கு, சக்கரம், வாள், கதை, கோதண்டம் என்ற பஞ்சாயுதங்களை ஏவி யழித்தார்.

சூரன் தனக்கு பரமசிவனார் கொடுத்த சக்கராயுதத்தை ஏவினான். அதை ஷண்முகன் கையால் பிடித்துக் கொண்டார். சூரன் பிறகு எத்தனை மாயா விதமாய் மாயாரூபங்களெடுத்து யுத்தம் செய்தான். சுப்பிரமணியரும் ஞானாஸ்திரத்தைத் தொடுத்து அந்த மாயாரூபங்களெல்லாவற்றையு மழித்தார். சூரன் ஒருவனாய் நின்றான். ஒன்றுந் தோன்றவில்லை. மாயம் அழிந்துவிட்டது ஆயிரத்தெட் டண்டங்களிலும் சென்றான். ஒவ்வொரு இடத்திலும் சுப்பிரமணிய சுவாமி பின்தொடர்ந்து பொருந்திய போர் செய்தார்.

சூரன் மறுபடியும் பூமியில் வந்து தன் தாயாராகிய மாயையை(ஸாரஸையை) நினைத்தான். அவளும் வந்து சேர்ந்தாள். அவளைப் பார்த்து சேனையிலிறந்த பேர்களெல்லாம் திரும்பியும் பிழைக்க ஒரு உபாயம் சொல்லவேண்டுமென்று கேட்டான். அவளும் சூரனைப்பார்த்து, " பெரும் புறக்கடலில் ஒரு புறத்திலிருக்கும் (மிருதசஞ்சீவனி என்னும் பக்ஷிலையிருக்கும்படியான) அமிருதமலை இங்கு வருமானால் யாவரும் பிழைத்து எழுந்திருப்பார்கள். இருந்தாலும் நீ ஆறுமுகனை குழந்தையாக எண்ணி சண்டை செய்

யப்போகிறாய். அவருடைய வேலாயுதத்துக்குக் கட்டாயம் நீ இரையாவாய். சிங்கமுகன், தாரகன், பானு கோபன், இன்னும் மற்ற எல்லோரும் அழிந்தபிறகு கூட தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க நீ நினைக்கவில்லை" என்று சொல்லி மறைந்தனள். யுத்தமத்தியில் திடீரென்று சுப்பிரமணியரைக் காணதபடியால் பிரம்மாதி தேவர்கள் விஷ்ணுவைப் பிரார்த்தித்துக் கேட்கும்போது அவர் "ஷண்முகன் சாமான்னியரல்லர் அவரைப் பற்றி நீங்கள் சந்தேகிக்க வேண்டாம் என்று அவருடைய பெருமையை எ த்துச் சொல்லிப்பற்பல விதமாய் அவர்களைத் தேற்றினர்.

சூரன் தனக்கு மகாதேவனால் கொடுக்கப்பட்ட சிங்கவாகனத்தின் மேலேறிக்கொண்டு தன் இரதத்தை ஏவி மிருத சஞ்சீவனியைக் கொண்டு வரச்சொன்னான். அதுவும் உடனே அவனுடைய உத்தரவுப் பிரகாரம் போய் அந்தமலையைத் தூக்கிக்கொண்டு வரும்போதே அதன் காற்றுப்பட்டு தாரகன் சிங்கமுகன் பானுகோபன் முதலான அவுணப்படைகளனைவரும் உயிருடனெழுந்தார்கள் இதைப்பார்த்து தேவர்கள் மிகவும் நடுக்கலுற்றார்கள்.

சுப்பிரமணிய சுவாமி சிவாஸ்திரத்தை ஏவி, சேனைகளையெல்லா மழித்தார். சூரன் துன்பமடைந்தான். தேவர்கள் துன்பம் நீங்கினர்கள். சூரனால் ஏவப்பட்ட தேர் வீரபாகு முதலான இலக்கத்தொன்பது வீரர்களையும் மயங்கச்செய்து அவர்களை வாரிக்கொண்டு அதிவேகமாய் அண்ட முகட்டிற் போய்

சேர்ந்தது. சுப்பிரமணியர் ஏவின ஒரே பாணத்தி ஞல் இந்திரஞாலத்தேர் பூமிக்கு வந்து சேர்ந்தது. வீரபாகு முதலானவர்கள் மயக்கந் தெளிந்தெழுந்தார் கள். சுப்பிரமணியசுவாமி அந்தத்தேரைப் பார்த்து தன்னிடமே நிற்கும்படி கட்டளையிட்டார். அதுவும் அப்படியே நின்றது. சூரன் கோபமடைந்து ஏழு பாணங்களை ஏவினன். சுப்பிரமணியர் அவைகளைத் தடுத்து அவனுடைய வில்லையறுத்தார். சூரன் சூலா யுதத்தை வீசினன் சுப்பிரமணியர், ஆயிரங்கோடி பாணங்களைப் போட்டார். சூலாயுதம் அவ்வளவையும அறுத்துக்கொண்டு வந்தபடியால் ஷண்முகன் வச்சிரா யுதத்தை விட அது சூலாயுதத்தின் தலையைக் கவ்விக் கொண்டு சுப்பிரமணியரிடம் வந்து சேர்ந்தது.

பிறகு இரண்டாயிரம் பாணங்களால் சுப்பிரமணி யர் சூரனுடைய வாகனமாகிய சிங்கத்தை வதைத்தார். உடனே சூரன் சக்கரவாக பட்சியாக உருக்கொண்டு போர் செய்தான். சுப்பிரமணியர் தேவேந்திரனை மயி லாய் வரும்படி நினைத்தார். தேவேந்திரனும் மயிலு ருக்கொண்டான். குகனும் அதன்மே லேறிக்கொண்டு சக்கரவாக பக்ஷியை வாளாயுதத்தால் இரண்டு துண் டங்களாக வெட்டினர்.

அனேகமான உருவங்களெடுத்து சூரன் நாலு நாள் யுத்தம் செய்தான். சூரன்காற்று ரூபமாய் வந்த போது சுப்பிரமணியர் சர்ப்பரூபங்களான இலக்ஷம் பாணங்களை ஏவித்தடுத்தார். அவைகள் அவனுடைய

மாயையையழித்து சுவாமியின் கையில்வந்து சேர்ந்தன பிறகும் ஆயிரங்கோடி பாணங்களை ஏவிமாயாரூபங்கள் தொலையும்படி செய்து அவ்வளவு மாயாரூபங்களைக் காண்பித்த சூரனுக்கு தன் விசுவரூபத்தைக் காண்பித்தார். அச்சமயத்தில் சூரபத்மன், சிவமே இவர், என்று மிக்க அன்புடையவனானன். ஆனால் விசுவரூபமறைந்தவுடன், சூரனுடையஎண்ணம் மாறி மாயாரூபங்களுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தான். சுப்பிரமணியர் வேலாயுதத்தை உபயோகித்தார். சூரபதுமனும் சமுத்திரத்தினடியிற்சென்று மாமரமாகி நின்றான். வேலானது மாமரத்தை இரண்டாகப் பிளந்து விட்டது. சூரன் தன்சுய உருவத்தோடு வந்தான். வேலாயுதம் அவனைத் திடுக்கிடப்பிளந்து கங்கையில் போய் ஸ்நானம் செய்து ஷண்முகன் திருக்கரத்தில் வந்து சேர்ந்தது. தேவர்கள் சந்தோஷமடைந்தார்கள். இரண்டு பிளவுகளும் மயிலும் சேவலுமாக உருக்கொண்டன. சூரன் இவ்விதமாய் வந்தவுடன் ஷண்முகன் மயிலில் ஏறிக்கொண்டு சேவலைக் கொடியாக பிடித்துக் கொண்டார். தேவர்கள் ஆனந்தமாய்த் தோத்திரம் செய்தார்கள்.

இதைக் கேட்டவுடன் பதுமகோமளை (சூரனுடைய புத்திரி) உயிர் துறந்தாள். அவளுடைய பதிவிரதா தர்மத்தைப் பற்றி இவ்விடம் கூறவும்வேண்டுமோ? மீனுருவாய் சமுத்திரமத்தியில் இருந்த சூர்குமாரனை இரணியன் தன் சுயரூபத்தையடைந்து சூரபதுமனுக்கு உத்தரகிரியைகளை நடத்தினான்.

சுப்பிரமணியர் தேவேந்திர குமாரனாகிய ஜயந்தனை வீரபாகு மூலமாய் வரவழைத்தார். அவனும் ஷண்முகனுடைய சரணங்களில் வணங்கி நின்றான்.

சூரனுடைய பட்டணத்தை விழுங்கும்படி சமுத்திர ராஜனுக்கு ஆக்ஞாபனம் செய்து ஷண்முகன் திவ்வியமான வாத்திய கோஷங்களோடும் தேவ, கந்தர்வ, யக்ஷ கின்னர ஸித்த, ஸாத்யாதிகளாகிய ஸர்வகணங்களும் சூழ செந்திநகர் வந்து சேர்ந்தார்.

இச் சரித்திரத்தை ததீசிமுனிவர் தன் பாட்டனாரான சுக்கிரபகவானிடம் கேட்டு மகா விஷ்ணுவைப் போரில் வென்றார். விஷ்ணு முராசுரனை ஜயித்தார்.

# தேவ காண்டம்.

## தெய்வயானை பரிணயம்.

ஷண்முகன் சூரனுடைய சேனைகளையெல்லாம் கொன்று சூரனையும் வென்று வீரபாகுவை அனுப்பி சிறையில் இருக்கும் ஜயந்தன் முதலான தேவ ஸைன்யங்களைக் கூட்டிவரச் சொன்னார். அவர்களும் உடனே வந்து ஷண்முகனுடைய சரணங்களில் நமஸ்கரித்து நின்றார்கள். "நீங்கள் இனிமேல் ஸகல ஸ்வர்க்க போகங்களையும் அனுபவித்து ஸௌக்கியமாயிருங்கள்" என்று ஆசீர்வதித்து முருகப்பெருமான் யுத்தகளத்தில் இறந்த பூதர்கள் வீரர்களெல்லோரும் பிழைத்தெழுந்திருக்க வேண்டுமென்று நினைத்தார், அவர்களும் அப்படியே எழுந்தார்கள். உடனே ஸமுத்திரராஜனைப் பார்த்து வீரமயேந்திர பட்டணத்தை விழுங்கச்சொன்னார். அவரும் அப்படியே பிரீதியோடு நகரத்தை விழுங்கினார். வீரர்களோடும் பூதர்களோடும் மற்றவர்களோடும் ஷண்முகன் செந்திநகர் வந்துசேர்ந்தார். அங்கு திவ்வியமான வாத்தியங்கள் முழங்கின. ஷண்முகன் மயில்வாகனத்திலிருந்து இறங்கி ஸிம்ஹாஸனத்திலேறினார். ஸூர்யனும் அஸ்தமித்தது. தேவர்களெல்லோரும் ஷண்முகனைப் பூஜித்தார்கள். ஷண்முகனும் கருணைக்கண்ணால் தேவர்களெல்லோரையும் பார்த்தார்.

மறுநாள் காலமே ஷண்முகன் சம்புவைப் பூஜித்து செந்தி நகரிலிருந்து பாரசலத்தை நோக்கிப்புறப்பட்டார். தேவர்களும் ரிஷிகளும் அவ்விடம் ஷண்முகனைக் கொஞ்ச நாள் இருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். மயன் அம்மலையின் சிகரத்தில் ஒரு அழகிய பட்டணத்தைச் சிருஷ்டித்தான். அது கோபுரங்களோடும் நானாவித அலங்காரங்களோடும் அழகாயிருந்தது. பூதர்கள் வீரர்கள் எல்லாரும் வீதிகளில் நிறைந்திருந்தார்கள். ஷண்முகன் ரம்யமான ஆலயத்துட்போய் ஸிம்ஹாஸனத்தில் ஏறினார். பக்கத்தில் தேவர்கள் நின்றார்கள். பாரசர முனிவருடைய ஆறு புத்திரர்களும் மிகுந்த வணக்கத்துடன் ஷண்முகனைப் பூஜித்தார்கள். ஷண்முகன் அவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்ய எண்ணங் கொண்டு பிரம்மாதி தேவர்களுக்கு உத்தரவு கொடுத்தனுப்பினார். தேவேந்திரனும் தன்னுடைய பெண்ணாகிய தெய்வயானையை ஷண்முகனுக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்ற தன் எண்ணத்தை பிரம்மாதி தேவர்களுக்குத் தெரிவித்தான்; தன் பெண்ணையும் பத்தினியையும் தூதர் மூலமாய் மேருபர்வதத்திலிருந்து வரவழைத்தான். ஜயந்தனைப் பார்த்தவுடன் இந்திராணி மிகவும் தாங்க மாட்டாமல் அழுதாள். ஷண்முகனுக்குக் கல்யாணம் என்பதைக் கேட்டவர்களெல்லாம் மிக்க ஸந்தோஷத்தை அடைந்தார்கள். தேவேந்திரனும் ஷண்முகனிடம் வந்து சரணங்களில் நமஸ்கரித்து "தாங்கள் சூரபதுமாதிகளை வென்று எங்களுடைய பதவிகளை எங்

களுக்குக் கொடுத்தீர்கள். நாங்களும் பயம் நீங்கி னோம். ஆகையால், தாங்கள் என்னுடைய பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு என்னைக் கிருதார்த்தனு கச்செய்யவேண்டும்" என்ருன்.

"நாளைக்கே கல்யாணம் நிச்சயம், அதற்கு வேண் டிய எத்தனம் செய்" என்ருர் ஷண்முகன்.

தேவராஜன் உடனே தன் கிருகத்தை யடைந்து தூதர்களை அனுப்பி ஸகல தேவர்களுக்கும் மூசுகுந்த சக்கரவர்த்தி முதலியவர்களுக்கும் முகூர்த்த தினத் தைத் தெரிவித்தார். விசுவகர்மாவினுல் திவ்வியமான கல்யாண மண்டபம் சிருஷ்டிக்கப்பட்டது. ஸகல தேவர்களும் ரிஷிகளும் சந்திர ஸூர்யாதிகளும் பத்தினி ஸஹிதமாய் ஸைன்யங்களோடும் வாத்தியகோஷங்க ளோடும் வந்துசேர்ந்தார்கள். இலட்சுமி சரஸ்வதிமுத லானதேவ பத்தினிகள் தெய்வயானைக்கு மங்கள ஸ்நா னம் செய்துவைத்து அலங்காரம பண்ணினுர்கள். தேவேந்திரனும் குஹனுடைய இருப்பிடத்தைச் சேர்ந்து "தாங்கள் வந்து என் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு என்னைக் கிருதார்த்தனுகச் செய்ய வேண்டும்" என்ருன்.

அவ்வார்த்தையைக் கேட்டு உடனே லக்ஷத்தொ ன்பது வீரர்களுடனும் தகுந்த வாத்தியகோஷங்க ளுடனும் ஷண்முகன் கல்யாண சாலைக்கு வந்து சேர்ந்தார். இந்திராணி பாலை எடுத்துக்கொண்டு குஹனுடைய பாதங்களைப் பூஜை செய்தாள். புஷ்பாஞ் ஜலி செய்து விளக்கை எடுத்துக்கொண்டு பிரதக்ஷி

ணம் செய்து நமஸ்கரித்தாள். அப்படியே ஷண்முகன் கல்யாண மண்டபம் போய்ச்சேர்ந்தார். ஸர்க்ஷாத் சங்காரும் பார்வதி தேவியாரும் ஆகாச மார்க்கமாய் வந்து சேர்ந்தார்கள்.

அவர் வரவைப் பார்த்து குகன் முதலான எல்லோரும் எழுந்தார்கள். குகன் இருவரையும் எதிர்கொண்டழைத்தார், குகனைக் கண்டவுடன் சம்புவானவர் கட்டியணைத்து முத்தமிட்டு மிகுந்த ஸந்தோஷமடைந்தார். எல்லோரையும் கருணைக்கண்ணால்பார்த்து சங்கரன் ஸகல தேவர்களோடும் கல்யாண மண்டபத்தை யடைந்தார்.

பிரம்ம விஷ்ணுவாதிகள், ஏற்கனவே ஷண்முகனால் தேவர்கள் சூரபதுமாதிகளுடைய இடுக்கண்களிலிருந்து நீக்கப்பட்டதையும் அதனாலே ஏற்பட்டிருக்கிற விவாஹத்தையும் சங்கரனிடம் தெரிவித்தார்கள். அச்சமயத்தில் கல்யாண மணடபத்தில் மஹாலக்ஷ்மியும் ஸரஸ்வதியும தெய்வயானையைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். தெய்வயானையும் மாமனார் மாமியாராகிய பரமேசுவரர் பார்வதி இருவரையும் நமஸ்கரித்தாள் ஆனால் அவர்கள் பக்கத்திலே நின்றஷண்முகனைப் பார்த்ததும் லஜ்ஜை யடைந்தாள். பிரம்மவிதிப்பிரகாரம் கல்யாணம் சிறப்புறநடந்தது. பிரமமாவானவர் மாங்கல் யஸூத்திரத்தைக்குகனுடைய செந்தாமரை மலர்போன்ற கைகளில் கொடுக்க அவரும் தெய்வயானையின் கழுத்தில் அதை முடிந்து போட்டார். பிறகு அம்மி மிதித்தல் அருந்ததிகாட்டல் எல்லாம் ஆனதும்குகனும்தெய்வயா

ளையும் பார்வதி பரமேசுவரர்களை மூன்றுதரம் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தார்கள். அவர்களும் இருவரையும் கருணைக் கண்ணால் நன்றாய் பார்த்துவிட்டு அந்தர்த்தியானமாயினர். தேவர்களும் தகுந்தபடி உபசாரஞ் செய்யப்பட்டு அவரவர்களிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

குகன் தெய்வயானையோடு கூடசுகமாய் தன் இருக்கத்தில் இருந்தார். கொஞ்சநாட்களான பிறகு அவர் தேவேந்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய மனதில் எண்ணங்கொண்டார். பூதர்களையும் வீரர்களையும் அழைத்துக்கொண்டு வாத்தியகோஷங்களோடு புறப்பட்டு மனோவேகம் என்ற ரதத்தில் ஏறிக்கொண்டு அம்ராவதியைச் சேர்ந்து தேவத்தச்சனால் பட்டணத்தை நூதனமாய்ச் சிருஷ்டிக்கச் செய்து பிரம்மாவினால் பட்டாபிஷேகஞ் செய்வித்தார். குகன் தேவேந்திரனைப் பார்த்து நிஷ்கண்டகமாய் ஒரு பயமுமில்லாமல் ராஜ்ய பரிபாலனம் செய்யச் சொல்லி விஷ்ணுவாதிகளை அவரவர்களுடைய இருப்பிடத்துக் கனுப்பிவிட்டு, வீரபாகுவால் செலுத்தப்பட்ட ரதத்தில் ஏறி தெய்வயானையோடுகூட கைலாஸஞ்போய்ச் சிறிதுகாலம் அவ்விடத்தில் தன் பெற்றோர்களுடன் இருந்து பிறகு அவர்களுடைய உத்தரவு பெற்றுத்தனது இருப்பிடமாகிய கந்தமாதன பர்வதத்துக்கு வந்து சேர்ந்தார். தேவேந்திரன் ஸகல போகங்களையும் அனுபவித்து இனிது வாழ்ந்து வந்தான்

## முசுகுந்தர் கதை.

சவுனகாதி ரிஷிகள் ஸூதமுனிவரைப் பார்த்து தாங்கள் தெய்வயானை கல்யாணத்துக்கு முசுகுந்த

சக்கரவர்த்தி வந்திருந்ததாகச் சொன்னீர்கள்". அவ ருடைய சரித்திரத்தை தயவு செய்து சொல்லவேண் டும் என்றார்கள். ஸூதமுனிவரும் உடனே ஆனந்த மாய்ச்சொல்ல ஆரம்பித்தார்.

முசுகுந்த சக்கரவர்த்தி ஹரிச்சந்திரனுடைய வமி சத்திற் பிறந்தவர். அவர் வஸிஷ்டருடைய உபதேசம் பெற்று குஹ விரதங்க ளெல்லாவற்றையும் அனுஷ்டித தார். ஷண்முகன் பிரஸன்னமாகி "என்னவரம் வேண் டும்" என்றார். தங்களுடைய வீரபாகு முதலான லக்ஷத் தொன்பது வீரர்களும் எனக்கு சகோதரர்களாய்ப் பிறந்து அவர்களுடைய ஸகாயத்தினால் நான் இந்த ராஜ்யங்களை நிஷ்கண்டகமாய் பரிபாலனம்பண்ணவேண் டும் என்றார். ஷண்முகன் அப்படியே லக்ஷத்தொன்பது வீரர்களையும் கேட்டுக்கொண்டவுடன் அவர்கள் பய ந்து நடுங்கி ஸம்மதிக்காம லிருந்தபடியால் "நீங்களெல் லாரும் மானுஷதேகத்தை யடைந்து இவனுக்குத் தம்பிகளாய்ப் பிறந்து பிறகு கடினமான தவம் செய்து பரிசுத்தர்களாகி என்னை யடையவேண்டும்" என்றார்.

உடனே மானிடதேகத்தை எடுத்து ஷண்முக னுடைய சரணங்களில் விழுந்து தங்களை மன்னிக்கும் படி கேட்டுக்கொண்டு அவருடைய உத்தரவின் பிர காரம் ஸகோதரர்களாய் முசுகுந்தனிடம் வந்து சூழ்ந்து கொண்டார்கள். ஷண்முக பிரானும் அந்தர்த்தியான மானார்.

நாளடைவில் சகோதரர்க ளெல்லோரும் திவ்விய மான அப்ஸர ஸ்திரீகளை மணந்து கொண்டார்கள். வீர

மருகுபுஷ்பகர்ணியைக் கலியாணஞ்செய்து கொண்டான். அவளிடம் அநேககுழந்தைகள் உண்டானார்கள். அவர்களில் சித்திரவல்லியென்னும் பெண்ணை முசுகுந்தனுக்கு விவாகஞ்செய்து வைத்தார். இவனுக்கு அக்னிவர்ணன் என்ற ஒரு பிள்ளை உண்டானான்.

அந்த ஸமயத்தில் தேவேந்திரனை வலாஸுரன் என்ற ஒரு ராக்ஷஸன் எதிர்க்க அவனோடு சண்டை போட முடியாமல் தேவேந்திரன் தூதர்களை அனுப்பி முசுகுந்தனைத் தன் உதவிக்காக வரவழைத்துக் கொண்டார். முசுகுந்தனும் தன் ஸைன்ய பலத்தால் வலாஸுரனுடைய ஸேனைகளை யெல்லாம் ஜெயித்தார். வலாஸுரன் தனியாய் நின்றபோது இந்திரன் வஜ்ராயுதத்தால் அவனை அடித்துக்கொன்றான். அதனாலேயே இந்திரனை வலாரி (வலரிபு) என்று சொல்லுகிறார்கள்.

யுத்தம் முடிந்ததும் மிக்க ஸந்தோஷமடைந்து முசுகுந்த சக்ரவர்த்தியை அழைத்துக்கொண்டு தேவேந்திரன் தன் இருப்பிடம் வந்து சேர்ந்தார். இரண்டு பேர்களும் ஸ்நான முடித்து பூஜா கிருஹத்துக்குள் நுழைந்தார்கள். அங்கேபிரஸன்ன வதனத்தோடுபரமானந்தமான ஒரு ஸோமாஸ்கந்த விக்ரஹத்தைக் கண்டார். உடனே கைலாஸ வாஸியான் பரமசிவனுரை மனதில் தியானித்து ஆனந்தக் கண்ணீர் விட்டார். பரமசிவனும் அவருக்கு முன் பிரஸன்னமாகி "முந்தி நான் மஹா விஷ்ணுவால் பூஜிக்கப்பட்டு இப்பொழுது தேவேந்திரனிடம் இருக்கிறேன். நீ என்னுடைய

பக்தர்களுக்குள் சிரேஷ்டனு யிருக்கிறபடியால் நீ என்னைப் பூஜை செய்யவேண்டும்". என்று பக்கத்திலி- ருந்த இந்திரனுக்குக் கேட்காதபடி சொன்னார். அவ் வார்த்தையைக் கேட்டு முசுகுந்தன் இந்திரனுடைய பூஜையை ஏகாக்கிர சித்தனாய் கவனித்தான். பூஜை முடிந்ததும் போஜன சாலைக்கு இருவரும் போய்ச் சேர்ந்தார்கள். காமதேனுவானது அவ்விடம் வந்து திவ்வியமான பாயஸ பக்ஷ்யாதிகளோடுகூட போஜன மளித்தது. தேவேந்திரன் மறுபடியும் "தங்களுக்கு என்னவேண்டும் தாங்கள் இஷ்டப் பட்டவைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டே போகவேண்டும்" என் று அடிக்கடி சொன்னார். உடனே முசுகுந்தர் தான் பூஜை செய்வதற்காக தேவேந்திரன் பூஜிக்கும்படியான ஸோமாஸ்கந்த மூர்த்தியைக் கொடுக்கச் சொல்லிக் கேட்டார். இதைக் கேட்டதும் தேவேந்திரன் விசார மடைந்தார். ஒன்றும் தோன்றவில்லை "இது என்னு டையதல்ல. முந்தி விஷ்ணு பூஜை பண்ணிக்கொண்டி ருந்தார். வெகுநாள் வரையில் மஹா விஷ்ணுவுக்குப் பிள்ளையே யில்லாமல் சங்கரனைக் குறித்து தவம் செய்தபடியால் அந்தத் தவத்துக்கு மெச்சி சங்கரன் பிரஸன்னமாகி "அப்படியே பிள்ளை யுண்டாகட்டும்" என்று அனுக்கிரகம் பண்ணினார். இதைப் பார்த்து பார் வதிதேவி கோபத்தையடைந்து, திருமால் 'என்னைநீக்கி விட்டு உங்களை மாத்திரம் தவம்செய்து அனுக்கிரஹம் பெற்றபடியால் அப்படிப்பிறக்கும் பிள்ளை தங்களுடை ய நெற்றிக் கண் நெருப்பினாலே அழியவேண்டும்" என்

று விஷ்ணுவுக் கெதிராகவே சபித்து க்ஷணத்தில் சங்கரனோடு கூடமறைந்தருளினன். அதுமுதல்விஷ்ணுவானவர் இந்த ஸோமாஸ்கந்த மூர்த்தியைப் பிரதிஷ்டைபண்ணி வெகுநாள் வரையில் பூஜை செய்து கொண்டு வந்தார். பிறகு ஸ்கந்தனோடும் தேவியோடும் சங்கரன் பிரஸன்னமானார். விஷ்ணுவானவர் ஸாம்பசிவனையும் ஸகந்தனையும் துதி செய்தார். சங்கரனார் ஸந்தோஷித்து ஜாடையாய் பார்வதி முகத்தைப் பார்த்தார். அந்த ஜாடையை விஷ்ணு அறிந்து உமாதேவியைவணங்கி தோத்திரம் செய்து " சங்கரனை மாத்திரம் பூஜை செய்து தங்களை நான் வணங்காமலிருந்ததுண்டு; தாங்கள் அதற்காக என்னை மன்னித்து முன்னமே கொடுத்திருக்கிற சாபத்தினின்றும் விடுவித்து என்னை ரக்ஷிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன் " என்றார். உடனே தேவி மஹா விஷ்ணுவைப் பார்த்து "உன் புத்திரன் தகிக்கப்பட்டாலும் பிறகும் உயிரோடெழுக்கடவன் ; என்னுடைய உத்தரவு தான் பெரிது என்றுரினை." என்று சொல்லி மஹாதேவனோடு கூடமறைந்தருளினார்.

மஹாதேவனுடைய உத்தரவுப் பிரகாரம் மஹாவிஷ்ணுவானவர் மன்மதனை மனதினாலே சிருஷ்டித்தார். தேவகாரியார்த்தமாய் திரிபுராந்தகனான மஹா தேவன் மன்மதனைத் தகித்து பிறகு சந்தோஷமடைந்து மறுபடியும் பிழைக்கும்படி செய்தார்.

அப்பேர்ப்பட்ட இந்த ஸோமாஸ்கந்த மூர்த்தியைப் பூஜை செய்து மார்பில் வைத்துக்கொண்டே திருப்

பாற்கடலில் விஷ்ணுவானவர் யோக நித்திரை செய்யும் பொழுது மூச்சுக்காற்றுப் படுவதினால் பரமசிவனுர் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தார். இந்த மாதிரி ஸமயத்தில் வாக்காளி என்ற அஸுரன் ஒருவன் என்னோடு சண்டை செய்ய வந்தபடியால் நான் பயந்து விஷ்ணுவின் உதவியைத் தேடி அவ்விடம் சென்றேன். விஷ்ணு உடனே எழுந்து என்னைப் பார்த்து 'பயப்படாதே' என்று தைரியப்படுத்தி விட்டு இந்த ஸோமாஸ்கந்த மூர்த்தியை எனக்குக் கொடுத்து விட்டு பூலோகத்தில் சிலாக்கியமான புண்டரீக புரத்தை யடைந்து மஹா தேவனைக்கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அப்படியே நான்கு மாதகாலம் யோக நித்திரா ஸமாதியால் தோத்திரம் செய்து அவருடைய அற்புதமான அனுக்கிரஹம் பெற்று எழுந்து வாக்காளி என்ற அஸுரனைக் கொன்று க்ஷீர ஸாகரத்தையடைந்து என்னை என்னிருப்பிடத்துக்கு அனுப்பிவிட்டு முன்போலவே சயனித்துக்கொண்டார். நானும் அது முதல் இந்த ஸோமாஸ்கந்த மூர்த்தியைப்பூஜை பண்ணிக்கொண்டிருக்கிறேன். இதை மஹாவிஷ்ணுவின் உத்தரவின்றி உனக்கு நான் கொடுக்கமாட்டேன். அப்படி நீ உத்தரவுபெற்றுக்கொண்டுவந்தால் கொடுக்கிறேன், என்றான். உடனே முசுகுந்தன் மஹாவிஷ்ணுவினிடம் போய் உத்தரவு பெற்றுக்கொண்டு வந்து தேவேந்திரனிடம் சொன்னான். தேவேந்திரன் மிகவும் விசாரமுடைந்து கொடுக்க மனமில்லாமல் மயனைக்கூப்பிட்டு வேறு விக்கிரகங்களைச் சிருஷ்டித்து ஆறு தடவைகள் கொடுத்துப் பார்த்தான். இவைக

ளெல்லாம் இந்திரனால் கஷ்டமாய் செய்யப்பட்டவை யென்று முசுகுந்தன் அறிந்து "நீ பூஜை பண்ணும்படியான விக்ரஹத்தையே கொடுக்கவேண்டும்" என்று கேட்டவுடன் தேவேந்திரனும் ஸந்தோஷமாய்க் கொடுத்தான். அந்த விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு வந்து முசுகுந்தன் கமலாலயம் என்று சொல்லப்பட்ட திருவாரூரில் ஸ்தாபித்து இதர ஆறு விக்கிரகங்களையும் அதைச்சுற்றி இருக்கும்படியாய்நாகப் பட்டணம், திருநள்ளாறு, திருக்காராயல், திருக்கோளரியூர், திருவான்மையூர், திருமறைக்காடு என்னும்வேதாரணியம் ஆகிய ஆறு புண்ணிய ஸ்தலங்களிலும்ஸ்தாபித்தார். தேவேந்திரனும் தான் கூட பூஜிக்காமல் ஸோமாஸ்கந்த மூர்த்தியை தானம் பண்ணிவிட்ட படியால் சண்டாளத்துவமடைந்து கமலாலயத்திலேயே பிறந்து வாத்தியங்களை வாசித்துப் பரமனை ஸந்தோஷப்படுத்தி திரும்பி இந்திர பதவியைப் பெற்றான். முசுகுந்தனும் மஹா பூஜையைச் செய்து தன பிள்ளையாகிய அக்னி வர்ணனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துக் கடைசியில் கைலாஸத்தை யடைந்தார். வீரபாகு முதலானவர்களும் அவர்களுடைய பிள்ளைகளை அக்னிவர்ணனோடு கூட விறுத்திவிட்டு தீவிரமான தவம் செய்து மனுஷ்ய தேகத்தை விட்டு தங்களுடைய ஸ்வயமான தேகத்தை யடைந்து ஸ்கந்த கிரிக்குப்போய் குகனுடைய சரணங்களில் விழுந்து அவருடைய அனுக்கிரஹம் பெற்று ஸந்தோஷ மடைந்தார்கள்.

உடனே ஷண்முகன் தானும் ஒரு வேடனைப்போல் வேடர்தரித்து வள்ளியிடம் வந்து "மன்மதனுடைய பாணம் சகிக்க முடியவில்லையே என்னுடைய தாபத்தை நீ தீர்க்கவேண்டும்" என்றார்.

வள்ளி—"மன்மதனுடையபாணம் புஷ்பபாணம். அதுவே உனக்கு சகிக்க முடியவில்லை. கொஞ்ச நேரத்திற்குள் என்னுடைய தகப்பனும் மற்ற வேடர்களும் கூர்மையான பாணங்களோடு வருவார்கள். அந்த பாணங்களை நீ எப்படி சகிக்கப் போகிறாய். தப்ப வேண்டுமானால் இங்கே நில்லாதே ஓடிப்போ" என்றாள். அதே சமயத்தில் நம்பிராஜன் வேடர்களோடும் வாத்திய கோஷங்களோடும் வந்து கொண்டிருந்தான். உடனே ஷண்முகன் வேங்கை மரமாகி நின்றார். வேடன் அவளுக்கு வேண்டிய ஆகாரங்களைக் கொடுத்து விட்டுத்திரும்பும் வேளையில் "இது ஏது மரம்" என்றான். வள்ளியும் "என்னமோ புதிதாயிருக்கிறது" என்றாள். வேடர்களிற் சிலர் "இதை வெட்டி விடுவோம்" என்றார்கள். நம்பிராஜன் உடனே "இதை வெட்டவேண்டாம். ஷண்முகனுடைய கிருபை என்றே நினைத்துக்கொள். இது உனக்கு நிழலைக்கொடுக்கும், பயப்படாதே". என்று சொல்லி விட்டுப்போய் விட்டான். அவர்கள்போன பிறகு ஷண்முகன் திரும்பியும் திவ்விய யௌவனத்தோடு விளங்கினார். திரும்பியும் காமாதுரனும் பாசித்தார். நம்பிராஜன் வேடர்களோடும் வாத்தியங்களோடும் வருகிற ஓசை கேட்டது. உடனே, ஷண்முகன் கிழவனாய் வடிவமெடு

த்து நம்பிராஜன் வந்ததும் அவனுக்கு விபூதி கொடுத்து ஷண்முகன் கிருபை செய்வார், என்றார். நம்பிராஜன் விசாரித்தவுடன் தான் குமரி தீர்த்த மாடுவதற்காக வந்திருப்பதாய்த் தெரிவித்தார். இப்பேர்ப்பட்ட பெரியவர்களுக்குப் பணிவிடைசெய்தால் அவர்களுடைய அனுக்கிரஹத்தால் நம்முடைய கோரிக்கை யனைத்தும் குறையின்றி நடக்கும்" என்று சொல்லி விட்டுப் பழங்கள் முதலான ஆகாரங்களைக் கொடுத்துப்போனான். அவன் போனதும் கிழவனார், பசிக்கிறதே என்றார். வள்ளி தேனையும் தினைமாவையும் கலந்துஉருட்டிக் கொடுத்தாள். (கிழவராகிய) ஷண்முகனும் அதைச்சாப்பிட்டார்; தாகம் உண்டாகிறதே என்றார். பக்கத்தில் கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு சுனைக்கு அழைத்துப்போய் ஜலம் குடிக்கச் செய்தாள்.

கிழவர் ஜலம் குடித்தபிற்கு "தாகந் தீர்ந்தேனல்லாது உன்மோகந் தீரவில்லையே" என்றார். வள்ளியானவள் இதைக்கேட்க சகிக்காமல் தன்னுடைய தினைப்புனத்தை நோக்கிப் புறப்பட்டாள். எதிரே கணபதியானவர்யானை வடிவமாய் நின்றார். யானையைக்கண்டு பயந்தவளாகையால் கிழவரைப் போய் ஆலிங்கனம் செய்து கொண்டாள், இருவரும் ஸந்தோஷமா யிருந்தார்கள். ஷண்முகனும் உடனே ஆறுமுகங்களோடும் பன்னிரு கரங்களோடும் மயில் வாஹனத்தி லாரோஹணித்து குக்குடத் வஜத்தோடும் விளங்கினார். இதைப்பார்த்து வள்ளி மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்தார்.

பின்னர் வள்ளி தினைப்புனத்துக்கு வந்து சேர்ந்தாள். வள்ளியின் தோழி அவளைப் பார்த்து, "இத்தனை நாழிகை எங்கே போயிருந்தாய்" என்றாள்.

வள்ளி—இங்கே குளத்தில்ஸ்நானம் செய்து வந்தேன்" என்றாள்.

தோழி—"உதடு வெளுத்துப்போய் கண்கள் சிவந்து முகத்தில் வேர்வை உண்டாகும்படி இங்கே ஒரு குளம் இருக்கிறதா" என்றாள்.

வள்ளி—'என்மேல் வீணாய்ப் பழி சுமத்தாதே" என்றாள்.

இச்சமயத்தில் தனுஷ்பாணியாய் குறப் பெருமாள் அவ்விடம் வந்து" என்னால் விடப்பட்ட பாணங்களைச் சகிக்க முடியாமல் ஓடிவந்திருக்கிற யானையை நீங்கள் யாராவது பார்த்ததுண்டா" என்றார்.

"தோழியானவள் அவருடைய பேச்சையும் அவருடைய பார்வையையும் அதேசமயத்தில் வள்ளியின் பார்வையையும் கவனித்தாள். இருவர்களுடைய வாஞ்சையையும் அறிந்து கொண்டு தான் ஜாடையாய் புஷ்பம் கொண்டுவருவதற்கு அடுத்த வனத்திற்குப் போவதாகச்சொல்லிப் போய்விட்டாள். இருவரும் ஸந்தோஷமாயிருந்தார்கள். பிறகு தோழியானவள் புஷ்பத்தைக் கொண்டுவந்து கொடுத்து தினைப் புனத்துக்குக் கூட்டிக்கொண்டுபோனாள் வள்ளியானவள் ஸதா ஷண்முகனுடைய ஞாபக மாகவேயிருந்தாள். அறுவடை காலமானபடியால் அரண்மனைக்குக் கூட்டிப்போய் விட்

டார்கள். வள்ளிக்கு மாந்திரீகமாய் பல இடங்களில்
மந்திரித்தார்கள். ஒருநாள் ராத்திரி ஷண்முகன் அந்த
தோழி மூலமாய்த் தெரிவித்து நிசிவேளையில் நம்பிரா
ஜனுடைய மனைவியாகிய மோஹனாவின் பக்கத்தில் படு
த்திருந்த வள்ளியைக் கூட்டிகொண்டு பூஞ்சோலைக்குப்
போய்விட்டார். விடியற் காலம் எழுந்து மோகனா தன்ப
க்கத்தில் படுத்திருந்த மகளைக் காணாமையால் தேடிப்
பார்க்கும்போது வேடர் கூட்டங்களெல்லாம் வனத்தில்
இருவரையும் கண்டுபிடித்து திருடனுடன் சண்டையிட
ஆரம்பித்தார்கள். வள்ளி மிகவும்பயந்து தன்னை ரக்ஷிக்
கும்படி வேண்டினாள். குகன் உடனே கோழியை நினை
த்தார். அது ஒரு இரைச்சல் போட்டவுடன் வேடர்
எல்லோரும பிராணனை யிழந்தனர். இவ்விஷயத்தை
நாரதர் அறிந்து அவ்விடம வந்து ஷண்முகனைப்பார்
த்து அப்படிச் செய்வது நியாயமல்ல என்று சொன்
னார்.

வள்ளியம்மையைப் பார்த்து ஷண்முகன் "நீ எல்
லோரையும் பிழைக்கும்படி செய்" என்றார். வள்ளி
தேவியும் தன் கண்களால் பார்த்தவுடன் எல்லோரும்
பிழைத்தெழுந்தார்கள். ஷண்முகனும் ஆறு முகங்க
ளோடும் பன்னிரண்டு கைகளோடும் மயில் வாஹனத்
தில் ஏறி விளங்கினார். நம்பிராஜன் முதலான வேடர்க
ளும் மிக்க ஸந்தோஷமடைந்து விதிப்ரகாரம் கல்யாண
முடிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவரும்
அப்படியே நாரதரின் உதவியால் விதிப்பிரகாரம் வள்ளி
யைக் கல்யாணம் செய்துகொண்டு அவர்களுக்கு அனுக்
கிரஹம் செய்தார். பார்வதி பரமேசுவரர்களும் கல்

யாண ஸமயத்தில் வந்திருந்து பிறகு அந்தர்த்தியான மானார். ஷண்முகன் திருத்தணிகையைச் சேர்ந்தார்.

(பரமசிவனுக்குக் கைலாயமும், ஷண்முகனுக்கு திருத்தணிகையும் பிரியமான வாஸஸ்தலங்கள்.) ஷண் முகன் கொஞ்சநாள் அங்கிருந்து வள்ளிக்கு திருத்தணி கையின் மகிமையைத் தெரிவித்தார். அவ்விடமிருந்து கந்தமாதனத்துக்குச் சென்றார். தெய்வயானை மிக்க அன்பாய் உபசரித்து மரியாதைகள் செய்தாள். தெய்வயானையும் வள்ளியும் ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்து மிகுந்த பிரியத்துடன் நேசமாய் இருந்தார்கள். ஷண்முகனும் வள்ளி, தெய்வயானை ஆகிய இரண்டு பத்தினிகளுடனும் பிரகாசமாய் விளங் கினார்.

## வள்ளியின் பூர்வசரிதம்.

சிவகுமாரன் கல்யாணம் முடிந்த பிறகு வள்ளியை அழைத்துக்கொண்டு திவ்வியமான விமானத்திலேறி கந்தகிரியில் வந்திறங்கினார். தெய்வயானை உடனே எதிர்கொண்டு வந்து குஹதேவனை நமஸ்கரித்தாள். குஹனும் ஆனந்தமடைந்து கருணைக் கண்பாலித்தார். பிறகு வல்லிதேவியும், தேவயானையை நமஸ்கரித்தாள். இருவரும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து முகமலர்ச்சியுடன் பேசிக்கொண்டார்கள். தெய்வ யானை வள்ளியைப் பார்த்து "நீ வந்தது எனக்கு ரொம்ப சகாயம்" என்றாள். அவ்விருவருடனும் குஹன் சிங் காதனத்திலேறினார் அச்சமயத்தில் தெய்வயானை எழு ந்து அவரைவணங்கி வள்ளியின் பூர்வ விருத்தாந்தம்

களைச் சொல்லும்படிக் கேட்டாள். உடனே குஹனும் சொல்லுவார்.

நீங்கள் இருவரும் முற்பிறப்பில உபேந்திரனுடைய குமாரிகள். என்னை மணஞ்செய்து கொள்வதன் நிமித்தம் கடினமான தவம் செய்தீர்கள். அக்கடுந் தவத்தினல் சந்தோஷமடைந்து உன்னை இந்திரன் பெண்ணுய் பிறக்கும்படியும் விதிப்பிரகாரம் உன்னைக்கல்யாணம் செய்து கொண்டு போவதாயும சொன்னேன். இவள் தன் தேகததை அக்கினியில விட்டு காஞ்சிக்குச் சமீபத்திலுள்ள வள்ளிமலையில் இருந்து எனனிடத்தில் மிக்க பிரேமையுடன தவம செய்தாள். அதன் சமீபத்தில் ஒருவனத்தில், கண்வ முனிசாபத்தினல் மஹாவிஷ்ணு சிவமுனி எனறபெயருடன் தவம் செய்தார். அவ்விடத்தில் இலட்சுமிதேவி பெண்மானுருவை கொண்டு சஞ்சரித்தாள். அதைப்பார்த்தவுடன் முனிவர் மோஹிததார். உடனே மான் கர்ப்பமடைந்து, அவ்விடத்தில் இவளை ஈன்றது. வள்ளிக்கிழங்கு விளையும் படியான இடத்தில் பிறந்தபடியால வள்ளி என்று இவளை உலகத்தார் கூப்பிடுவார்கள். உபேந்திரன் கண்வர்சாபத்தினல் வேடர்குலத்தில் பிறந்தான். வேடர்களுக்கெல்லாம் அரசனுயிருந்தான். இவன் குழந்தை உருவாயிருந்த வள்ளியை வனத்தில கண்டவுடன் தூக்கிக்கொண்டுபோய் தன்னுடைய மனைவியிடம் கொடுத்தான். அப்பேர்ப்பட்டவளை நான் விதிப்பிரகாரம் திருமணஞ்செய்து கொண்டு கொஞ்சநாள் ஸ்ரீபரிபூர்ணம் (அதாவது திருத்தணிகை) என்ற பர்வதத்தின்மேல் வாசமாயிருந்து அவளோடு கூட இவ்விடம் வந்திருக்

கிறேன்" என்றார். தேவயானையும் அதைத்தையும் கேட்டு மிகவும் ஆனந்தமடைந்தாள் "நாங்கள் ஒகெ கேயோ இருந்தோம். அக்கா தங்கைகள் எங்களிருவரையும் சேர்த்து வைத்தீர்கள். தாங்கள் கருணைகரனல்லவா என்றாள்."

---

## தோத்திரம்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன மகனே—ஒரு கை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைககால எபபொழுதும்
நம்பியே கைதொழுவேன யான்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான
சேவலும் மயிலும்போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

அஞ்சு முகநதோனறில் ஆறுமுகந தோனறும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும—நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின் இருகாலுந தோனறும
முருகாவென் றோது வார் முன்.

கலியினிற குமரவேளே கைகண்ட தெய்வமாகப்
பொலிவுற ப்பெரியரெல்லாம போற்றுமாராதனாலே
மெலிவுறு நோயகள் நீங்கும், விரும்பிய பொருள் கைகூடும்
வலிவுறு சூாதடிநத வள்ளலைப் பணிநதோர்க்கெல்லாம.

சுபம் [illegible] சுபம்

---

The Arrow Press, Mount Road, Madras.